விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 14 திங்கட்கிழமை (29.06.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 192

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

# ஆசன ஒதுக்கீடு தொடர்பில் கட்சிகளிடையே இணக்கம்

### கூட்டமைப்பின் பேச்சாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வசிக்கும் கட்சிகளுக்கு இடையிலான ஆசன ஒதுக்கீடு தொடர்பில் பெரும்பாலும் இணக்கம் காணப்பட்டு விட்டதாக கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனீவா அறிக்கை ஓகஸ்டில் கையளிப்பு

(ஜெனீவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையின் இலங்கை குறித்த அறிக்கை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 21-ம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

உத்தியோகபூர்வமாக இந்த ஆவணம் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முன்னாள் இராணுவத் தளபதி சரத பொன்சேகா, முன்னாள் பொருளாதார 23ஆம் பக்கம் பார்க்க....

## மைத்திரி - மகிந்த அணிகள் நேரில் சந்தித்துப் பேச இணக்கம்

(கொழும்பு)

நாடாளுமன்ற தேர்தலை ஒற்றுமையாக எதிர் கொள்வது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மகிந்த ராஜபக்ஷ அணிக்கும், மைததிரிபால சிறிசேன அணிக்கும் இடையிலான பேச்சுக்களின் இறுதி முடிவு ஜூலை மாதம் முதலாம திகதி தெரியவரும என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் இவ்விரு அணிகளும் இன்று திங்கட்கிழமை பேச்சுக்களை நடத்த இணக்கம் காணப்பட்டுள்ளது. இதில் நாடாளுமன்றத் தேர்தல் தொடரபான் இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவற்றின் தேர்தல் பரப்புரைகளை மகிந்த ராஜபக்ஷ தலைமையில் மேற்கொள்வதற்கு மைத்திரிபால சிறிசேன தரப்பு இணக்கம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தேர்தலில் போட்டியிட அனுமதிக்க முடியாது என்று மைத்திரிபால சிறிசேன தரப்பு தெரிவித்துள்ளது.

ஆனால் மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என்று அவரின் தரப்பு வலியுறுத்தி வருகிறது. இந்நிலையில், இது தொடர்பில் இவ்விரு தரப்பும் ஜூலை 23ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவை வெற்றிபெற வைக்க பிரபாகரன் நாட்டில் இல்லை

### ரணில் கிண்டல்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவை தேர்தலில் வெற்றிபெற வைப்பதற்கு இம்முறை நாட்டில் பிரபாகரன் இல்லை என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன.

கூட்டணியில் சிலர் மகிந்தவை பிரதமராக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேவிடம் வலியுறுத்துகின்றார்கள். மீண்டும் மகிந்த ராஜபக்ஷவை 24ஆம் பக்கம் பார்க்க....



## தேர்தலை கண்காணிக்க வருகிறது அமெரிக்கா

(நியூயோர்க்)

நாடாளுமன்றத் தேர்தலைக் கண்காணிக்க முதல்முறையாக அமெரிக்காவில் இருந்து கண்காணிப்பாளர்கள் அழைக்கப்படவுள்ளனர்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை கண்காணிக்க கண்காணிப்பாளர்களை அழைப்பது தொடர்பில் அமெரிக்காவின் தேசிய ஜனநாயக மையம் மற்றும் ஜிம்மி கார்ட்டர் நிறுவனம் ஆகியவற்றுடன் பேச்சு நடத்தப்படலாம் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் இதற்கு முன்னர் நடந்த தேர்தல்களைக் கண்காணிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம், பொதுநலவாயம் மற்றும் இந்தியாவில் இருந்து கண்காணிப்பாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

அதேவேளை, நாடாளுமன்றத் தேர்தலைக் கண்காணிக்க தாம் இம்முறை 50 வெளிநாட்டு கண்காணிப் 23ஆம் பக்கம் பார்க்க....

அன்பு வாசகர்களே!
இன்று முதல்
உங்கள் வலம்புரியில்
ஜோதிட கலாமணி
சிவல்புரிசிங்காரம்
எழுதும் குரு பெயர்ச்சி
பலன்கள் வாசிக்கத்
தவறாதீர்கள்.

## நான்கு மணித்தியாலத்துக்கு ஒரு தற்கொலை யாழ்ப்பாணத்தில்

### பொது வைத்திய நிபுணர் சிவன்சுதன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் ஒவ்வொரு நாளும் 4 மணித்தியாலத்திற்கு ஒருதடவை ஒவ்வொருவர் தற்கொலை அல்லது தற்கொலை முயற்சி மேற்கொண்டு அனுமதிக்கப்படுவதாக யாழ் போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் எஸ்.சிவன்சுதன் தெரிவித்துள்ளார்.

யாழ் போதனா வைத்தியசாலை மருத்துவர் சங்கத்தால் இலங்கையில் அதிகரித்து வரும் போதை வஸ்து பாவனை மற்றும் கடத்தல் தொடர்பில் நேற்றையதினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு சமூகத்தை எல்லா வழிகளிலும் தாக்கி அழிக்க வேண்டும் என்பதற்கு முக்கிய ஆயுதமாக இந்த போதைப் 23ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவின் இறுதி முடிவு புதனன்று வெளியாகும்

(கொழும்பு)

நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான தனது உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை மகிந்த ராஜபக்ஷ ஜூலை மாதம் முதலாம் திகதி அறிவிக்கவுள்ளதாக அவரின் பேச்சாளர் ரொகான் வெலிவிட்ட தெரிவித்துள்ளார்.

இத்தேர்தலில் போட்டியிடுவதா, இல்லையா என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜூலை மாதம் முதலாம் 23ஆம் பக்கம் பார்க்க....



நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தேர்தல் ஆணையர் அழைப்பு

(கொழும்பு)

சகல அரசியல் கட்சிகளின் செயலாளர் களையும் எதிர்வரும் யூலை மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள விசேட கலந்துரையாடலில் . கலந்துகொள்ளுமாறு தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அழைப்பு விடுத்துள்ளார்.

பொதுத் தேர்தலுக்கான அழைப்பு விடுக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வார காலத்துக்குள்.தேர்தலில் போட்டியிடுவதா? இல்லையா? என்பது தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகள், தேர்தல் ஆணையாள ருக்கு அறிவிக்க வேண்டும் என்பது தேர்தல் சட்டமாகும். அதேபோன்று, கட்சிகளின் தற்போதைய சின்னங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதாயின் அதனையும், அந்த ஒரு வார காலத்துக்குள்ளேயே மேற்கொள்ள வேண்டும். இவ்விடயங்கள் தொடர்பிலும் மேலும் சில விடயங்கள் குறித்தும், மேற்படி கலந்துரையாடலின்போது ஆலோசிக்கவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் மேலும் தெரிவித்தது. ஒகஸ்ட் 17-ம் திகதி நடைபெறவுள்ள நாடா ளுமன்ற தேர்தலுக்கான வேட்புமனு தாக் கல் யூலை 6-ம்திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கையெழுத்து வேட்டை



யாழ்ப்பாணத்தில் சிறந்த அரசியல் தலைவர்களை தெரிவு செய்வதற்கான மக்களின் விருப்புக்களை அறியும் கையெழுத்து வேட்டை நேற்றைய தினம் காலை 9 மணி தொடக்கம் நடைபெற்று வருகின்றது

பவ்ரல் அமைப்பும், சிவில் சமூக அமைப்புக்களும் இணைந்து உருவாக்கியுள்ள மார்ச் 12 பிரகடனத்தின் அடிப்படையில் இந்த நிகழ்வு இடம் பெறுகிறது.

மார்ச் 12 இயக்கத்தினால் நடத்தப்படும் இக் கையெழுத்து வேட்டை நாடு முழுவதும் நடைபெற்றுவரும் நிலையில், நேற்றைய தினம் யாழ்.மாவட்டத்தில் நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக வடக்கின் 5 மாவட்டங்களிலும் நடைபெறவுள்ளது.(எ-11)

# நீதிபதி கணேசராஜா லண்டன் செல்லவுள்ளார்

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா பிரித்தானியப் பல்கலைக்கழகம் ஒன்றில் சட்டத் துறையில் கலாநிதி பட்டப் படிப்பை மேற்கொள்வதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்க பல்கலைக்கழகம் ஒன்றின் புலமைப்பரிசில் பெற்று சட்ட முதுமாணிப் பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட இவர், கொழும்பு பல்கலைக்கழகம், கொழும்பு சட்டக்கல்லூரி, பண்டாரநாயக்க சர்வதேச கற்கைநெறி நிலையம் ஆகியவற்றிலும் சட்டமேற்படிப்பை மேற்கொண்டிருந்தார்.

மேலும் இங்கிலாந்து, தாய்லாந்து ஆகிய நாடுகளில் மனித உரிமைகளுக்கான சர்வதேச விருதுகளை சர்வதேச நீதிபதிகள் குழாமிடமிருந்து லண்டன் நொட்டிங்ஹாம் பல்கலைக் கழத்திலும் பெற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# தமிழரசுக் கட்சியின் கிளை வட்டுக்கோட்டையில் திறப்பு

வட்டுக்கோட்டை தொகுதிக்கான இலங்கை தமிழரசு கட்சியின் கிளை அலுவலகம் அத்தியடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் நேற்று உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது

அலுவலகத்தினை இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன் மற்றும் அப்பாத்துரை விநாயகமூர்த்தி , சுமந்திரன் ஆகியோர் நாடாவெட்டி திறந்து வைத்தனர். -

கட்சி அலுவலகத்துடன் உதயவாழ்வு செயற திட்டத்தின் அலுவலகமும் நேற்று திறந்து வைக்கப்பட்டது. உதயவாழ்வு செயற்திட்டத்தின் ஊடாக தையல் பயிற்சிநெறி, உடற் பயிற்சி மற்றும் கணணி வகுப்புகளும் நடத்தப்பட உள்ளன. மாதர் சங்கங்கள் ஊடாக ஏற்கெனவே தெரிவுசெய்யப்பட்ட 40 பேருக்கு தையல் பயிற்சியை பெற்றுக் கொள்வதற் கான அனுமதிகளும் வழங்கிவைக்கப்பட்டன

அத்துடன் இந்நிகழ்வில் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தில் தையல் இயந்திரங்களும், நடக்க முடியா தவர்களுக்கான ஊன்றுகோல்களும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், விநாயகமூர்த்தி, வடமாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம்.வட மாகாண சபை உறுப்பினர்களான கஜதீபன், ஆனோல்ட், சித்தார்த்தன், சிவாஜிலிங்கம் , வலி வடக்கு தவிசாளர் சுகிர்தன், வலி மேற்கு தவிசாளர் திருமதி ஜங்கரன், மதகுருமார்கள் மற்றும் பொது மக்கள், கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# பாடசாலைக்கு பாதுகாப்பு

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை நிலையங்கள் மற்றும் விடைத்தாள் திருத்தும் நிலையங்கள் ஆகியவற்றின் பாதுகாப்பை பலப்படுத்தவுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

உயர்தர பரீட்சை நிலையங்களின் அணமைய பகுதிகளில், அரசியல் பேரணிகள், தேர்தல் பிரசார விநியோகங்கள் மற்றும் துண்டுப்பிரசுர விநியோகம் என்பன இடம் பெற அனுமதிக்கப்படக்கூடாதென அகில விராஜ் காரியவசம் தெரிவித்திருந்தார்.

அதற்கமைய உயர்தர பரீட்சை நிலையங்களுக்கருகே தேர்தல் பிரசார பேரணிகளில் ஈடுபடுபவர்கள் ஒலிபெருக்கிகளை பயன்படுத்துவதால் பரீட்சை எழுதும் மாணவர்கள் பாதிக்கப்படுவர். இதனைக்கருத்திற்கொண்டு ஒவ்வொரு அரசியற்கட்சிகளும் செயற்படவேண்டுமெனவும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார். (எ-11)

# புலமைப்பரிசில் பரீட்சையில் மாற்றமில்லை

ஒகஸ்ட் மாதம் 23-ம் திகதி நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, திட்டமிட்டவாறு அன்றைய தினமே நடைபெறும் என பரீட்சைகள் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் ஒகஸ்ட் 17-ம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும் என நாள் குறிக்கப்பட்டுள்ளது. இதனால், ஒகஸ்ட் மாதம் நடைபெற ஏற்பாடாகியிருந்த கல்விப் பொதுத் தராதர உயரதரப் பரீட்சையின் நேர அட்டவணையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், புலமைப்பரிசில் பரீட்சையை குறித்த திகதியில் நடத்துவதில் எவ்வித பிரச்சினையும் இல்லை என்பதால், அன்றைய தினமே அப்பரீட்சை நடைபெறும் என பரீட்சைகள் ஆணையாளர் அலுவலகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (எ-11)

# மண்டைதீவில் இன்று பொங்கல்

(மண்டைதீவு)

மண்டைதீவுபூம்புகார் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் இன்று இரவு இடம்பெறும்.தொடர்ந்து தீக்குளிப்பு, வழி வெட்டல் ஆகியனவும் நடைபெறும். (நு)


## union assurance — வேலைவாய்ப்பு

Trust in your tomorrow, today.

இலங்கையில் முன்னணி வகிக்கும் கம்பனிகளில் ஒன்றானதும் மற்றும் 27 வருடங்களை பூர்த்தி செய்துள்ள யூனியன் அசூரன்ஸ் கம்பனியின் சுன்னாக பிராந்திய கிளைக்கான பதவி வெற்றிடங்கள்

★ முகவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் (A.D.O)
★ முகவர் அபிவிருத்தி முகாமையாளர் (A.D.M)
★ சிரேஸ்ட முகவர் அபிவிருத்தி முகாமையாளர் (S.A.D.M)

மேற்படி பதவிகளுக்கு:-

★ வரையறுக்கப்படாத ஊதியம்
★ Basic Allowance - 20500-39000 வரை
★ ORC மற்றும் மேலதிக நன்மைகள்
★ மோட்டார் வாகனக்கடன்
★ மடிக்கணனி
★ வீட்டுக்கடன்
★ வெளிநாட்டு சுற்றுலா



மேற்படி பதவிக்கான தகைமைகள்:-

★ சந்தைப்படுத்தல் துறையில் (Marketing) முன் அனுபவம் உள்ளவர்கள்
★ N.G.O நிறுவனங்களில் வேலை செய்தவர்கள்
★ எந்தவொரு காப்புறுதி நிறுவனத்திலும் குறைந்தது ஒரு வருட காலம் அல்லது அதற்கு மேல் வேலை செய்தவர்கள், செய்து கொண்டிருப்பவர்கள் நேர்முக தேர்வுகளுக்குத் தோற்றலாம்.



காலம் :- 01-07-2015 (புதன்கிழமை)
நேரம் :- முற்பகல் 10.00 மணி
இடம் :- யூனியன் அசூரன்ஸ்
இல.160,1/6,K.K.S வீதி,
சுன்னாகம் (சம்பத் வங்கிக்கு மேல்)

(C-1427)

க.தீசன்
அலகு முகாமையாளர்
0773545107



## பகிரங்க வேண்டுகோள்

கரைச்சி பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் காணப்படும் சந்தைகளில் வரி அறவீட்டில் ஈடுபட்ட இருவர் பணமோசடி செய்தமை இனங்காணப்பட்டுள்ளது. எனவே தங்களது பகுதியில் வரிப்பண அறவீடு தொடர்பாகவும், வேறு மோசடிகள் தொடர்பான பிரச்சினைகள் இருப்பின்

தவிசாளர் - 0774843248,
செயலாளர் - 0774676541,
தலைமை அலுவலகம் - 021-2285761

என்ற தொலைபேசி இலக்கங்களிற்கு தொடர்பு கொள்ளவும், அல்லது செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி. என்ற முகவரிக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

(C-1428)

செயலாளர்
கரைச்சி பிரதேச சபை,
கிளிநொச்சி



## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



அன்புடையீர்!

கடந்த 31.05.2015 அன்று சிவபதமடைந்த

### அமரர் பொன்னையா சுந்தரலிங்கம்

எமது குடும்ப ஆணிவேரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை 30-06-2015 செவ்வாய்க்கிழமை காலை 05.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தொண்டைமானாறு கடலில் சேர்க்கப்படும். அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் சபிண்டீகரண நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

(C-1424)

3ம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

இங்ஙனம்
குடும்பத்தினர்

# 31ஆம் நாள் நினைவு தினமும் நன்றி செலுத்தும் வழிபாடும்



## திருமதி இரஞ்சிதம் குட்டித்தம்பி

மலர்வு : 30.01.1956 உதிர்வு : 31.05.2015

இறைபதம் அடைந்த திருமதி இரஞ்சிதம் குட்டித்தம்பி அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இறைவனுக்கு நன்றி செலுத்தும் வழிபாடும் 2015.07.01 புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும். வழிபாட்டிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பிதழாக ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் அன்னாருக்கு வைத்திய சிகிச்சை அளித்த புற்றுநோய் பிரிவு வைத்திய நிபுணர்கள், வைத்திய கலாநிதிகள், தாதிமார்கள், ஊழியர்கள், சுகவீனமுற்று இருந்த போது ஜெபத்தினில் தாங்கிய குருமார்கள், சபை ஊழியர்கள், மரணச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் கூறியோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாதைகள் வெளியிட்டவர்களுக்கும் மற்றும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நல்லடக்க ஆராதனையை நடத்திய குருமார்கள், சபை ஊழியர்கள், ஏனைய வழிகளில் உதவியவர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ம.குட்டித்தம்பி (கணவன்)**

**அன்பழகன் (சகோதரன்), இரஞ்சினி (மைத்துனி)**

(C-1422)

**கிருபை, கரணவாய் கிழக்கு, கரவெட்டி. T.P: 077 773 4698**

## ராசி பலன்

29.06.2015
(ஆனி 14, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
துவாதசி முற்பகல் 9.58 மணிவரை
அனுசம் பின்னிரவு 4.10 மணிவரை
இராகுகாலம் 7.26-8.56 மணிவரை
சுபநேரம் 11.56-1.26 மணிவரை
பிரதோச விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | சனி புதன் செவ் |
| | கிரக நிலை | | குரு சுக் |
| | | | |
| | சந் | சனி | ராகு |

**மேடம்:** இறைவழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**இடபம்:** வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், கேட்ட இடத்தில் உதவிகள் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.

**மிதுனம்:** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும் நாள், வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும் நாள், தொழிலில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும்.

**கடகம்:** மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், எதிர்கால வெற்றிக்கு அடித்தளம் அமைப்பீர்கள், தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், கல்வி நலன் கருதி சில செலவுகள் ஏற்படலாம்.

**சிம்மம்:** தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு, அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**கன்னி:** குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள்.

**துலாம்:** பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**விருச்சிகம்:** குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், விரும்பிய காரியங்கள் விரும்பியபடியே நடந்தேறும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், சந்தித்தவர்களால் சந்தோசம் அதிகரிக்கும்.


**தனுசு:** தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**மகரம்:** பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்:** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், செய்தொழில் மேன்மையுண்டு.

**மீனம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், ஆதாயம் தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

# தொழில் ரகசியம்: பலவீனம் அறிவோம்




வெற்றிக்கான திறனும், வலிமையான செயல்பாடும், குழுவினரை வழி நடத்திச் செல்லும் அணுகுமுறையும் உடையவரே பலமான தலைவராகிறார். இந்தப் பலங்களும், திறமைகளும் மட்டுமே ஒரு தலைவருக்கு போதுமானதா? இல்லை என்கிறார் இந்தப் புத்தகத்தின் ஆசிரியர் "ராபர்ட் புரூஸ் ஷா". உண்மையில், பலங்களுடன சேர்த்து தன்னுடைய பலவீனங்களையும் அடையாளம் கண்டு அவற்றை வென்று காட்டக்கூடியவரே மிகச்சிறந்த தலைவராகிறார்.

**அதீத நம்பிக்கை!?**

பொதுவாக தனது திறமையின் மீதும், செயல்பாட்டின் மீதும் அதிக நம்பிக்கை வைத்து செயல்படக் கூடியவர்கள் தலைவர்கள். நல்ல விஷயம்தானே என்கிறீர்களா? நம்பிக்கை நல்ல விடயம்தான். ஆனால், அதீத நம்பிக்கை நல்ல விடயமா? என்பதை கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்பிக்கைக்கும், தங்களின் ஒரு சில செயல்பாட்டின் மீதான சின்ன சின்ன சந்தேகத்திற்கும் இடையேயான ஒருவித அழுத்தத்துடனே தலைவர்கள் செயல்பட்டு வருவதாக சொல்கிறார் ஆசிரியர். அந்த சந்தேகங்களே பலவீனமாக உருவெடுக்கின்றன. இதிலுள்ள மிகப் பெரிய ஆபத்து என்னவென்றால், தலைவர்களின் அதீத தன்னம்பிக்கை அவர்களின் பலவீனங்களை உணர முடியாமல் செய்துவிடுகின்றது. இது எதிர்மறையான விளைவை ஏற்படுத்தும் ஒரு காரணியாகவே பார்க்கப்படுகின்றது.

**தவறுகளை மதிப்பிடுங்கள்!?**

நமது பலவீனங்களை சரியாக அறிந்துக் கொள்ள சிறந்த வழி, நாம் செய்யும் தவறுகளே! என்கிறார் ஆசிரியர்.குறிப்பாக, வெவ்வேறு மாறுபட்ட சூழ்நிலைகளில் திரும்பத் திரும்ப செய்யப்படும் தவறுகளே உண்மையில் நம்முடைய பலவீனங்களை நமக்கு அடையாளம் காட்டுகின்றன. இந்த தவறுகளின் மீதான தொடர்ச்சியான மதிப்பீட்டின் மூலம் நாம் நம்முடைய பலவீனங்களை அறிந்துகொள்ள முடிகின்றது.

அதை எப்படி அளவீடு செய்வது? முதலில் நம்முடைய தவறுகளில் குறிப்பிடத்தக்கவை எவை என்பதைக் கண்டறிய வேண்டும். அடுத்ததாக அந்த குறிப்பிடத்தக்க தவறுகளுக்கான காரணம் என்ன என்பதைக் கண்டறிய வேண்டும். அடுத்தபடியாக அந்த தவறுகளின் வடிவங்கள் என்ன என்பதை அறிந்துக் கொள்ள வேண்டும். அதாவது, அனைத்து தவறுகளும் பொதுவான கூறுகளைக் கொண்டுள்ளனவா அல்லது தனிப்பட்ட வடிவங்களைக் கொண்டுள்ளனவா என்பதை அறிந்துக் கொள்ள வேண்டும். இறுதியாக இந்தத் தவறுகளின் மீதான மற்றும் தவறுகளைத் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் என்ன என்பதை அறிந்து அவற்றை செயல்படுத்த வேண்டும்.

**பலமும் பலவீனமும்!?**

நம் ஒவ்வொருவருக்கும் அவரவருடைய பலம் மற்றும் பலவீனம் பற்றிய அடிப்படை விழிப்புணர்வு இருக்க வேண்டியது அவசியம். இவற்றை 4 வகைகளாக வகைப் படுத்தி கொடுத்துள்ளார் ஆசிரியர். "முதலாவது நமக்கு தெரிந்த நம்முடைய பலங்கள்". இதில் நம்முடைய சுய நம்பிக்கை, அறிவு மற்றும் ஆற்றல் ஆகியன அடங்கும். "இரண்டாவது நமக்கு தெரிந்த நம்முடைய பலவீனங்கள்". அதாவது நமக்கு தெரிந்து, பல்வேறு மாறுபட்ட சூழ்நிலைகள் மற்றும் காரணங்களால் நம்மால் செய்ய முடியாத செயல்பாடுகள் இதில் அடங்கும்.

"மூன்றாவது நமக்கு தெரியாத நம்முடைய பலங்கள்". இது நம்புவதற்கு கடினமாக இருக்கும் விடயமாக பார்க்கப்படுகின்றது. உதாரணமாக, நமக்கு ஒரு குறிப்பிட்ட செயலை செய்வதற்கான ஆற்றலும், திறமையும் இருந்தும் அதுபற்றிய போதிய விழிப்புணர்வு இல்லாமல் இருப்பது இதில் அடங்கும். "நான்காவது நமக்கு தெரியாத நம்முடைய பலவீனங்கள்". உதாரணமாக, கடினமான சூழ்நிலைகளில் போதிய புரிதலும், சரியான முடிவெடுக்க தெரியாத நிலையிலும் இருப்பது இந்த வகையினைக் குறிக்கின்றது. இந்த 4 வகையான பலம் மற்றும் பலவீனம் பற்றிய தெளிவான செயல்பாட்டை கொண்டவரே மிகச்சிறந்த தலைவராகிறார்.

**நேற்றைய பலம் இன்றைய பலவீனம்!?**

வெற்றிகளைக் குவித்த நேற்றைய பலம், இன்றைய மாறுபட்ட சூழ்நிலையில் பலவீனமாக மாறுகின்றது என்பதே இதன்மூலம் நாம கற்றுக்கொள்ள வேண்டிய பாடம்.

**நம்பிக்கையான ஆலோசனை!?**

நம்பிக்கையான நபர்களிடமிருந்து பெறப்படும் ஆலோசனைகள் மற்றும் கருத்துகள், ஒரு தலைவரின் பலவீனம் மற்றும் தவறுகளைக் கண்டறிந்து அவற்றை மேம்படுத்த உதவுகின்றன என்கிறார் ஆசிரியர். மேலும், யாரால் சிறந்த வகையிலான கருத்துகளையும், ஆலோசனைகளையும் வழங்க முடியுமோ அவர்களிடமிருந்து குறிப்பிட்ட கால இடைவெளியில் ஒரு தலைவரானவர் தொடர்ந்து அவற்றைப் பெறவேண்டும் என்றும் தெரிவிக்கின்றார்.

பெறப்பட்ட ஆலோசனைகளை அப்படியே ஏற்றுக்கொண்டு மாற்றங்களை செய்து முடிப்பது என்பது இயலாத காரியம். எனினும், ஒரு தலைவர் மீதான மற்றவர்களின் பார்வை வெளிப்படுத்தும் கருத்துகளை அறிந்துக்கொள்வதற்கான ஒரு வாய்ப்பாக இதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆக, நண்பர்களையோ அல்லது உயர் அதிகாரிகளையோ இவற்றைப் பெறுவதற்கு அணுகலாம் என்கிறார் ஆசிரியர்.

**உங்கள் குழு!?**

தனது குழுவினரைப் பற்றிய முழுமையான புரிதலைக் கொண்டிருப்பது ஒவ்வொரு தலைவருக்கும் இருக்க வேண்டிய முக்கியமான விஷயமாகவே பார்க்கப்படுகின்றது. ஒரு தலைவரின் பலம் மற்றும் ஆற்றல் போன்றவை அவரின் குழுவினரின் வாயிலாகவே வெளிப்படுகின்றது. குழு உறுப்பினரகளின் செல்வாக்கு மற்றும் அவர்களின் செயல்திறன் போன்றவறறை அறிந்திருப்பது ஒரு தலைவருக்கு அவசியமாகின்றது.

தலைவரின் முடிவுகளுக்கு குழுவினரின் ஒத்துழைப்பு, பிரச்சினைகளின் மீதான விவாதம் மற்றும் சரியான வழிகளில் எடுத்துரைக்கப்படும் விளக்கங்கள் ஆகியவற்றை ஒரு தலைவரானவர் அறிந்துகொண்டு தேவையான தருணங்களில் அவற்றைப் பயன்படுத்திக்கொள்வது அவரின் மதிப்பை மேலும் உயர்த்திக்காட்டும் செயலாகின்றது.

**போட்டியாளர்களை கவனியுங்கள்!?**

நம்முடைய நிறுவனம், நம்முடைய குழு என்று மட்டுமே நின்றுவிடாமல் போட்டியாளர்களின் செயல்பாடுகளை கவனிக்க வேண்டியது அவசியமான ஒன்று என்கிறார் ஆசிரியர். நமக்கும் நம்முடைய பணிக்கும் தேவையான நிறைய விஷயங்களை அவர்களிடமிருந்து அறிந்துக்கொள்ளமுடியும். முதலில் நமது போட்டியாளர்களின பலம் மற்றும் பலவீனம் பற்றி தெரிந்துக்கொள்ளவேண்டியது முக்கியம். இதன்மூலம் அவர்களின் தொடர்ச்சியான செயல்பாடுகளை கணிக்க முடியும் அல்லவா!

பல்வேறு மாறுபட்ட சூழ்நிலைகளில் நம்முடைய போட்டியாளர்கள் எவ்வாறு செயல்படுகின்றார்கள் என்பதை ஆராய்ந்து, அதன் மூலம் அவர்கள் எவ்வாறு நம்மைவிட சிறப்பாகவோ அல்லது மோசமாகவோ தங்களது தொழிலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தெரிந்துக்கொள்ள வேண்டும். இதன்மூலம் நம்முடைய செயல்பாட்டின் மீதான நிறை குறைகளை நம்மால் நிவர்த்தி செய்துக் கொண்டு, சரியான போட்டியினை ஏற்படுத்த முடியும்.

வெற்றிக்கான நம்பிக்கையோடு, பலம் மற்றும் பலவீனம் பற்றிய தெளிவும், சூழ்நிலைகள் சார்ந்த அறிவும், சரியான ஆலோசனைகளும் இருக்கும்போது நம்மால் சிறந்த தலைவராக செயல்பட்டு வெற்றிபெற முடியும்.




# வாகன இறக்குமதியில் கொள்கை இல்லை

இலங்கையில் வாகன இறக்குமதி தொடர்பாக உரிய கொள்கைத் திட்டம் எதுவும் கடைப்பிடிக்கப்படவில்லை என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

வகைதொகை இன்றி வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுவதன் காரணமாக இலங்கை வீதிகளில் வாகனங்கள் தேவைக்கு அதிகமாக உள்ளதாக வாகன இறக்குமதி சங்கத்தின் தலைவர் மகிந்த சரச்சந்திர தெரிவித்துள்ளார்.

இந்த நிலை தொடரும் பட்சத்தில், இலங்கையின் பொருளாதாரம் மற்றும சுற்றுச்சூழல்கள் பாரிய அளவில் ஏற்படும் என அவர் எச்சரித்துள்ளார்.

தற்போது இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் வாகனங்கள், அவர்க ளின உள்நாட்டு தேவைகளை அடுத்து, இலங்கை உட்பட பல அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் தேவையை மையப்படுத்தியே நாடுகளின் சந்தை நிலவரத்தை கவனத்தில் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றது.

வாகனங்களை இறக்குமதி செய்யும்போது, அதிக அளவிலான வருவாய் அர்சாங்கத்திற்கு கிடைப்பதனால், வாகன இறக்குமதியினை கட்டுப்படுத்தும் வகையிலான கொள்கை திட்டம் பிரயோகிக்கப்படுவதில்லை என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

சிறிய நிலப்பரப்பைக் கொண்டுள்ள சிங்கப்பூரில் இறக்குமதி செய்யப் படும் வாகனங்களின்எண்ணிக்கை நியாயமான முறையில்கட்டுப்படுத்தப்படுகின்றது.

இதன் காரணமாக சிங்கப்பூரின் சுற்றாடலுக்கு எந்தவிதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கப்பூரில் வாகன இறக்குமதி கட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும், அங்கு வாழும் மக்களின் போக்குவரத்துக்கு எந்தவிதமான குறைபாடுகள் ஏற்படவில்லை என வாகன இறக்குமதி சங்கத்தின் தலைவர் மகிந்த சரச்சந்திர தெரிவித்துள்ளார்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,035.15 | 7,016.20 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,906.28 | 3,900.59 ⇩ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** | புரள்வு (ரூபா.மில்.) 3,395.209

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** பிசி ஹவுஸ்(0.20),அனிலான ஹோட்டல்(5.90). ஜோ.கீ.ஹோ(W)(21.70),எல்எல்சி ஹைட்ரோ பவர்(8.20),மொரிசன்(X)(300.00).

**சரிவைக் கண்ட பங்குகள்(ரூ.):** நேசன் லங்கா(2.70),சிலோன் லெதர்(W)(0.70). ரீ சிமோல் ஹோல்டர்(34.00),லங்கா வென்சர்ஸ்(41.50),எஸ்எம்பி லீசிங் (1.00)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# பொருளாதார மந்த நிலை மீண்டும் வரலாம்

## ரகுராம் ராஜன் எச்சரிக்கை

1930-ம் ஆண்டு ஏற்பட்ட சர்வதேச பொருளாதார மந்த நிலை மீண்டும் வரலாம் என்று இந்திய ர்சர்வ் வங்கியின் ஆளுநர் ரகுராம ராஜன் எச்சரித்துள்ளார். உலகம் முழுவதும் இருக்கும் மத்திய வங்கிகள், தங்களது விதிமுறைகளை மாற்றிய அமைக்க வேண்டிய தேவை உருவாகி இருக்கிறது.

இல்லையெனில் 1930-ல் ஏற்பட்ட பொருளாதார சரிவின் போது ஏற்பட்ட பிரச்சினைகளை உலகம் சந்திக்க நேரிடும் என்று லண்டன் பொருளாதார பாடசாலையில் நடந்த நிகழ்ச்சியில் பேசுகையில் ராஜன இதைத் தெரிவித்தார். சர்வதேச நாடுகளைச் சேர்ந்த மத்திய வங்கிகள் தாராள நிதிக் கொள்கையை கடைப்பிடிப்பது தவறாக அமையும் என்று எச்சரித் தார். மேலும் அவர் கூறியதாவது,

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விதிமுறைகளில் நாம் மாற்றம் செய்தாக வேண்டும். சர்வதேச அளவில் இதற்கான விவாதங்கள் தொடங்கப்பட வேண் டும் என்று நினைக்கிறேன். இந்த புதிய விதிமுறைகள் எப்படி இருக்க வேண்டும் என்பதை என்னால் இப்போது கணிக்க முடியாது.

சர்வதேச அளவில் விவாதித்து புதிய விதிமுறைகளுக்கான கருத்தொற்றுமை ஏற்பட வேண்டும். இதற்கான ஆராய்ச்சியை நாடுகளின் மைய வங்கிகள் தொடங்கப்பட வேண்டும்.

இருந்தாலும் 1930களில் இருந்த சூழ்நிலை மீண்டும் வருமோ என்ற கவலை உருவாகி இருக்கிறது. அப்போதும் சர்வதேச அளவில் வளர்ச்சியை உயர்த்த முயற்சிகள் எடுக்கப்பட்டன. சர்வதேச அளவில் இப்போதைய பிரச்சினையும் வளர்ச்சியை அதிகரிப்பது பற்றியதாக இருக்கிறது.

இது தொழில்துறை நாடுகள் அல்லது வளர்ந்து வரும் நாடுகளின் பிரச்சினை அல்ல. அந்த பிரச்சினை இப்போது விரிவடைந்து வருகிறது.

இந்தியாவில் வட்டியை குறைக்க வேண்டும் என்று பலர் கருத்து தெரிவித்து வருகிறார்கள். முடிந்த வரை சந்தையில் இருந்து வரும் கருத்துகளை நான் கேட்பதைத் தவிர்க்கிறேன். இந்தியாவை பொறுத்தவரை முதலீடுகளை அதிகரிக்க வேண்டும். நான் அதை பற்றி மட்டுமே கவலைப்படுகிறேன்.

2008-ம் ஆண்டு பொருளாதார மந்தநிலை ஏற்பட்ட பிறகு கடந்த 7 ஆண்டுகளில் ரிசர்வ் வங்கி பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. இப்போது நாம் வளர்ச்சியை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. ஆனால் வளர்ச்சி எங்கிருக்கிறது என்பது தான் தெரியவில்லை என்றார் ராஜன்.


## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 132.08 | 135.27 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 207.16 | 213.65 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 146.82 | 152.10 |
| சுவிஸ் பிராங் | 140.12 | 145.43 |
| கனேடிய டொலர் | 106.31 | 110.36 |
| அவுஸ்திரேலிய டொலர் | 101.01 | 105.33 |
| சிங்கப்பூர் டொலர் | 97.82 | 101.25 |
| ஜப்பான் யென் | 1.06 | 1.10 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.10 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 36.40 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி





புங்குடுதீவு பிட்டியம்பதி ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்மன் ஆலய தேர்த் திருவிழாவில் அம்பாள் தேரில் திருவீதி உலா வருவதையும் அடியவர் ஒருவர் காவடி எடுப்பதையும் படங்களில் காணலாம்.

## மகிந்த தேர்தலில் போட்டியிடுவது உறுதி

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிச்சயமாக போட்டியிடுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச இதனைத் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ போட்டியிடும் கூட்டணியிலேயே தேசிய சுதந்திர முன்னணியும் போட்டியிடும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் போட்டியிடுவது தொடர்பில் அதன் செயலாளர் சுசில் பிரேமஜெயந்தவுடன் பேசி தீர்மானிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## வேலையாட்கள் தேவை

லைடன் புடைவை நிலையத்திற்கு 3 வேலையாட்கள் தேவை. பழக விரும்புவர்களும் விரும்பத்தக்கது. (பெண் பிள்ளைகள்) கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

லைடன் புடைவை நிலையம்,
410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## M.K. தில்லைமோகனின் புதிய வெளியீடு



கடந்த 28 வருடங்களாக சர்வதேச மொழியின் முக்கியத்தை அறிந்து அதன் ஆரம்ப வழிகாட்டலாக சுமார் 50 வகையான புத்தகங்களை தொகுத்து எழுதி வந்த M.K. தில்லைமோகன் அவர்களது புதிய வெளியீடான Lets Learn English Through Politics என்னும் புத்தகம் வெளிவந்துள்ளது.

கிடைக்கும் இடம்- பூபாலசிங்கம் புத்தக சாலை, யாழ்ப்பாணம்.

## டயானா பிளாஸ்டிக் மீள் சுழற்சி

கழிவு பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்
வாளிவேசன்-1Kg-50/=
கதிரை-1Kg-80/=
கான்-1Kg-35/=
தொடர்புகளுக்கு:-0212228680, 0775925088
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எம்முடன் இணையுங்கள்
(336)

## அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோவில் இன்று ஒன்பதாம் திருவிழா



### தோளோடு தோள் கொடுக்க வாராயோ!

இயல் இசை நிறைந்த இணுவையிலே
சித்தர்களுக்கு அருள் புரிந்த குருபரனே
பக்தர்களுக்கு அருள் புரிய வாராயோ!
நொச்சி மரத்தடியில் வீற்றிருக்கும் முருகா
பாரினை பசுமையாக்க வாராயோ!
தோள் கொடுத்து உனை காவும் பக்தர்களுக்கு
தோளோடு தோள் கொடுக்க வாராயோ!
கள்ளமில்லா உள்ளம் கொண்ட அடியவர்
கனவிலே- காட்சி தரும் முருகா!
எம் இல்லங்கள் தோறும்
எழுந்தருளவாராயோ!
பள்ளியறையில் துயில்கொள்ளும்
மணவாளர் வெள்ளி மயில் மீது
துள்ளி வந்து அருள் புரிய வாராயோ!
இணுவை கணேசன்
ஒன்பதாம் திருவிழா உபயகாரர்

(சி-1389)

### வாழும் கலைப் பயிற்சி

வாழும்கலைஅமைப்பினால் இன்று திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு கோண்டாவில் கிழக்கு அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் வாழும் கலைப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் சனிக்கிழமை வரை தினமும் மாலை 5.30 மணிமுதல் 7.30 மணிவரை வாழும் கலைப்பயிற்சி பாகம் I நடைபெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-5)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 61<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BBA/ கணக்காளர்<br>தொ.இ: B/4694 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 20 செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSC/ அரச தொழில்<br>தொ.இ: G/1511 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 14 சூரிசெவ் 3 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L பிரான்ஸ் NOT PR<br>தொ.இ: B/4695 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 18 3/4<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: B.COM/ அரச தொழில்<br>தொ.இ: G/1517 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 39<br>தகைமை/தொழில்: A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/4696 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 70<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/1521 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 24<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: civil engineering/ அரச தொழில்<br>தொ.இ: B/4697 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 31 செவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1522 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )



30 ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்
1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....
யாழ். **கலாலயா** பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- Nail art
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- மெஹந்தி போடுதல்
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,



**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- (B) பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 05-07-2015
ஞாயிறு காலை 9.30 மணி
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 06-07-2015
திங்கள் காலை 9.30 மணி
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-





நீர்வேலி அருள்மிகு செல்லக் கதிர்காமமுருகன் தேவஸ்தானத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேரின் வெள்ளோட்ட விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. வெள்ளோட்டம் விடப்பட்டதைத் தொடர்ந்து கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. இதில் ஆசியுரைகளை ஆலயப் பிரதம குரு நீர்வைமணி சிவஸ்ரீ கு.தியாகராஜக்குருக்களும் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும் வாழ்த்துரைகளை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன். வடக்கு மாகாணசபை உறுப்பினர் த.சித்தார்த்தன் ஆகியோர் ஆற்றினர். தேரினை உருவாக்கிய நீர்வேலி வடக்கைச் சேர்ந்த சிற்பஸ்தபதி கலாபூஷணம் விஸ்வலிங்கம் பொன்னாடை போர்த்தி தங்கமோதிரம் அணிவிக்கப் பெற்றுகௌரவிக்கப்பட்டார். இத்தேர் கலாபூஷ ணம் விஸ்வலிங்கம்ஸ்தபதியின் 14 ஆவதுதேர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை பி.ப 2.15மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட பேராசிரியர் க.தேவராஜா, அவரது பாரியார் திருமதி இலட்சுமிதேவி தேவராஜா ஆகியோர் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்தநயினார் திருக்கோவில் மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை மறுதினம் முதலாம் திகதி புதன்கிழமை மு.ப 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறும். (இ-3)




## நடத்துநர் மீது தாக்குதல்

(கரணவாய்)

பருத்தித்துறை குடவத்தைப் பகுதியில் இருந்து பேருந்தில் ஏறிய நபர் ஒருவர் கொடிகாமம் செல்வதற்கு ஏன் இவ்வளவு காசு என்று கேட்டு பேருந்து நடத்துநரைத் தாக்கியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் சிறுகாயங்களுக்குள்ளான நடத்துநர் யு.சிவசுதன் மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதேவேளை பிரஸ்தாப பயணி மதுபோதையில் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-3-60)

# மாசடைந்த நீரைச் சுத்திகரிக்கக்கூடிய கருவியின் ஆரம்பகட்ட வடிவமைப்பு

## யாழ். மருத்துவபீடத்தில் அறிமுகம்

யாழ். குடாநாட்டில் மாசடைந்த நீரை இலகுவான முறையில் சுத்திகரிக்கும் கருவியின் ஆரம்பகட்ட வடிவமைப்பு யாழ். மருத்துவ பீடத்தில் நேற்று முன்தினம் அறிமுகம் செய்துவைக்கப்பட்டுள்ளது.



இந்த கருவி தொடர்பாக யாழ்.மருத்துவபீட உயிர் இரசாயனவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். பாலகுமாரன் விளக்கமளிக்கையில்.

யாழ்.குடாநாடு முழுவதிலும் நிலத்தடி நீர் மாசடைந்திருப்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். நிலத்தடி நீரில் ஒயில். தாவர விவசாய இரசாயன பதார்த்தம். நைத்திரேட்டுமிகவும் அபாயகரமானதாக காணப்படுகின்றது. அத்துடன் பார உலோகங்களும் சிலபகுதிகளில் இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நீரைத்தான் நாம் அனைவரும் பருகி வருகினறோம். இதில் இருந்து மக்களை பாதுகாத்து ஒரு தீர்வை காண்பது எமது கடமை ஆகும்.

தற்போது முக்கியமாக மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியிருப்பது நிலத்தடிநீரில் ஒயில் கலந்திருப்பது ஆகும். இதிலிருக்கும் மாசுக்களை அகற்றி மக்கள் சுத்தமான நீரை பருகுவதற்கு ஒவ்வொரு வீட்டிலும் மிகக் குறைந்த செலவில் நீரைச் சுத்திகரிக்கும் கருவியை பொருத்துவதற்கு நாம் தீர்மானித்து ஒரு பொறிமுறையை உருவாக்கியுள்ளோம்.

இந்த இலகுவான பொறிமுறையில் முதலாவதாக உயிரியல் மண்சுத்திகரிப்பு (Bio-Sand) அதாவது மூன்று விதமான அளவுடைய கிரவல் மண் அடுக்கப்பட்டிருக்கும் மண்ணில் தங்கியிருக்கும் பக்றீரியாக்கள் அதன் ஊடாக வடிந்து போகும் தண்ணீரில் உள்ள ஐதரோ காற்பன்களை சிதைத்து அழிக்கும்.

இரண்டவதாக உயிர்ப் பூட்டப்பட்ட கரி (Activated Carbon) இதன் ஊடாக வடிந்து போகும் தண்ணீரில் உள்ள மணம். இரசாயன பதார்த்தம். பார உலோகம் மற்றும் மேலதிகமான ஐதரோ காற்பன்கள் முற்று முழுதாக அகற்றப்படும்

மூன்றாவதாக எதிர் அயன உறிஞ்சி பதார்த்தம் (Anion exanger)இது அதன் ஊடாக வடிந்து போகும் தண்ணீரில் உள்ள நைத்திரேட்டை அகற்றி முற்றுமுழுதாக தூய தண்ணீரை வெளியேற்றும்

இந்த மூன்று பிரதான பொறிமுறைகளையும் உள்ளடக்கி இந்த நீர்சுத்திகரிப்பு கருவி உருவாக்கப்பட்டுள்ளது.

இது முதற்கட்டமைப்பு நிலையில் உள்ளது. இதை யாழ். மருத்துவபீட உயிர் இரசாயனவியல்பரிசோதனை கூடத்தில் தகுந்த முறையில் உறுதிப்படுத்தியபின் அனைவருக்கும் கொடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

இதை மக்களுக்கு சேவையாக செய்ய முன்வருபவர்களுக்கும் விரும்புபவர்களுக்கும் இந்த கட்டமைப்பு தொடர்பான விளக்கங்களை வழங்குவதற்கு தயாராக உள்ளோம். அதன் பின்னர் அவர்கள் அதை மக்களுக்கு விநியோகிக்க முடியும் என அவர் தெரிவித்தார்.

இந்த ஆரம்பகட்ட நீர் சுத்திகரிப்பு கருவியை உருவாக்கும் ஆராய்ச்சியில் சமுதாய மருத்துவ பட்டப்படிப்பு பயிலுநர் நெவில் விஜயசேகர. சமுதாய மருத்துவ நிபுணர் முரளி வல்லிபுரநாதன். யாழ்.மருத்துவபீட உயிர் இரசாயனவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.பாலகுமரன் ஆகியோர் இணைந்து இப்பொறிமுறையை உருவாக்கியுள்ளனர்.

இன்றைய அறிமுக நிகழ்வில் சமுதாய மருத்துவ துறை தலைவர் சுரேந்திரகுமார். பொது வைத்திய நிபுணர் கிரிதரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ-

## உலர் உணவு கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண புற்றுநோய் எயிட்ஸ் நோய்த்தடுப்புச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள 150 புற்றுநோயர்களுக்கான உலர் உணவுக் கொடுப்பனவு எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை இலக்கம் 9, வேம்படி வீதி. யாழ்ப்பாணம் எனும் முகவரி யில் வழங்கப்படவுள்ளது. (இ-3)

## குரு பாதுஹா பூஜை

உலக சின்மயா மிஷன் தலைவர் பூஜ்ய குருஜி சுவாமி தேஜோமயானந்தாவின் ஜனன தினத்தை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5.15 மணிக்கு இல. 9.செட்டித்தெரு ஒழுங்கை. நல்லூர் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ்ப்பாண சின்மயா மிஷன் ஆச்சிரமத்தில் குரு பாதுஹா பூஜை பஜனை மற்றும் சத்சங்கம் என்பன வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகளின் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம் (இ-5)

# மீனவர்கள் வீடு நிர்மாணிப்பதற்கு கடன்வசதியை பெற்றுக்கொடுத்தல்

(யாழ்ப்பாணம்)

வீட்டு வசதிகளற்ற கடற்றொழிலாளர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் மற்றும் இலங்கை வங்கியும் இணைந்து வீட்டுக் கடன் திட்டம் ஒன்றை தற்போது நடைமுறைப்படுத்தி வருகிறது.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி முன்னாள் அமைச்சர் மகிந்த அமரவீரவின் வழிகாட்டலுடன் 2015 ஆம் ஆண்டின் இறுதிக்குள் அனைத்து கடற்றொழில் மாவட்டங்களிலும் குறைந்த பட்சம் 150 வீடுகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மீனவர் வீட்டுக் கடன் சம்பந்தமாக கீழ் குறிப்பிடப்படும் தகைமைகளையும் தேவைகளையும் விண்ணப்பதாரிகள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

* காணி ஒன்றின் சொந்தக்காராக இருத்தல். அத்துடன் உறுதி/ அனுமதிப் பத்திரம் இருத்தல் வேண்டும். உரிய வருக்கு காணி சொந்தமில்லாவிடின். கணவர்/ மனைவி அல்லது குடும்பத்தின் அங்கத்தவர் ஒருவர் விண்ணப்பிக்க முடியும்.

*கடன் விண்ணப்பதாரரின் மாதாந்த வருமானம் கடற்றொழில் உதவிப் பணிப்பாளரினால் உறுதி செய்யப்படல் வேண்டும்.

*வீடு நிர்மாணிப்பதற்கு உரிய மதிப்பீடு பிரதேச செயலாளர் அலுவலகத்தில் தொழில்சார் அலுவலர் சிபார்சு செய்தல் வேண்டும்.

*வீட்டின் மதிப்பீட்டு மொதத தொகையில் 25% பங்களித்தல் (கடன் தொகைக்கு சமமாக) கடன் விண்ணப்பதாரர் செலுத்துதல் (உ-ம்: கட்டடப் பொருட்கள் வழங்கும் முறை வழங்குவது கவனிக்கப்படும்)

*புதிய வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்கு/ வீட்டின் ஒரு பகுதி கட்டுதல்/ திருத்தல் நடவடிக்கை கடன் பெற முடியும்.

*ஆகக் கூடிய தொகை ரூபா ஐந்து இலட்சம் (ரூபா 500 000 .00)

*கடன் தொகைக்கான அறவிடப்படும் வட்டி வீதம் 6% ஆகும்.

*மீண்டும் கடன் செலுத்தி முடிக்கும் காலம் 05 வருடங்களாகும். குறித்த கடன் தொகைக்கு கடன் தவணை மாதாந்தம் செலுத்துதல் வேண்டும்.

*உறுதி பாதுகாப்புக்காக வங்கியில் வைத்தல் வேண்டும். அத்துடன் இரு பிணையாளர்கள் கையெழுத்துடன் கடன் விடுவிக்கப்படும்.

மேற்படி தகைமைகளையும் தேவைப்பாடுகளையும் நிறைவு செய்யும் விண்ணப்பதாரிகள் மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்பில் அங்கத்தவர்களாக இருத்தல் வேண்டும்.

மேற்படி கடன் வசதிக்கான விண்ணப்பப்படிவங்களை யாழ். மாவட்ட கடற்றொழில் கிராமிய அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் நா. பொன்னம்பலம் (தொலைபேசி இலக்கம் 077 959 4813) அல்லது யாழ். மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)



இலங்கை வந்திருந்த இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமை முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துரையாடிய போது அப்துல் கலாம் தலைமையில் எழுதப்பட்ட நூல்களில் ஒன்றை அவரிடம் கையளித்த போது...

## நூல் வெளியீடும் நாட்டுக்கூத்தும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்விப்பண்பாட்டு அமைச்சின் கலாசாரத் திணைக்களத்தின் பங்களிப்புடன் பாஷையூர் கவிஞர் கலாபூஷணம் அண்ணாவியார் மு.அருள்பிரகாசத்தின் பண்டாரவன்னியன் காவியம் நூல் வெளியீடும் நாட்டுக்கூத்துகலை விழாவும் இன்று திங்கட்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

பாஷையூர் பங்குத்தந்தை லியோ ஆம்ஸ்ரோங் அடிகளார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

# பொதுத்தேர்தலுக்கு பின் தேர்தல் திருத்தச் சட்டம்

(கொழும்பு)

## ரணில் தெரிவிப்பு

**எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தேர்தல் திருத்தச் சட்டம் ஒன்று முன்வைக்கப்படும் என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

யட்டினுவரவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

விருப்புவாக்குகளை இல்லாமல் செய்வதற்கு யோசனை முன்வைக்கப்பட்டது.

ஜனாதிபதி இதனை முன்வைத்து அனைத்து கட்சிகளும் தங்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும்.

இதன் அடிப்படையில் தேர்தலின் பின்னர் அனைத்து தரப்பினரும் ஏற்றுக் கொள்ளும் வகையிலான தேர்தல் திருத்தச் சட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என்று அவர் தெரிவித்தார். (இ-5)

# ஹெல உறுமயவுக்கு மகிந்த அணி அழைப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பு, ஜாதிக ஹெல உறுமய கட்சிக்கு அழைப்பு விடுத்துள்ளது.

எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பிளவடையாத ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது, மகிந்தவிற்கு ஆதரவான முக்கியஸ்தர் ஒருவரினால் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. முரண்பாடுகளை களைந்து இணைந்து கொள்ளுமாறு கோரப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த அழைப்பினை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பேச்சாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார். தேசப்பற்றை முன்னிலைப்படுத்தி ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட ராஜபக்ஷாக்களை விரட்டியடிக்க இணைந்து செயற்பட்ட கட்சிகள் இணைந்து பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மகிந்த ராஜபக்ஷ தரப்பு தனித்து போட்டியிடுவதா? இல்லையா? என்பது குறித்து இனனமும் தீர்மானிக்கப்படவில்லை என மகிந்தவுக்கு நெருக்கமான தரப்புக்கள் தெரிவிக்கின்றன.(இ-5)




சுவையுடன் ஆரோக்கியம் ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உங்கள் உடல் ஆரோக்கியத்துக்கு தகுந்த ஐஸ்கிறீம் வகைகளை தயாரித்து வழங்கும் எமது நிறுவனம் நயினாதீவில் அன்னை நாகபூஷணியின் திருவிழா காலத்தில் தற்காலிக விற்பனை நிலையத்தை அமைத்துள்ளோம். வனிலா, சொக்லேட், ஸ்ரோபெரி, அப்பிள், பிளாக்கரண்ட, பட்டர்ஸ் கொச், கேசர், பிஸ்தா, சப்ரோன், புளுவெரி, ராஸ்பெரி, பெப்ரிமென்ட், பாதாம், புருட் அன்ட் நட்ஸ் மற்றும் Low sugar ஐஸ்கிறீம் மற்றும் மில்க் சொக் வகைகளை சுவைத்து மகிழ வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

Sylo Ice Cream இல. 442, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## நயினை நாகபூஷணி அம்மனுக்கு இன்று பதின்மூன்றாம் திருவிழா



## நாகபூசணித் தாயே

நம்புவர்களுக்கு நல்லதைச் செய்பவள்
நம் நாகபூஷணித் தாயே...
நம்முடைய உயிராய் கலந்தவள்
நம் நாகபூஷணித் தாயே...
இருளை நீக்கி ஒளியை ஏற்றுபவள்
எம் நயினை நாகபூஷணி...
இன்பத்திலும் துன்பத்திலும் எம்முடன்
எம்மை காப்பவள் எம் தாயே...

ரீ.துவாரகன் 11B
யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்

## அம்மா நாகபூசணித் தாயே...

அகில உலகை ஆளும் அம்பிகையே
ஆனந்தமாய் நயினையிலே குடிகொண்டவளே...
அமுதசுரபியில் அடைக்கலம் கொடுக்கும் தாயே
அமைதியைத் தந்தருள்வாய் தாயே...
அனைத்து இடர்களையும் தீர்க்கும் நாகதேவியே
அன்பானவர்களுக்கு அருள் பாலித்து காத்திடம்மா
அகம்பாவம் ஒழியட்டும் ஓங்கார நாயகியே
ஆசைகளை நிறைவேற்றிடு நாகபூஷணி தாயே

பா.மதனபாரதி
அல்வாய்

## நாகபூஷணி போற்றி

ஊர்வலமாய் உலாவரும் நாக
பூஷணித் தாயே அம்மா
சீர்மலியும் நயினாதீவில்
சிவனின் பாகம் நீங்கி
பாடும் விண்ணும் பணிந்து
போற்றி முத்தியடையவே
மார்நிறை மாலையுடன் கோயில்
கொண்டாய் போற்றி போற்றி

வியாழினி
குப்பிழான்

## சித்திரத்தேர் அழகுபாரீர்

ஐந்து தலை நாகம் அம்மன் குடை பிடிக்க
ஆர்ப்பரித்து எழும் அலைகள் வாழ்த்தொலிக்க
வந்திருக்கும் அடியாரின் அரோஹராவோ
வானைப் பிளந்துபுது இசை வடிவமாக
வெந்திருக்கும் வெண்மணலின் சூடுபோடும்
வேறென்ன புதுமை இனி வேண்டும் அங்கே
செந்தமிழில் தேவாரப் பாடல் பாட
சித்திரத் தேர் அசைந்து வரும் அழகு பாரீர்

அரியாலை பாரதி

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 227

## பொறாமையிலிருந்து விடுதலை!

நீங்கள் உள்நோக்கிப் பார்க்கும் பொழுது உங்களை வெற்றிகொள்ளத் தயாராகிறீர்கள்.

நீங்கள் உள்நோக்கிய பாதையில் இருக்கும் பொழுது என்ன செய்கிறீர்கள் என்பது, உங்களைச் சுற்றியிருக்கும் மக்களுக்கு உணரத்தக்க வகையில் இல்லாமல் இருக்கக் கூடும்.


நிகழ்வதெல்லாம் உள்ளே தான், வெளியே அல்ல என்பது உங்களுக்கு மட்டுமே தெரியும்.

உங்களுக்குள் நிகழும் புரட்சியை நீங்கள் மட்டும்தான் அறிவீர்கள். உங்களுக்குள் அறிவுக் கூர்மை வளர்வதை உங்களால் மட்டுமே சொல்ல முடியும்.

உங்களைச் சுற்றியிருக்கும் மக்களால், உங்கள் அனுபவங்களைப் புரிந்துகொள்ள முடி யும். நான் சொல்கிறேன்... நீங்கள் உள்ளே வளர்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை, ஒரு போதும் யாரையும் நம்ப வைக்க முயற்சி செய்யாதீர்கள்.

உங்களுடைய எண்ண அலைவரிசையுடன் ஒத்துப் போகும், ஆன்மீக நண்பர்களுடன் வேண்டுமானால், உங்கள் அனுபவங் களைப் பகிர்ந்து கொள்ளு ங்கள்.

ஆனால், உள்பயணங்களைப் பற்றி அறியாத மற்றவர்களுடன், உங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முயற்சி செய்தீர்களானால், ஆழ்ந்த துயரத்தைத்தான் அடைவீர்கள்.



உங்களிடம் வெறுமனே அனுபவங்கள் நிகழவிடுங்கள். அவற்றைப் பற்றிக்கொண்டோ அல்லது அவற்றின் பின் ஓடிக்கொண்டே இருக்காதீர்கள்.

அவை உங்களிடம் நீராவியைப் போல வேலை செய்ய அனுமதியுங்கள்; அதனால் நீங்கள் முழுமையாகப் பக்குவமடையலாம்.

நீங்கள் அவற்றைப் பற்றிக் கொண்டிருந்தால், ஒரிடத்திலேயே தேங்கி அனைத்தையும் தவறவிட்டுவிடுவீர்கள்.

இந்த எல்லா அனுபவங்களுமே, உங்களுடைய உள்நோக்கிய பயணத்தில் நீங்கள் நன்றாக இருக்கிறீர்கள் என்பதன் அறிகுறி தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவை நீங்கள் சாலைகளில் காணும் விளம்பரப்பலகைகளை ப்போன்றவை தான்.

நீங்கள் விளம்பரப்பலகைகளைப் பற்றிக்கொண்டு, இலக்கை அடைந்துவிட்டதாகச் சொல்வீர்களா? இல்லை.

அவற்றைப் பற்றிக்கொண்டிருக்காதீர்கள். உங்களுடைய இலக்கை நோக்கி மேலே செல்லுங்கள்.

முழுமையான பொறுப்புணர்வும் மன உறுதியும் வேண்டும்; அது நீங்கள் தயாராகும் பொழுது- சமூகத்தாலாகிய உங்கள் மனதை விட்டுவிட்டு உங்கள் இதயத்துடன் வாழத் தயாராகும் பொழுது- எதுவாரினும், மற்றவர்களை நோக்கி விரல் களைச் சுட்டுவதை நிறுத்தி விட்டு உங்களை நோக்கியே சுட்டிக் கொள்ளத் தயாராகும் பொழுது, மனம் என்பது சமூகத்தாலானது.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி



# கருவாச்சி காவியம்

வைரமுத்து-174

...இது முதல் அடியிற் கண்ட வீட்டை தாங்களே சுதந்திரமாய் ஆண்டனுபவித்துக் கொள்வீர்களாகவும்.

தலையாரி படிச்சு முடிச்சதும் ஒண்ணும் பேசல ஒருத்தரும்.

தரையோட சரிஞ்ச உரலக் கட்டிப் புடிச்சுத் தம்பாயமில்லாமக் கெடந்தவள ஓடி வந்து தூக்குறாக கனகமும் பவளமும்.

நாளைக்கே காலி பண்ணுங்கன்னு நாங்க சொல்லல. கெடு கேட்டாக் குடுக்கச் சொல்லிக் கிரயத்தாரர் உத்தரவு.

பத்திரத்த வாங்கி உத்து உத்துப் பாத்து உண்மைதானான்னு சோதிச்சாக ஊர்ப் பெருசுக.

அது அழகுசிங்கம் கையெழுத்துதான்னு உறுதி செஞ்சான் கூடப்படிச்ச ஒருத்தன்.

வீட்ட விட்டு ஓடிப் போயிக் கல்யாணம் முடிச்ச பய வீட்டையும் வித்துப்புட்டானேப்பா.

கடைசிக் காலத்துல ஆத்தாளுக்குக் கஞ்சி ஊத்தலேன்னாலும் நெஞ்சுல ஏறி மிதிக்காம இருந்திருக்கலாமில்ல.

அதெல்லாம் காலி பண்ண முடியாது. வாங்குனவனையும் வித்தவனையும் வரச் சொல்லுங்கப்பா.

பத்துருவாப் பத்திரத்துல பதிஞ்சதுக்கப்பறம் விடமாட்டேன் விட்டன்னா விடுமா சட்டம்.

சிதறிக்கிடந்த ஊரு சேந்து குமிஞ்சு போச்சு கருவாச்சி வீட்டு வாசலல.

முட்டி மோதி நிக்க- டங்கு டங்குடங்குன்னு எட்டுவச்சுக் கூட்டத்த வெலக்கி வாரா திம்சு.

அதுவரைக்கும் மொசப் புடிக்கிற நர்க்கநாது மாதிரி வெடச்சு நின்ற வாலாந்தூர்த் தலையாரி அவளக் கண்டதும் தண்ணிக்கு அலையிற நாய் நாக்கு மாதிரி தொங்கிப் போனான்.



கருவாச்சி வீட்ட விட்டு வெளியேறப்படாதுன்னு ஒரு கூட்டமும், வேற வழியில்லப்பா வெளியேறித்தான் ஆகணும்ன்னு ஒரு கூட்டமும் யப்பா! வாலாந்தூர்த் தலையாரி... எந்த ஊர்க்காரன் எழுதி வாங்கறது எங்கக்கா வீட்ட? எம் மகன் வாங்குன கடன நான் அடைச்சுடுறேன். ஒங்க சோலமலத்தேவங்கிட்டச் சொல்லி எம்பேருக்கு எழுதிக் குடுக்கச் சொல்லு. காலம்போற கடைசி வரைக்கும் என் வீட்லயே இருந்துட்டுப் 'போறா எங்க அக்கா.

கருவாச்சிய ஒரு கீழ்ப் பார்வ பாத்து உதடுகடிச்சு உசுப்பேத்துறா திம்சு.

கொழுப்பெடுத்து நிக்கிறவளக் குறுகுறுன்னு பாத்தா கருவாச்சி. நீ குடியிருக்கிற வீடே ஒனக்கு நான் போட்ட மடிப்பிச்சைதானடி கண்ணுல வந்து சொல்லுது திம்சு திமிரு. சுடுகாட்ல போயிக் குடியிருப்பாளேதவிர நீ போட்ட பிச்சையில எச்சிப் பொழப்புப் பொழைக்க மாட்டாடி கருவாச்சி. அவ நெனைக்கிறது வரிவரியா ஓடுது அவ கண்ணு முழியில.

கொடத்துல தண்ணி சொமந்து வந்த கொண்ணவாயன் என்னமோ ஏதோன்னு பதறிக் கூட்டத்த வெலக்கி வீட்டுக்குள்ள வந்தான். எந்திரிச்சா கருவாச்சி. புடுங்குனா கொண்ணவாயன் கொண்டு வந்த கொடத்த.

(தொடரும்)

# சிறந்ததொரு தலைமைக்கான மாற்றத்தை தற்போது தமிழ் மக்கள் விரும்புகின்றனர்

## தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

**தமிழ் மக்கள் தன்னாட்சி, சுய கௌரவம் ஆகியவற்றை எதிர்காலத்தில் பெற்றுக்கொள்வதற்கு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அயராது உழைக்கும். இதற்கான மக்கள் ஆதரவு எமது பக்கம் கூடுதலாக இருப்பதாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலர் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் கிளிநொச்சி மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் கூறியதாவது,

தமிழ் மக்களுக்கென தாய் கட்சியாக காங்கிரஸ் கட்சியே ஆரம்பிக்கப்பட்டது. கால வட்டத்தில் சில மாற்றங்கள் ஏற்பட்டாலும் தமிழ் மக்களின் நலன் கருதி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற பெயரில் தற்போது இக் கட்சி இயங்கி வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போதுதான் இந்த அலுவலகம் திறக்கப்பட்டுள்ள போதிலும் இம்மாவட்ட மக்களின் நலன் கருதி தொடர்ச்சியாக பல வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

சுயாட்சி அடிப்படையிலேயே தொடர்ந்தும் இக்கட்சியின் செயற்பாடுள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் நல்லதொரு தலைமைக்கான மாற்றத்தை தற்போது தமிழ் மக்கள் விரும்புவதாகவும் அதற்கேற்ற வகையில் கட்சியின் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதை மக்கள் அங்கீகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

போராட்ட காலப் பகுதியில் தமது இன்னுயிர்களை மண்ணுக்காக ஈர்ந்தவர்களை நாம் மறந்து விட்டு செயற்பட முடியாது என்பதையும் அவரால் இங்கு வலியுறுத்தி கூறப்பட்டது.

எதிர்காலத்திலும் தமிழ்மக்கள் தன்னாட்சி, சுய கௌரவம் ஆகியவற்றை பெற்றுக் கொள்வதற்கு இக்கட்சி அயராது உழைக்கும்.

இதற்கான மக்கள் ஆதரவு எமது பக்கம் கூடுதலாக இருப்பதாகவும் இது வரவேற்கத் தக்க ஒரு மாற்றமாகும்.

இந்தக் கட்சியின் செயற்பாடுகள் தொடர்பாக ஏனைய மாவட்டங்களில் இருந்து வந்த அமைப்பாளர்களும் கட்சியின் தேசிய அமைப்பாளரான சட்டத்தரணி மணிவண்ணன் ஆகியோர் மக்களுக்கு கருத்துரைகளை வழங்கினர்.

இந்நிகழ்வில் அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் தொகுதி அமைப்பாளர்கள் கலந்து கொண்டதுடன் பெருமளவிலான பொதுமக்களும் பங்கேற்றிருந்தனர். (2-254)

## தொழிற்பயிற்சி கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பழைய கச்சேரி வளா கத்தில் அமைந்துள்ள இலங்கை தொழிற்பயிற்சி நிலையத்தில் (VTA) தேசிய தகைமைக்குரிய தொழிற் பயிற்சிகளுக்கான புதிய பிரிவுகள் எதிர்வரும் ஜூலைமாதம் ஆரம்பி க்கவுள்ளதாக கிளிநொச்சி இல ங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, நிலையப் பொறுப்பதிகாரி உ.தினேஸ் குமார் தெரிவித்துள்ளார்.




தொழிற்பயிற்சிகளுக்கான புதிய கற்கை நெறிகளாக தகவல் தொடர் பாடல் தொழில் நுட்பம் (ICT) கணனி வன்பொருள் திருத்துநர், அழகுக் கலை மற்றும் சிகை அலங்காரம், தையல் அலுமினியம் பொருத்துநர் ஆகியவைக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

மேற்படி கற்கைநெறிகளைத் தொடர விரும்பும் விண்ணப்பதா ரிகள் விண்ணப்பப் படிவங்களை நேரடியாக வருகைதந்து கிளிநொச்சி பழைய கச்சேரி வளாகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

அல்லது நிலைய பொறுப் பாளர் உ.தினேஸ் குமார், 0212285687, 0776684302 எனும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டும் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் என அவர் குறிப்பிட் டுள்ளார். (2)



ஆனையிறவு தட்டுவன்கொட்டி கண்ணகை அம்பாள் ஆலயத்தில் அண்மையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதன்போது கண்ணகை அம்பாள் உள்வீதி உலாவரும் காட்சி இடம்பெற்றதைப் படத்தில் காணலாம்.

## மக்களுக்கான நிரந்தர தொழில் வாய்ப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்

### முன்னாள் எம்.பி.சந்திரகுமார் தெரிவிப்பு

தமிழ் மக்களிடம் சிறந்த பட்டறிவு உண்டு. கடந்த கால சூழல் அதனை ஏற்படுத்தியுள்ளது. எனவே அதிலிருந்து எதிர்கால அரசியல் தீர்மானங்களையும் மேற்கொள்ள வேண்டும் என முன்னாள் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கிருஸ்ணபுரம் கிராமத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நகழ்வில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டம் தற்போது தனித்துவமாக மிக குறுகிய காலத்தில் வளர்ச்சி கண்டுள்ளது. மீள்குடியேற்றத்திற்கு பின்னர் நிதியீட்டங்களை பெற்று பணிகளை முன்னெடுத்ததன் பயனே இதுவாகும்.

இந்த பணிகள் தொடர்ந்தும் சில ஆண்டுகளுக்கு மேற்கொள்ளும் போதே கிளிநொச்சியை நிறைவான வளர்ச்சியடைந்த மாவட்டமாக மாற்ற முடியும். அதற்காக தங்களை அர்ப்பணித்து உழைக்கின்றவர்களுக்கு மக்கள் தங்களுடைய ஆதரவினை வழங்க வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தின் உட்கட்டுமானப் பணிகளில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் தற்போது ஒரு கட்டத்தை எட்டியுள்ள நிலையில் மக்களுக்கான நிரந்தர வருமானத்தை பெறும் வகையில் அவர்களுக்கான நிரந்தர தொழில் வாய்ப்பு உள்ளிட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அது மிக முக்கியமாக காணப்படுகிறது. எனவே அதனை நோக்கிய முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மக்களை இதயசுத்தியுடன் நேசிக்கின்ற மக்களுக்காக அர்ப்பணிப்புடன் உழைக்கின்ற பாகுபாடுகளும் பாரபட்சங்களும் காட்டாத மக்கள் பிரதிநிதிகளே மக்களுக்கு தேவை.

எனவே அவ்வாறானவர்களை தங்களின பெறுமதிமிக்க வாக்குகள் மூலம் தெரிவு செய்ய வேண்டும். ஒவ்வொரு நபரும் தனது வாக்கினை தனது மேம்பாட்டுக்கான முதலீடாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கு முன் மக்கள் அரசியல் ரீதியாக விழிப்புணர்வு பெறுவது அவசியமாகிறது என்றார். (2)

## கௌரவிப்பு விழாவும் பொதுக்கூட்டமும்

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்ட அரச ஓய் வூதியர் நலன்புரி சங்கத்தின் வருடா ந்த பொதுக் கூட்டமும் சிரேஷ்ட உறுப் பினர்கள் கௌரவிப்பு விழாவும் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு முல்லை மாவட்ட அரச செயலக பழைய கட்டட மாநாட்டு மண்டபத்தில் இச்சங்கத்தின் தலை வர் மு.குகதாசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந் தினராக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக முல்லை த்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.ஏ.மோகனராஸ், மாவட்ட செயலக பிரதம கணக்காளர் இயேசு றெஜினோல், கணக்காளர் எம்.செல்வரெட்ணம் ஆகியோருடன் மாவட் டத்தின் பிரதேச செயலாளர்கள் உட் பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். அன்றையதினம் சிரேஷ்ட உறுப்பினர்க ளுக்கு பொன்னாடை போர்த்தி நினைவு பரிசில்களும் வழங்கப்படவுள்ளது. அத்துடன் இவ்வாண் டுக்கான புதிய நிர்வாகத்தெரிவும் நடைபெறும். (2-302)



# சிறுவர் அரங்கம்

1177



# தூக்கம் இல்லாத தூக்கம்

காட்டில் சில நாட்களாக ஒரு விடயம் பரபரப்பாக இருந்தது. சிங்கராஜாவுக்கு சரியாக தூக்கம் வருவதில்லை. தூக்கம் வராத சிங்கம், தன் சிடுசிடுப்பை அமைச்சர் யானையிடம் காட்டியது. யானைக்கு அது பெரிய தலைவலியாக இருந்தது.

பலமுறை யோசித்து இறுதியில் அனைத்து விலங்குகளையும் அழைத்து, "ராஜாவை உறங்கவைத்தால் பரிசு கிடைக்கும" என்றது.

"சிங்கராஜாவை நான் உறங்க வைக்கிறேன்" என்று முன்வந்தது காட்டெருமை. அதோடு, சில விலங்குகளும் சேர்ந்து, சிங்கராஜாவின் குகைக்குள் சென்றன.

"ராஜா, இந்தப் பாலைக் குடியுங்கள். தூக்கம் கண்ணைச் சுழற்றிக்கொண்டு வரும்!" என்றபடி, ஒரு குவளை நிறைய சூடான பாலைக் கொடுத்தது காட்டெருமை.

சிங்கமும் குடித்தது. எந்தப் பலனும் இல்லை. சிங்கத்துக்குக் கொஞ்சமும் தூக்கம் வரவில்லை.

அடுத்த நாள் குரங்கு, "சிங்கராஜா, இந்தத் தைலத்தை உடலில நன்றாகத் தேய்த்து, வெந்நீரில் குளியுங்கள். நன்றாகத் தூக்கம் வரும்" என்று புட்டி நிறையத் தைலத்தைக் கொடுத்தது.

அந்தத் தைலத்தை சிங்கத்தின் உடலில் நன்றாகத் தேய்த்துவிட்டது யானை. சுகமான குளியல் போட்டுவிட்டு, கட்டிலில் படுத்தது சிங்கம். உடலுக்குப் புத்துணர்ச்சி வந்ததுபோல் இருந்ததே தவிர, உறக்கம் வரவில்லை.

அடுத்த நாள், மயில் தன் தோகையால் மிருதுவான விசிறி ஒன்றைச் செய்து சிங்கத்திடம் கொடுத்து, "ராஜா, இதை விசிறிக் கொள்ளுங்கள். நன்றாகத் தூக்கம் வரும" என்றது. தோகையால் விசிறிப் பார்த்தது சிங்கம். அதுவும் பலனளிக்கவில்லை.

ஒவ்வொரு விலங்கும் ஒரு மருத்துவத்தைச் சொல்லிப் பார்த்தன. எதுவும் பலிக்கவில்லை. "உங்கள் ஒருவராலும் என் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை. இனி, வைத்தியம் என்று என் முன்னே வந்தால், அடித்தே கொன்றுவிடுவேன்" என்று கோபத்தோடு கர்ஜித்துவிட்டுக் குகைக்குள் சென்று படுத்துவிட்டது சிங்கம்.

வெளியூர் சென்றிருந்த நரி, அன்றுதான் திரும்பியது. "நான ராஜாவின் பிரச்சினையைத் தீர்க்கிறேன்" என்றது.

நேராக சிங்கத்தின் குகைக்குச் சென்றது. "நீ எதற்காக வந்தாய்?" என்று கர்ஜித்தது சிங்கம்.

"ராஜா, தங்கள் பிரச்சினையைத் தீர்க்கவே வந்திருக்கிறேன்" என்று பணிவாகச் சொன்னது நரி.

"நீ சொல்லும் வைத்தியமும் வேலை செய்யவில்லை என்றால், என் கையால்தான் உனக்கு மரணம். நினைவில் வைத்துக்கொள்" என்றது சிங்கம்.

"ராஜா, என் தாத்தா ஒருவர், அருகில் உள்ள மலையில் வசிக்கிறார். அவர் சிறந்த மருத்துவர். எந்த நோயையும் குணமாக்குவார். அவரிடம் அழைத்துச் செல்கிறேன். ஆனால், நீங்கள் தனியாக வர வேண்டும்" என்றது நரி.

"எப்படியோ தூக்கம் வந்தால் போதும்" என்று நினைத்த சிங்கம், சம்மதித்தது.

மறுநாள் காலையில், சிங்கமும் நரியும் நடந்தே மலைமீது ஏறின. சிங்கம் மிகவும் சிரமப்பட்டது. நரியோ, ஏற்கனவே பழக்கப்பட்டதால், எளிதாக ஏறிச் சென்றது. ஒரு வழியாக இரண்டும் மலை உச்சியை அடைந்தன.

அங்கே ஒரு மரத்தடிக்குச் சென்ற நரி, திடீரென்று "ராஜா, கோபித்துக் கொள்ளாதீர்கள். இன்று என் தாத்தா அயலூருக்குச் செல்லும் நாள் என்பதை மறந்துவிட்டேன். என்னை மன்னிக்க வேண்டும். நாம் நாளை வந்து மருந்து வாங்கலாமா?" என்றது.


சிங்கத்துக்குக் கடுமையான கோபம். நரியைத் திட்டித் தீர்த்தது. "உனக்கு நாளை இருக்கிறது விசேஷம்" என்றபடி, மலையிலிருந்து இறங்கியது சிங்கம். நரி அமைதியாகப் பின்தொடர்ந்தது.

மறுநாள் பொழுது புலர்ந்தபோது, சிங்கராஜாவைத் தேடி நரி வந்தது. அது சிங்கத்திடம், "ராஜா, இரவு தூங்கி இருப்பீர்களே" என்றது.

அதைக் கேட்ட சிங்கம், "ஆமாம்! நேற்று இரவு என்னை அறியாமலேயே நன்றாக உறங்கினேன். காலையில்தான் விழிப்பு வந்தது. அது எப்படி?" என்று கேட்டது.

"ராஜாவே, எனக்கு தாத்தா யாரும் இல்லை. நான் தங்களிடம் பொய் சொல்லித்தான் அழைத்துப்போனேன். நீங்கள் ராஜாவாக இருப்பதால், உடல் களைக்க எந்த வேலையும் செய்வது இல்லை. சாப்பிட்டுவிட்டு சும்மா உட்கார்ந்து இருந்தால், இரவில் எப்படித் தூக்கம் வரும்? பகலில் நன்றாக உழைத்தால், தானாக உறக்கம் வரும். அதுதான் நான் செய்த மருத்துவம்" என்று பணிவோடு சொன்னது நரி.

"நரியாரே, என் சோம்பலுக்கு மருத்துவம் சொன்ன உனக்கு நன்றி. இனி எல்லோரையும்போல நானும் உழைப்பேன்" என்ற சிங்கம், நரிக்குப் பரிசு கொடுத்து வாழ்த்தியது.



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

06.2015 29

- 1534 - பிரின்ஸ் எட்வேர்ட் தீவு சாக்கார்ட்டியே என்ற ஐரோப்பியரால் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1613 - லண்டனில் உள்ள குளோப் நாடகமாளிகை தீயில் எரிந்து அழிந்தது.
- 1786 - அலெக்சாண்டர் மாக்டொனெல் மற்றும் 500 கத்தோலிக்கர்கள் ஸ்கொட்லாந்தில் இருந்து சென்று ஒண்டாரியோவின் கிளென்கரி என்ற ஊரில் குடியேறினர்.
- 1814 - மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த ஆறு மதப் பரப்புனர்கள் இலங்கையின் காலி நகரை வந்தடைந்தனர்.
- 1850 - வன்குவார் தீவில் நிலக்கரி கண்டுபிடிக்கப்பட்டது.
- 1880 - பிரான்ஸ் டெஹீட்டி தீவைக் கைப்பற்றியது.
- 1888 - ஜோர்ஜ் எடுவார்ட் கவ்ராட் என்பவர் ஆண்டெலின் எகிப்தில் இஸ்ரேல் என்ற ஆக்கத்தை கிராமபோன் உருளை ஒன்றில் பதிவு செய்தார்.
- 1895 - சாரின் ரஷ்ய அரசின் படைக்குக் கட்டாய ஆளெடுக்கும் நடவடிக்கையைக் கண்டித்து டுகோபார் தமது ஆயுதங்களை எரித்தனர்.
- 1914 - கிரிகோரி ரஸ்புட்டீன் சைபீரியா நகரில் உள்ள அவரது வீட்டில் இடம்பெற்ற கொலை முயற்சி ஒன்றில் தப்பினார்.
- 1925 - கலிபோர்னியாவில் 6.3 நிலநடுக்கம் ஏற்பட்டதில் சாண்டா பார்பரா என்ற இடம் முற்றாக அழிந்தது.
- 1976 - சீசெல்சு ஐக்கிய இராச்சியத்தில் இருந்து விடுதலை அடைந்தது.
- 1995 - அட்லாண்டிஸ் விண்ணோடம் ரஷ்யாவின் மீர் விண்வெளி நிலையத்துடன் முதற்தடவையாக இணைந்தது.
- 2007 - ஆப்பிள் நிறுவனம் தனது முதலாவது கைப்பேசி ஐ-போனை வெளியிட்டது.

**பிறப்புகள்**

- 1945 - சந்திரிகா குமாரதுங்க, இலங்கையின் நான்காவது ஜனாதிபதி
- 1925 - ஜார்ஜியோ நபோலிடானோ, 11 ஆவது இத்தாலிய அரசுத்தலைவர்

**இறப்புகள்**

- 2009 - வ. ஐ. சுப்பிரமணியம், மொழியியல் அறிஞர் (பி. 1926)

# பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு அமைய கண்டாவளை பிர.செயலகம் அமைக்கப்படும்

## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகம் அமைப்பதற்கான நிதி கிடைக்கப்பெற்றுள்ளது. இச்செயலகம் அமைக்கப்படவுள்ள இடத்தெரிவு தொடர்பில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டமானது நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்றது.

இவ் விடயம் தொடர்பில் தெரியவருவதாவது,

கண்டாவளை பிரதேச செயலகமானது 5 மில்லியன் ரூபா செலவில் கடந்த 2006 ஆம் ஆண்டில் பெரியகுளம் பகுதியில் அமைக்கப்பட்டு அதன் செயற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

ஆனால் இவ்விடத்தில் இருந்து பிரதேச செயலகத்தை புளியம்பொக்கணை சந்திக்கு நகர்த்த வேண்டுமென ஒரு பகுதியினரும் தற்போது இயங்கும் இடத்திலேயே தொடர்ந்து இயங்க வேண்டுமென வேறு ஒரு பகுதிமக்களும் வேறு சிலர் பரந்தன் நகரப்பகுதியில் இப்பிரதேச செயலகம் அமைக்கப்பட வேண்டுமெனவும் பொதுமக்களால் இதன்போது கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இதனாலேயே மேற்படி ஆலோசனைக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது.

இவ்வாலோசனைக் கூட்டம் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்,

கண்டாவளை பிரதேச செயலகம் அமைப்பதற்கு கிடைக்கப்பெற்றுள்ள நிதி திரும்பவிடாது சிறந்ததொரு கட்டத்தினை அமைக்க வேண்டியுள்ளது.

கண்டாவளை பிரதேச செயலகத்தின் சேவைகளை பொதுமக்களே பெறுகின்றனர்.

எனவே பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு அமையவே பிரதேச செயலகம் அமைக்கப்படும்.

இறுதிமுடிவு எதுவும் எட்டப்பாத நிலையில் எதிர்வரும் ஜூலை மாதம் 3 ஆம் திகதிக்கு முன்பாக கண்டாவளை பிரதேச செயலகம் அமைக்கப்படும் இடம் தொடர்பில் பொது மக்களின்கருத்தை பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து பொது முடிவினை எடுத்து பிரதேச செயலரிடம் அல்லது அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிக்குமாறு முடிவெடுக்கப்பட்டது என்றார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சத்தியசீலன், கண்டாவளை பிரதேச செயலர் ந.முகுந்தன், கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் அடங்கும் கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (2-277)




## மாற்றுவலுவுள்ளோருக்கு நிரந்தர வருமான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்



எங்கள் சமூகத்தில் உள்ள மாற்றுவலுவுள்ளோருக்கு நாங்கள் செய்ய வேண்டியது முதலில் அவர்களுக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த 26 ஆம் திகதி ஊற்றுப்புலம் மாற்றுவலுவுள்ளோர் கிராமியஅமைப்பின் முதலாம் ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்துகொண்டுஉரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்குஅவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊற்றுப்புலம் கிராமத்தின் மாற்றுவலுவுள்ளோர் தொடர்பில் நாங்கள் ஆரம்பம் தொட்டு அதிக அக்கறையோடு செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றோம். மாற்றுவலுவுள்ளோர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படல் வேண்டும். அதன் மூலம் நிரந்தர வருமானம் பெறும் வகையில் திட்டங்கள் நடைமுறைப்படுத்த அவசியமாகிறது.

மாகாண சபை நிதிஒதுக்கீட்டில் இருந்து ஒரு இலட்சம் ரூபாவினைஊற்றுப்புலம் மாற்றுவலுவுள்ளோர் கிராமிய அமைப்புக்கு ஒதுக்கீடுசெய்துதருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் வேலைவாய்ப்புகளில் மாற்றுவலுவுள்ளோர்கள். மற்றும் முன்னாள் போராளிகளுக்கு மூன்றுவீத ஒதுக்கீடு என்ற தீர்மானம் வடக்குமாகாணசபையில் கொண்டுவரப்பட இருக்கிறது. என்னைப் பொறுத்தவரை இந்த மூன்றுவீதம் என்பது போதுமானது அல்ல.கடந்த காலயுத்தம் எங்கள் சமூகத்தில் அதிகளவானவர்களை மாற்றுவலுவுள்ளோர்களாக மாற்றியுள்ளது. எனவே பத்துவீதம் ஒதுக்கீடுசெய்வதே பொருத்தமானதாகஅமையும் எனவும் தெரிவித்தார். (2)

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் இணைந்து போட்டியிட பலர் ஆர்வம்

### வவுனியா மாவட்ட அமைப்பாளர் தெரிவிப்பு

ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் வன்னித் தேர்தல் தொகுதியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியில் இணைந்து போட்டியிட பலர் ஆர்வம் கொண்டு விண்ணப்பித்துள்ளதாக அக் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் சி.கோபாலகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று வவுனியா, குருமன்காடு பகுதியில் உள்ள மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்ற மக்களுடனான சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தல் தமிழ் மக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல். தமிழ் மக்களின் அடையாளங்கள் திட்டமிட்ட ரீதியில் கூட்டமைப்பு போன்ற தமிழ் தலைமைகளின் துணையுடன் அழிக்கப்பட்டு வருகின்றது.

சிங்கள அரசாங்கத்தின் பேச்சாளர்கள் போல் கூட்டமைப்பின் சில மக்கள் பிரதிநிதிகள் செயற்படுகின்றனர்.

சர்வதேச ரீதியில் தமிழர் நலனுக்கு மாறாக பரப்புரை செய்து சர்வதேச அரசியலைக் கூட அரசாங்கத்திற்கு சாதகமாக மாற்ற முனைகிறார்கள்.

இதனால் இவ்வாறான துரோகத்தனமான சக்திகளை வெளியேற்றி, தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றை முன்னிறுத்தி அதற்காக உழைக்க வேண்டிய தேவை தமிழ்மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதுவே எதிர்காலத்தில் எமது இனத்தின் இருப்பை தீர்மானிக்கும்.

இந் நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் ஏற்பட்ட அதிருப்தி காரணமாகவும், அதன் செயற்பாடுகள் காரணமாகவும் மக்கள் அக்கட்சிக்கு வழங்கிய ஆதரவை தற்போது வழங்க மறுத்து வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக அக் கட்சியுடன் இணைந்து செயற்பட்ட அக்கட்சியின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் எமது கட்சியில் இணைந்து போட்டியிட ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

குறிப்பாக வன்னித் தேர்தல் தொகுதியில் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட இரு தினங்களுக்குள் 16 பேர் எமது கட்சியில் இணைந்து போட்டியிட விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர்.

இது தொடர்பில் கட்சியின் செயற்குழு பரிசீலித்து வருகிறது எனவும் தெரிவித்தார். (2-250)

# கருங்கல் அகழ்வை தடுத்து நிறுத்த வேண்டும்

## ரவிகரனிடம் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முறிகண்டி கொக்காவிலில் முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட குடியேற்ற முயற்சியையும் தட்டயமலை, வாவெட்டி மலைகளில் நடைபெறும் கருங்கல் அகழ்வையும் நிறுத்த வேண்டும் என வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரனிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த மக்கள் சந்திப்பின் போதே இவ்வாறான கோரிக்கைகள் அடங்கிய மனுவொன்று ரவிகரனிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கடந்த 16 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரனினால் மக்கள் குறைகேள் சந்திப்பொன்று நடத்தப்பட்டது.

மேற்படி சந்திப்பில் கலந்துகொண்ட கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் என்பன தமது பிரதேசத்தில் காணப்படும் குறைகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

முறிகண்டிப்பகுதியில் எக்காலத்திலும் வசித்திராத 200 குடும்பங்களை குடியமர்த்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதை தெரிவித்திருந்த மக்கள் அவற்றை தடுத்து நிறுத்துவது தொடர்பான வடமாகாணசபை முதலமைச்சருக்கான கோரிக்கை மனுவொன்றை வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரனிடம் கையளித்தனர்.

மேலும் ஒட்டுசுட்டான் வாவெட்டி தட்டயமலைகளில் தொடரும் கருங்கல் அகழ்வால் தமது வளங்கள் அபகரிக்கப்படுவதை குறிப்பிட்ட மக்கள் இவ்வாறு வெடிவைத்து இரண்டு மலைகளையும் தகர்ப்பதால் அப்பகுதியில் நில அதிர்வுகள் அந்நேரங்களில் ஏற்படுவதாகவும் அம்மலைகளை அண்மித்த இடங்களில் உள்ள வீடுகள் வெடிப்புக்குள்ளாகுவதாகவும் குறிப்பிட்டு அவை தொடர்பான கோரிக்கை மனுவொன்றையும் கையளித்தனர்.

இது தவிர கிராமத்தின் அத்தியாவசிய தேவைகள் தொடர்பாக பலரும் தமது கருத்துக்களையும் குறைகளையும் முன்வைத்தனர்.

அதன் பின்னர் அவற்றுக்கு பதிலளிக்கும் வகையில் கருத்துத்தெரிவித்த ரவிகரன்,


திருமுறிகண்டிப்பகுதியில் திட்டமிடப்பட்டதாக குறித்த இடத்தில் எதுவித முன் தொடர்பையும் கொண்டிராத 200 குடும்பங்களை குடியமர்த்தும் முயற்சி தொடர்பான கோரிக்கை மனுவை வடக்கு மாகாணசபை முதலமைச்சரிடம் கையளிப்பதாக தெரிவித்தார்.

மேலும் வாவெட்டி மலை மற்றும் தட்டமலைகளில் நடைபெறும் கருங் கல் அகழ்வு தொடர்பாக விவசாய நீர்ப்பாசன அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்வதாகவும் குறிப்பிட்டார்.

போரின் பின்னரான காலப்பகுதியில் ஒவ்வொரு பிரதேசத்திலும் தேவைகள் அதிகாகவே உள்ளன. பொருளாதாரக்கட்டமைப்பை பலப்படுத்தி சமூகக்கட்டமைப்புகளை பலப்படுத்தி படிப்படியாக தமிழ் மக்களின் தேவைகளையும் குறைகளையும் களைவதற்கான அபிவிருத்திப்பணிகளை மெல்ல மெல்ல முன்னெடுப்பதே எம் நோக்கமாகிறது. ஒவ்வொரு பிரதேசத்திலும் மக்கள் குறைகள் இவ்வாறான தொடர் மக்கள் குறைகேள் சந்திப்புகள் மூலம் களையப்படும் என்றும் தெரிவித்தார். (2)

# அரசியல் குத்துக்கரணம் போடும் கூத்தாடிகள் ஒழித்துக்கட்டப்பட வேண்டும்







பல்வேறு அரசாங்கங்களாலும் காலத்திற்குக்காலம் பயன்படுத்தப்பட்டு வந்த அனைத்துவிதமான ஆட்சி முறைகளைப் பார்க்கிலும் ஜனநாயக ஆட்சி முறையே மிகவும் மோசமான முறையாகும் என்பதே பாசிசத்திற்கெதிரான உலகப்போரில் ஜனநாயகப் படைகளுக்கு வெற்றிகரமாக தலைமைதாங்கிய இங்கிலாந்தின் யுத்த அமைச்சராகிய சேர் வின்ஸ்ரன் சேர்ச்சில் போரினை அடுத்துவந்த இங்கிலாந்துப் பொதுத் தேர்தலில் தோல்வியைத் தழுவியபோது உதிர்த்த முதல் கருத்தாக இருந்தது. அதனைத் தொடர்ந்து பிரித்தானிய மக்களுக்கு என்னைஉதைத்துவெளியே விரட்டுவதற்கான உரிமை உண்டு என்பதே அந்த ஜனநாயக வாதியின் அடுத்தவார்த்தையாக இருந்தது.

அந்தவிதமான ஜனநாயகமே ஏனைய அனைத்து ஜனநாயக ஆட்சி முறைகளான முழு ஆட்சி அதிகாரம்கொண்ட முடியாட்சி மற்றும் அடிப்படை தேசிய வாதத்துடன் கண்மூடித்தனமான நாட்டுப்பற்று, ஆட்சி நடைமுறை, பாசிசம், கம்யூனிசம், இராணுவக் குழு ஆட்சிமுறை மற்றும் ஜனநாயக மக்கள் குழு ஆட்சி என்ற பெயரிலான குண்டர் படை ஆட்சி முறை போன்ற சர்வாதிகார ஆட்சிகளிலும் சிறந்தது என்பது அவை. சொற்ப காலத்திலேயே மக்களால் தூக்கியெறியப்பட்டதிலிருந்து சிறந்த விதமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்பதே நடைமுறை உண்மையாகும். இதுவே பேச்சுச் சுதந்திரத்திற்கான உரிமை! தீர்மானிப்பதற்கான மக்களின் ஜனநாயக உரிமை! மக்களது தீர்ப்பினை ஏற்றுக்கொள்வதற்கான உரிமை! இதுவே உண்மையான ஜனநாயகம்!! இதற்குப் பல எடுத்துக்காட்டுக்கள் 20 ஆம் நூற்றாண்டில் உள்ளது.

இலங்கை ஒப்பீட்டளவில் வயதில் குறைந்த தனது ஜனநாயக முறையை இடையிலேயே குழப்பிய இரண்டு உள்நாட்டுக் கிளர்ச்சிகளுக்கும் முப்பது வருடங்கள் நீடித்த பயங்கரவாதப்போர் ஒன்றிற்குப்பின்பு புதிய வடிவத்திலான ஓர் ஜனநாயக நல்லாட்சிக்கான தேடலிலேயே இப்போது ஈடுபட்டுள்ளது. கேள்விக்கிடமே இல்லாதவகையில் சமகால இலங்கை வரலாற்றில் மிகவும் கூடுதல் நேர்மையான ஓர் ஜனநாயக வாதியாக இருக்கும் மைத்திரிபால சிறிசேன ஜனநாயக நல்லாட்சிக்கான ஒரு கட்டமைப்பை உருவாக்கும் பொருட்டு மிகவும் கடினமான முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

அண்மைக்காலங்களில் வேறெந்தவொரு அரசியல் தலைவரும் செய்யவிரும்பாத விடயத்தை இவர் ஒருவரே துணிச்சலாக மேற்கொண்டிருந்தார். அதாவது திகைக்கவைக்கும் விதமான தேர்தல் வெற்றிக்குப்பின்னரும் இன்னுமொரு தடவை தேர்தல் போட்டியொன்றில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று பிரகடனப்படுத்தியது மட்டுமல்லாது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையினூடாக இயல்பாகவே தனக்கு உரித்தாகியிருந்த நிறைவேற்று அதிகாரங்கள் பலவற்றையும் கூட அதிகம் வெட்டிக்குறைத்துக் கொண்டவராகவுமிருக்கிறார்.

ஜனாதிபதி சிறிசேன ஜனநாயக ஆட்சி நல்லாட்சி என்ற தனது கருத்துக்கமைவான ஆட்சி முறையினை மீளமைத்துக்கொள்வதற்கான தனது முயற்சியின் போதும் பாரிய ஒவ்வொத விடயங்களுக்கு முகங்கொடுத்து வருகிறார்.

பாராளுமன்ற ஜனநாயக முறைமைக்கு அர்ப்பணிப்புடன் கூடிய கடப்பாட்டினையும் கொண்ட ஓர் அரசியல்வாதி என்ற மட்டில் மக்கள் பிரதிநிதிகள் என அழைக்கப்படுபவர்களும் தற்போதைய பரிதாபகரமான அரசியல் ஒழுங்கிற்குப் பெரிதும் காரணமாயிருந்தவர்களுமான அவர்களூடாகவே இயங்க வேண்டியவராகவுமிருந்தார்.

தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான முயற்சிகளின்போது தம்மை மக்கள் சேவையாளர் என உரிமையுடன் பேசிக்கொண்ட அவர்கள் பணத்துடன் அதிகாரத்தையும் தேடிக்கொண்டதுடன் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் என்ற ஒரே நன்மையான இராணுவத்தின் பொருட்டு அந்தஸ்தையும் பெற்றுக் கொண்ட நினைப்பில் மேற்கொண்டும் தம்மை மக்கள் சேவையாளர்களாக தற்போது கருதவில்லை. மக்கள் சேவைக்கான அதிகாரம் என்பது தனது சொந்தத் தேவைகளுக்கான உரிமை ஒன்றே என்பது போன்ற தனிப்பட்ட கொள்கை காரணமாக ஏற்கனவே இருக்கும் ஆட்சி முறையே தொடரவேண்டும் என்று விரும்புகிறவர்களாகவேயிருக்கின்றனர்.

அனைத்துத் தடைக்கற்களையும் தாண்டி விட்டவரான ஜனாதிபதி சிறிசேன இப்படிப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கான தேர்தல் முறைமையை மாற்றுவதற்கான 20 ஆவது திருத்தச்சட்டம் என்ற இறுதிக்கட்டத்திற்கே இப்போது வந்துள்ளார்.

பாராளுமன்றுக்கான பிரதிநிதியொருவர் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர் அல்லது கட்சியின் எந்த விதக் கடும்போக்குக் குழுவைச் சார்ந்தவர் என அடையாளங்கண்டு கொள்வது மிகவும் கடினமானது என்ற அளவிற்கு பாராளுமன்ற ஒழுங்குமுறைகள் நடைமுறைகளெல்லாம் இன்று சீரற்று மிகவும் குழம்பிப்போனவையாகவே இருக்கின்றன. அதாவது வணக்கத்திற்குரிய மதகுருவாகிய மாதுலுவாவே சோபிததேரர் கூட இப்படிப்பட்டவர்களை தாவிக்குதிக்கும் தவளைகளுக்கு ஒப்பிட்டுக் கூறுமளவிற்கு நிலைமை உள்ளது. மிகுந்த அவதானத்துடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படும் அரசியல் அவதானிகளும் இவ்விதமானவர்கள் எந்தப் பக்கச் சார்பினர் என்று சொல்வதே மிகவும் கடினமானது என்ற காரணத்தால் தேரர் கூறுவது மிகப் பொருத்தமானதே.

**அரசியல் குத்துக்கரணம் போடும் கூத்தாடிகள் ஒழித்துக்கட்டப்பட வேண்டும் எனும் தலைப்பில் சண்டே லீடரில் வெளியாகிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது.**

அறுபதுகளிலிருந்தே இவ்வித கட்சித்தாவல்கள் வகைதொகையற்ற அளவில் இருந்தாலும் கூட அவை அரிதாகவேதான இடம்பெற்றிருந்தன. அறுபதுகளுக்குப் பின்னர் குறிப்பிடத்தக்க அடுத்த கட்சித்தாவல்கள் சந்திரிகா குமாரதுங்கவினது ஜனாதிபதி பதவிக்காலத்திலேயே இடம்பெற்றிருந்தன. ஆனாலும் ஒரு அரசியல் கட்சியின் அத்தாட்சி அளிக்கப்பட்ட அனுமதியுடன் தெரிந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிராளிக்கட்சியொன்றுக்கு மாறலாம் என்ற உச்சநீதிமன்ற அனுமதிக் கட்டளையைத் தொடர்ந்தே தீவிரமான கட்சித்தாவல் என்றதோர் தொற்றுநோயாக அது மாறிற்று.

இவ்விதமாக சில கட்சிகள் முனைப்புடன் கூடிய தனித்துவமானதும் முழுமையானதுமான வெவ்வேறு அரசியல் க்ட்சிகளாக துருவமயப்படும் (Polarized) விதத்தில் புதிதான ஒரு காலகட்டம் உருவாகியதுடன் அவற்றின் அரசியல் விசுவாசமும் கூட காலைச் செய்தித்தாள்களிலேதான் வெளிப்படும் புதினமாயிற்று. இவ்விதமான சந்தர்ப்பங்களில் அரசியல் ஸ்திரத்தன்மையுங்கூட அற்றுப்போய் முடியாத ஒன்றாகிற்று.

விரும்புகிற நேரத்தில் விரும்புவதுபோல் மரத்திற்கு மரம் குரங்காகவும் நிலத்திற்கும் நீருக்குமாக தவளை போலும் அரசியல்வாதிகள் போடும் பித்தலாட்டப் பாய்ச்சல்களான கட்சித்தாவல்கள் என்ற புதுவிதமான வினோதப்போக்கு நிறுத்திக்கொள்ளப்பட்டேயாகவேண்டும். தேர்தல் முறைகளில் சீர்திருத்தம் மேற்கொள்வதன்மூலம் மாத்திரம் இதனை நிறுத்தமுடியாது.

இவ்விதமான கட்சித்தாவல் எனும் பழிச்செயல்களுக்கு காரணம் தேர்தலில் போட்டியிடுவதற்கான அபேட்சகர்களை நியமிப்பதற்கும் பொறுப்பான கட்சிகளின் தலைமைத்துவங்களே ஆகும். தேர்தல்களில்போட்டியிடுவதற்கு தெரிந்து கொள்ளப்படும் அபேட்சகர்களது பாராளுமன்ற உறுப்புரிமை அந்தஸ்துக்கான தகுதி-தகைமை போன்றவற்றை நோக்கும் போது விரக்தி ஊட்டுவதாகவே இருக்கிறது.

தேர்தல்களில் போட்டியிடுவதற்கான அபேட்சகர்களை தெரிந்து கொள்வதற்கு கட்சித்தலைவர்கள் கவனத்திற்கொள்ளவேண்டிய பொதுவான தகைமைகள் உண்டு. அவற்றுள் முதலில் தலைவருக்கும் கட்சிக்குமான விசுவாசம், இனப்பற்று, ஓரளவு பண அந்தஸ்து போன்றவற்றுடன் இறுதியாக நேர்மையும் நிலைபேறான தன்மையுமே முன்னுரிமை அளிக்கப்படவேண்டிய சிலவாகும். முடிந்தவரையில் நீண்டகால கட்சி உறுப்பினர் என்ற சாதாரண அந்தஸ்துள்ளவர் என்ற பின்னணித்தகைமை கருத்திற் கொள்ளப்படுவது சீர்திருத்தத்திற்குரிய புதுமையான விடயமாகவும் பார்க்கப்படலாம். ஆனாலும் அரசியல் கட்சிகளிடையே இவ்விடயம் தற்போது கவனிக்கப்படுவதில்லை.

கட்சிகளுக்குள் உள்ளார்ந்தவிதமாகக் கடைப்பிடிக்கப்படவேண்டிய ஜனநாயக விழுமியங்களை வருகின்ற அடுத்த தேர்தலுக்கு முன் அறிமுகப்படுத்துவது பற்றி கருத்திற் கொள்வதென்பது இப்போது காலம் பிந்திய விடயமாயிற்று. அடுத்த பாராளுமன்ற நடவடிக்கைகளின்போது இதுபற்றி கருத்திற்கொள்ளப்பட வேண்டுமென்றாலும் இதுபோன்ற விடயங்கள் கட்சிகளுக்குள்ளேயே தமக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களை பங்குபோடுவதன்மூலம் அவற்றைக் குறைத்துவிடுமென்ற ரீதியில் சிந்திக்கும்கட்சித்தலைவர்களது மனோநிலை இதனை அனுமதிக்குமென்பது பெரிதும் சந்தேகத்திற்கிடமானதேயாகும்.

அடிப்படை ஜனநாயக ஒழுங்குமுறையொன்றை நிலையாக ஏற்படுத்திக்கொள்வதற்கு பெருமளவிலான அரசியல் சீர்திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது. ஆனாலும் அரசியல் குத்துக் கரணம் போட்டு கட்சிதாவும் குரங்குப்பாய்ச்சல்-தவளைப்பாய் ச்சல் பேர்வழிகளை இல்லாதொழிப்பதற்கான வழிமுறையொன் றின் உடனடித்தேவைக்கான அழைப்பே விடுக்கப்பட்டிருந்தது.

இப்படியான கட்சித்தாவல் பேர்வழிகள் தமது கட்சியுடனும் தேர்தல் தொகுதியுடனும் தாம் மேற்கொண்ட சபதங்களை, வாக்குறுதிகளை மறந்து அமைச்சுமட்ட பதவி-சலுகைகளுக்காகவும் தம்மைத் தெரிந்தெடுத்த சொந்த மக்கள் மீது அதிகார மமதையில் சண்டித்தன சவாரி விடுவதற்கான அரசியல் அதிகாரத்தைப் பெறும் பொருட்டுமே தமது கட்சித்தாவல்களை மேற்கொள்பவர்களாக இருக்கின்றனர்.

**தமிழில்:-யோகர்**

# மகிந்தவுக்கு வேட்புரிமை இல்லை

## சந்திரிகா தெரிவிப்பு



(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் வேட்புரிமை வழங்கப்படமாட்டாதென முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

கம்பஹா பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு எவ்வித திறனும் இல்லை.

எனவே சுதந்திரக் கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் எவ்வித அச்சுறுத்தல்களும் ஏற்படாது.

இவ்வாறான நிலைமையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு சுதந்தர்க்கட்சியில்வேட்புரிமை வழங்காமல் இருப்பதில் ஜனாதிபதி உறுதியாக உள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

இருப்பினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி உட்பட குழுவினருக்கு வேட்புரிமை வழங்குவதற்கு இதுவரையில் தீர்மானித்துள்ளதாக அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறான நிலைமையில் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (இ-5)

# சின்னம் தொடர்பில் மாற்றங்கள் இருப்பின் கட்சிகள் முன்கூட்டியே அறிவிக்க வேண்டும்

## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

கட்சிகளின்சின்னம்தொடர்பில் ஏதேனும் மாற்றங்கள் செய்ய வேண்டியிருந்தால் அது குறித்து கட்சிகள் முன் கூட்டியே அறிவிக்க வேண்டுமென தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில்போட்டியிடும் அரசியல்கட்சிகள் வேறு சின்னமொன்றை தெரிவு செய்ய வேண்டுமெனத் தீர்மானித்தால் அது குறித்து அறிவிக்க வேண்டும்.

எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னதாக அறிவிக்க தேர்தல் திணைக்களத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும்.ஏதேனும் ஓர் கட்சி கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கி போட்டியிடுகின்றது என்றாலும் அது குறித்து அறிவிக்க வேண்டுமென தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.நாடாளுமன்றத் தேர்தல் குறித்து தெளிவுபடுத்தும் நோக்கில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-5)

# மைத்திரி- மகிந்த இணைவார்கள்

## பசில் நம்பிக்கை



(கொழும்பு)

இம்முறை பொதுத் தேர்தலின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவடையாத வகையில் வேட்பு மனு தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கட்சி பிளவடைவதனை தடுப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் இணைந்து மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக அவர் தெரிவித்துள்ளார் என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் இரு தரப்பிலும் சில உறுப்பினர்களுக்கும் கட்சியில் வேட்புரிமை வழங்குவது குறித்து இரு தரப்பிலும் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வருகின்றது.

எப்படியிருப்பினும் சிக்கல் ஏற்படாத வகையில் அதற்கு தீர்வு காணமுடியும் என நான் நம்புகின்றேன்.

நான் இம்முறை பொது தேர்தலில் போட்டியிடவில்லை, தேசியப் பட்டியல் ஊடாகவும் வரப்போவதில்லை.

இதேவேளை விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பிலவுக்கு கூட்டணியில் வேட்புரிமை வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# சுதந்திரக் கட்சி பிளவடையாத வகையில் வேட்புமனு தயாரிக்க ஜனாதிபதி அறிவுரை

எதிர்வரும் பொதுத் தேர்தலல் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை ஒருபோதும் பிளவுபடுத்த இடமளிக்கப்போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவதானம் செலுத்தியுள்ளார்.

எந்த ஒரு முறையிலும்கட்சி பிளவடையாத வகையில் வேட்புமனு தயாரிக்குமாறு கட்சியின் பொது செயலாளர் அநுர பிரியதர்ஷன யாப்பாவுக்கு ஜனாதிபதிக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

இதேவேளை, இம்முறை பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று மைத்திரி - மகிந்த அரசாங்கம் ஒன்றை உருவாக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஊடக பேச்சாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

தங்கள் கட்சியின் பிரதமர் வேட்பாளர் யார் என்பதனை கட்சிக்கு அவசியமான நேரத்தில் ஜனாதிபதி அறிவிப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 416

சுஜே செல்வா




திலீப் குமார்




சிந்து சிந்துஜா




லங்கா பாய் வாமன்




கஜன் கஜமுகன்




கஜன் மகாதேவன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பாகிஸ்தான் போர் விமானங்கள் இலங்கைக்குத் தேவையா?



கடந்த ஜூன் 15 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை பாரிஸில் நடந்த 51 ஆவது சர்வதேச விமானக் கண்காட்சியில், 48 நாடுகள் பங்கேற்றிருந்தன.

மூன்றரை இலட்சம் பார்வையாளர்கள் இதனைப் பார்வையிட வந்திருந்தனர். இந்தக் கண்காட்சியில் இடம்பெற்றிருந்த 130 வகையான விமானங்களில், பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்ட ஜே.எவ்-17 விமானமும் ஒன்றாகும்.

147 நாடுகளின் பாதுகாப்பு பிரதிநிதிக் குழுக்கள் பங்கேற்ற இந்தக் கண்காட்சியின் மூலம் 130 பில்லியன் டொலர் பெறுமதியான சிவில் போக்குவரத்து மற்றும் போர் விமானங்களின் விற்பனை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கண்காட்சியின் முடிவில், செய்தியாளர்களிடம் பேசியிருந்த, பாகிஸ்தான் விமானப்படையைச் சேர்ந்த எயர் கொமடோர் சையத் முகமட் அலி, சீன பாகிஸ்தான் கூட்டுத் தயாரிப்பான ஜே.எவ் - 17 போர் விமானங்களை ஆசிய நாடொன்று வாங்க இணங்கியுள்ளதாகக் கூறியிருந்தார்.

18 தொடக்கம், 24 வரையான ஜே.எவ்-17 போர் விமானங்களை ஆசிய நாடு ஒன்றுக்கு விற்பனை செய்வதற்கு பாரிஸ் கண்காட்சியில் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறிய அவர், இந்த விமானங்கள் 2017 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்படும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், எந்த நாட்டுக்கு இந்த ஜே.எவ் -17 போர் விமானங்கள் விற்கப்படவுள்ளன என்ற விபரத்தை பாகிஸ்தான் விமானப்படை அதிகாரி வெளியிட்டிருக்கவில்லை. ஆனால் இலங்கையே இந்த விமானங்களை வாங்கவுள்ளதாக, ஊடகங்களில் பரபரப்பான செய்திகள் வெளியாகின.

பாகிஸ்தான் ஊடகங்களிலும், சர்வதேச ஊடகங்களிலும், இந்தச் செய்தி பரபரப்பாக வெளியானது. அதற்குக் காரணம், இலங்கையில் விமானப்படை இந்த விமானங்களை வாங்குவது அல்ல. சீனாவும், பாகிஸ்தானும் இணைந்து தயாரித்த இந்த ஜே.எவ். -17 போர் விமானங்கள் இதுவரையில் பாகிஸ்தான் விமானப்படையில் மாத்திரமே இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

முதல் முறையாக இந்தப் போர் விமானத்தை வெளிநாடு ஒன்று கொள்வனவு செய்துள்ளது என்பதுதான் இந்தச் செய்தி கூடுதல் முக்கியதுவம் பெறுவதற்குக் காரணம், பாகிஸ்தானின் Aeronautical Complex மற்றும் Chengdu Aircraft industy Group ஆகியன இணைந்து இந்தப் போர் விமானத்தை தயாரிக்கின்றன.

ஆரம்பத்தில் இது சீனாவில் வடிவமைக்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு தொடங்கிய இந்த விமான உற்பத்தி அங்கு தொடர்ந்து இடம்பெற்று வருகிற அதேவேளை, பாகிஸ்தானில், 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த விமானங்கள் தயாரிக்கப்படுகின்றன.

இலகு ரக பலநோக்கு தாக்குதல் விமானமாக தயாரிக்கப்பட்டுள்ள இந்தப்போர விமானத்தை கண்காணிப்பு, தரைத் தாக்குதல், வான்வழிச் சண்டை என்று மூன்று தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

ஒலியை விடவும் இரண்டு மடங்கு வேகத்தில் 55 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கும் திறன் கொண்ட இந்தப் போர் விமானங்களின் விலை சுமார் 30 மில்லியன் டொலராகும். நவீன ரக ஏவுகணைகள், ரேடர் வழிகாட்டல் குண்டுகள் மற்றும் வசதிகளைக் கொண்ட இந்தப் போர் விமானத்தை ஆசிய நாடுகளுக்கு விற்பனை செய்வதில் பாகிஸ்தான் அதிக நாட்டம் கொண்டுள்ளது.

எனவே, சர்வதேச அளவில் முக்கியமான ஒரு நாட்டுக்கு முதல் விற்பனையை செய்வதன் மூலம், தனது உற்பத்தியைப் பிரபலப்படுத்தலாம் என்று பாகிஸ்தான் யோசிக்கிறது. ஆனால், பாகிஸ்தான் விமானப்படை அதிகாரி கூறியது போல, இலங்கை விமானப்படை, 18 தொடக்கம் 24 வரையான போர் விமானங்களை கொள்வனவு செய்யும் நிலையில் இல்லை என்பது உறுதி.

அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று பொருளாதாரம் இடம்கொடுக்காது. இரண்டு இந்தளவு போர் விமானங்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய தேவை இலங்கைக்கு தற்போது இல்லை. அதற்காக இந்தப் போர் விமானங்களை இலங்கை விமானப்படை கொள்வனவு செய்ய எத்தனிக்கவில்லை என்று கூற முடியாது.

அண்மையில் இலங்கை விமானப் படைத் தளபதியின் அலுவலக அறையில் ஜேஎவ் -17 போர் விமானங்களின் மாதிரி வைக்கப்பட்டிருந்த புகைப்படம் ஒன்று வெளியான போதே, இந்த விமானங்களை இலங்கை விமானப்படைதான் கொள்வனவு செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகின.

இப்போது அந்த சந்தேகத்தை வலுப்படுத்தும் செய்திகள் பலவும் வெளியாகி வருகின்றன. முதலில், ஜெ.எவ்- 17போர் விமானங்களை இலங்கை விமானப் படையே வாங்கவுள்ளதாக செய்தி வெளியானபோது, அதனை, விமானப்படைப் பேச்சாளர் நிராகரித்திருந்தார்.

ஆனால், இந்த விமானங்களின் கொள்வனவு தொடர்பாக இன்னமும் முடிவெடுக்கப்படவில்லை என்று அவர் கூறியிருந்தாரே தவிர, இத்தகைய விமானங்களைக் கொள்வனவு செய்யும் திட்டமோ அதுபற்றிய பரிசீலனையோ தம்மிடம் இல்லை என்று தெளிவாகக் கூறவில்லை.

சீனாவும், பாகிஸ்தானும் இந்த போர் விமானங்களை விற்க இலங்கை விமானப் படையை அணுகியிருப்பது மற்றும் அது தொடர்பாக ஆவணங்கள் பரிமாறப்பட்டதை அவர் உறுதிப்படுத்தியிருக்கிறார். எனினும் கொள்வனவு பற்றிய முடிவு இன்னமும் எடுக்கப்படவில்லை என்றே அவர் கூறியிருக்கிறார்.

அதேவேளை, பாகிஸ்தானின் பிஸ்னஸ் ரெக்கோடர் என்ற பிரபல வர்த்தக நாளிதழ், இந்தப் போர் விமானங்களின் கொள்வனவுக்கான கடன் கட்டளைகள் வழங்கப்பட்டுவிட்டதாகக் கூறியுள்ளது. 14 போர் விமானங்கள் இலங்கைக்கு விற்கப்படவுள்ளதாகவும், 2016 ஆம் ஆண்டு தொடக்கம் அவை விநியோகிக்கப்படும் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், ஜே.எவ் - 17 போர் விமானங்களைச் செலுத்துவது மற்றும் பராமரிப்பு தொடர்பாக இலங்கை விமானிகள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களுக்கு பாகிஸ்தான் பயிற்சி அளிக்கவுள்ளதாகவும் பாகிஸ்தான் நாளிதழ் குறிப்பிட்டிருந்தது.

இது குறித்து விமானப்படை தரப்பில் எந்தக் தகவலும் தெரிவிக்கப்படவில்லை. எவ்வாறானும், ஜே.எவ் -17 போர் விமானங்களைக் கொள்வனவு செய்யும் முயற்சியில், இலங்கை விமானப்படை இறங்கியுள்ளதாகவே தெரிகிறது. போர் முடிந்த ஆறு ஆண்டுகள் கழிந்து விமானப்படை இந்தப் போர் விமானங்களின் கொள்வனவில் இறங்கியிருக் கிறது.

தற்போதைய சூழ்நிலையில், இந்தப் போர்விமானங்களை இலங்கை விமானப்படைக்கு பயிற்சி மற்றும் அலங்கார அணிவகுப்புகளுக்கு மாத்திரமே பயன்படுத்த முடியும். அதேவேளை, பெருமளவு செலவழித்து இந்தப் போர் விமானங்களைக் கொள்வனவு செய்வதன்மூலம் இலங்கையின் பொருளாதார நெருக்கடி மேலும் வலுப்பெறுவதற்கான சாத்தியங்கள் உள்ளன.

பாகிஸ்தானும்சரி சீனாவும்சரி, ரஷ்யாவும்சரி இலங்கையை இராணுவ ரீதியாக பலப்படுத்துவதில் மட்டுமன்றி கடனாளியாக்குவதிலும் தீவிரமாக இருக்கின்றன.

இந்தப் போர் விமானங்களின் கொள்வனவுக்கு, பாகிஸ்தான் வழங்க முன்வந்த 200 மில்லியன் டொலர் கடன் திட்டமே பயன்படுத்தவுள்ளதாக பாகிஸ்தான் ஊடகங்கள் குறிப்பிட்டிருந்தன.

முன்னைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச 2012 ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்குச் சென்றிருந்த போது, 200 மில்லியன் டொலர் கடன் திட்டத்தை அறிவித்திருந்தது பாகிஸ்தான். அதனை இன்னமும் இலங்கை பயன்படுத்திக் கொள்ளவில்லை. அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாகிஸ்தான் சென்றிருந்தபோது, இந்த 200 மில்லியன் டொலர் கடன் திட்ட அறிவிப்புக்கு நன்றியும் தெரிவித்திருந்தார்.

இலங்கைக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலான வர்த்தகம் அண்மைக் காலமாக வீழ்ச்சியடைந்து வருவதாக பாகிஸ்தானிய தூதுவர் அண்மையில் கவலை வெளியயிட்டிருந்தார். இந்த நிலையில், இலங்கையால் பயன்படுத்திக் கொள்ளப்படாத இந்த கடன் திட்டத்துக்கு, தனது ஜே.எவ் -17 போர் விமானங்களை கொடுத்து மீண்டும் இருதரப்பு வர்த்தகத்தை சூடாக்கிக் கொள்ள முனைகிறது பாகிஸ்தான்.

ஏற்கனவே இதுபோலத்தான் ரஷ்யாவும், சில ஆண்டுகளுக்கு முன்னர் 500 மில்லியன் டொலர் கடன் திட்டத்தை அறிவித்திருந்தது. பின்னர் அந்த கடன் திட்டத்துக்கு, எம்.ஐ-17 ஹெலிகொப்டர்களையே இலங்கைக்கு விற்பனை செய்தது. இந்த கடன்திட்டத்தை இலங்கை இன்னமும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

அண்மையில் கூட அதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று ரஷ்யா கூறியிருந்தது. கடன் திட்டங்களை வழங்குதல் என்ற பெயரில் இலங்கைப் படைகளைப் பலப்படுத்துவது மட்டுமன்றி, தமது ஆயுதங்கள், போர்த் தளபாடங்களை சந்தைப்படுத்துகின்ற இடமாகவும் தான் சீனா, பாகிஸ்தான், ரஷ்யா போன்ற நாடுகள் இலங்கையைப் பயன்படுத்தி வருகின்றன. இந்த வகையில்தான் பாகிஸ்தானும் எப்படியாவது தனது ஜே.எவ்-17 போர் விமானங்களை இலங்கை விமானப் படையின் தலையில் கட்டிவிட எத்தனிக்கிறது.


போரில்லாத ஒரு சூழலில் இலங்கை விமானப்படை இந்த விமானங்களை வாங்குவதன் மூலம், இலங்கையர்களின் தலையில் உள்ள கடன்தான் பெருகப் போகிறதே தவிர, இவற்றின் ஊடாக நாட்டின் பாதுகாப்பு வலுப்படுத்தப்படும் என்பது வெற்றிவாதமேயாகும்.

-சுபத்ரா-

# சு.க.வெற்றிபெற வேண்டுமாயின் மகிந்த அமைதியாக வேண்டும்

## அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)



**எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை பெற்றி பெற செய்ய வேண்டுமானால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைதியாக வேண்டும் என முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

அத்தகல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை பார்க்கும் போது பிளவடைந்து காணப்படுகின்றது. அதற்கு பிரதான காரணம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயற்பாடுகளாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை வெற்றி பெற செய்துவிட்டு ஐக்கிய தேசிய கட்சிக்கு அதிகாரத்தை கொடுக்க வேண்டிய அவசியம் அவருக்கு காணப்படுகின்றது.

அவர் கட்சியை விட்டு விலகி தனியாக போட்டியிட்டாலும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி பிளவடையும்.

மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மீது அன்பு வைத்திருக்கின்றார் என்றால் சில காலங்களுக்கு கட்சியை விட்டு ஒதுங்கி, அமைதியாக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# முன்னாள் புலிகள் தண்டிக்கப்படுவர்

## முன்னாள் பிரதி அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

நல்லிணக்க அடிப்படையில் அரசியலில் இணைந்திருந்தாலும் விடுதலைப்புலிகளின் முன்னாள் தலைவர்களும் அவர்கள் மேற்கொண்ட குற்றங்களுக்காக தண்டிக்கப்படுவார்கள் என்று முனனாள் பிரதி நீதியமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

2000ஆம் ஆண்டு டிசம்பரில் யாழ்ப்பாணம் மிருசுவிலில் 8 பொதுமக்களை கொலை செய்த இராணுவ வீரருக்கு, கடந்த வாரம் கொழும்பு நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

இதன் பின்னணியில் முன்னாள் பிரதியமைச்சர் கருணா என்ற விநாயகமூர்த்தி முரளிதரன், கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் என்ற சிவநேசதுரை சந்திரகாந்தன், விடுதலைப்புலிகளின் முன்னாள் சர்வதேச பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் ஆகியோர் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கே சுஜீவ சேனசிங்க தமது பதிலை வழங்கியுள்ளார்.


குற்றங்கள் நிரூபிக்கப்படும் போது குற்றம் புரிந்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பது சட்ட நியதியாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் சந்தேகத்துக்கு உரியவர்களுக்கு, நாட்டின் சமாதான அடிப்படையில் மனிதாபிமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

## பாராளுமன்ற தேர்தலுக்கு 400 கோடி ரூ.செலவாகும்

இம்முறை பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு 400 கோடி ரூபா செலவாகுமென தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நேற்று முன்தினம் சனிக்கிழமை தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஊடக மாநாட்டில் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்வியின்போதே இதனை அவர் தெரிவித்தார். கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது 300 கோடி



ரூபா செலவானதாகவும் பாராளுமன்றத் தேர்தலுக்கு 400 கோடி ரூபா செலவாகலாமென மதிப்பிடப்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி தேர்தலில் விருப்பு வாக்குமுறை இல்லாததாலும், வாக்குகள் எண்ணப்படுவதில் நேரம் மட்டுப்படுத்தப்பட்டமையாலும் செலவுத் தொகையை 300 கோடிக்கு மட்டுப்படுத்த முடிந்தது.

ஆனால் பாராளுமன்றத் தேர்தலில் இது சாத்தியப்பட முடியாது. விருப்பு வாக்கு முறையுடன், பாதுகாப்பு நடவடிக்கைகள் கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் செலவுத் தொகை 400 கோடி அளவில் அமையலாம் என மதிப்பிடப்பட்டிருப்பதாகவும் ஆணையாளர் தெரிவித்தார். (இ-5)

# மைத்திரியுடன் இணைந்து அமெரிக்கா செயற்படும்

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து செயற்படப்போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் இதனை அறிவித்துள்ளது.

. மனித உரிமைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்ற ஜனாதிபதியின் உறுதிமொழிக்கு அமையவே, இந்த அறிவிப்பை வெளியிடுவதாக அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

2014ஆம் ஆண்டுக்கான அமெரிக்காவின் மனித உரிமைகள் அறிக்கையின் பின்னர் மனித உரிமைகள விடயத்தில் உரிய கவனம் செலுத்தப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால உறுதியளித்துள்ளார.

இந்நிலையில் நல்லாட்சியை முன்னெடுக்கவும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தவும் அமெரிக்கா, மைத்திரிபாலவுடன் இணைந்து செயற்படும் என்று தூதரகத்தின் பேச்சாளர் ஜேசுஆ ஷேன் தெரிவித்துள்ளார். (இ-5)

# நாட்டை முழுமையாக மீட்டெடுக்கும் வரையில் நான் ஓயப்போவதில்லை - சாந்தனி பண்டார

நாட்டை முழுமையாக மீட்டெடுக்கும் வரையில் ஓயப் போவதில்லை என முன்னாள் அமைச்சர் சாந்தனி பண்டார தெரிவித்துள்ளார்.

வங்குரோத்து அடைந்த பொருளாதாரத்தையே கடந்த அரசாங்கம் எம்மிடம் ஒப்படைத்தது. எனினும் நாம் நாட்டை மீட்டெடுக்க நடவடிக்கை எடுப்போம்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் எமது பலத்தை நாம் நிரூபித்து இருந்தோம்.

சாதாரண மக்களை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியையே விரும்புகின்றார்கள்.

கிராம மக்கள் மகிந்தவை நேசிக்கின்றார்கள் என்ற கருத்தில் உண்மையில்லை. மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கே எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆணையை வழங்குவார்கள் என சாந்தனி பண்டார மேலும் தெரிவித்துள்ளார்.

சிங்கள வார இறுதி பத்திரிகையொன்று எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## முதுமையில் இன்பம்

ஒரு வயதான தாத்தா. வயதான காலத்தில் கூட எதையும் வேண்டாமென்று சொல்லமாட்டார். எதைக் கொடுத்தாலும் சாப்பிடுவார். அவர் சாப்பிடுவதெல்லாம் ஜீரணமாகிவிடும். அவர் உடம்பு வாசி அப்படி. "என்ன தாத்தா இது? தள்ளாத வயதிலே இப்படிக் கண்டதையெல்லாம் சாப்பிடலாமா" என்று கேட்டால், "இது எதையும் தள்ளாத வயதடா கண்ணா" என்று சினிமா வசனம் பேசுவார்.

அது சரி. வயதான காலத்திலே எல்லோருமே இப்படி உற்சாகமாக இருக்க முடியுமா? 'முடியும்' என்று சொல்கிறார்கள் முதியோர் நல மருத்துவ நிபுணர்கள். சரி, அதற்கு என்ன செய்ய வேண்டுமென்று கேட்டால், 50 வயதிலேயே அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்துவிட வேண்டுமென்கிறார்கள்.

முதுமை என்பது எல்லோருக்கும் வந்தே தீரக்கூடிய ஒன்று. 'எனக்கு அது வேண்டாம்" என்று யாரும் சொல்ல முடியாது. சொன்னாலும் அது ஒதுங்கிப் போய்விடாது! அப்படியிருக்கும் போது அந்தக் கடைசிக் காலத்திலே சந்தோசமாக இருப்பதற்கு வழி இருக்கிறது என்று சொன்னால் அதைத் தெரிந்து வைப்பதில் தப்பு இல்லையே!

முதுமையிலே இன்பமாக வாழ்வதற்கு வழி என்னவென்று கேட்டால் அதற்கு மூன்று 'பொயின்ட்' சொல்கிறார்கள். ஒன்று உடல் நலம். இரண்டாவது மன நலம். மூன்றாவது குடும்பத்திலேயும் சமுதாயத்திலேயும் நல்ல இடம். முதலில் உடல் நலத்தை எப்படிக் காப்பாற்றுவது என்று பார்ப்போம். வயதான காலத்திலே பசியும் சுவையும் குறையும். அதனால் சாப்பிடும் ஆகாரத்தில் அளவும் குறையும். இதனால் சாப்பிடுகிற கொஞ்ச ஆகாரமும் சத்துள்ள ஆகாரமாக இருக்க வேண்டியது அவசியம். வயதான காலத்திலே கேழ்வரகு மிகவும் பொருத்தம். இதில் கலோரிகள் அதிகம். சுண்ணாம்புச் சத்தும் அதிகம். நார்ச்சத்தும் அதிகம். சுலபமாக ஜீரணமாகும்.

கோதுமை, கீரை, பருப்பு வகை, பழங்கள் சாப்பிடலாம். பொட்டுக் கடலை, பட்டாணிக் கடலையில் புரதச்சத்து அதிகம் சாப்பிடலாம். வயதான காலத்திலே இரத்தச் சோகை வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். அதனால் இரும்புச் சத்து அதிகமாக இருக்கின்ற உணவாகப் பார்த்து சாப்பிட வேண்டும். கீரை வகைகளில் இரும்புச் சத்து அதிகம் உண்டு. அதனால் தினமும் ஒரு வகை கீரையை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். வெல்லம், பேரீச்சம்பழம், தேன் முதலியவற்றிலும் இரும்புச் சத்து அதிகமாக இருக்கிறது.

முதுமையில் எலும்பு பலவீனமாக இருக்கும். அதனாலேயே சுண்ணாம்புச் சத்து அதிகமாக உள்ள ஆகாரத்தை சாப்பிட வேண்டும். பாலிலே அந்த சத்து அதிகம். முருங்கைக் கீரை, வெந்தயக் கீரை, கேழ்வரகு இவற்றிலும் அது அதிகம். வயதான காலத்திலே தனியான ஆகாரம் என்று எதுவும் இல்லை. சாப்பிடுவது சத்துள்ளதாக இருக்க வேண்டும் என்பது தான் முக்கியம். அடுத்த படியாக உடற்பயிற்சி மிகவும் அவசியம். அதனால் உடம்பும் மனதும் நன்றாக இருக்கும். முடிந்த அளவு தினமும் 45 நிமிடம் உடற்பயிற்சி செய்யலாம். அல்லது தினமும் மூன்றில் இருந்து ஐந்து கிலோ மீற்றர் தூரம் நடக்கலாம். காலாகாலத்தில் மருத்துவ பரிசோதனை செய்து கொள்வதும் நல்லது.

இரண்டாவது மனநலம். வயதாகி விட்டது என நினைத்துக் கொண்டு சும்மா உட்கார்ந்திருக்கக் கூடாது. அப்படி முடங்கிக் கிடந்தால் மூப்பினுடைய விளைவு ஆறு மடங்கு அதிகமாகி விடுமென்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். நடுத்தர வயதுக் காலத்திலேயே நமக்கென்று நல்ல பொழுது போக்குப் பழக்கத்தை உண்டு பண்ணிக் கொள்ள வேண்டும். புத்தகம் படிப்பது, ரேடியோ கேட்பது, நண்பர்களைக் கண்டு உரையாடுவது. இப்படி ஏதாவது இருக்க வேண்டும். முதுமைக்கு பயங்கரமான விரோதி தனிமை. மனநலம் நன்றாக இருக்க 'தியானம்" ஒரு நல்ல மருந்து.

மூன்றாவது விடயம்– குடும்பத்திலேயும் சமூகத்திலேயும் ஒரு நல்ல இடத்தைப் பெற வேண்டும். கூட்டுக் குடும்பம் நல்லது. குடும்பத்திலேயுள்ள பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். அவர்களுடைய அனுபவமே ஒரு பெரிய சொத்து. நேரம் கிடைக்கும் போதெல்லாம் கலகலப்பாக, பிரியமாக பேசிக் கொள்ள வேண்டும். பெரியவர்களுடைய யோசனையைக் கேட்டு நடப்பது என்றும் நல்லது. நடுத்தர வயதுக் காலத்திலேயே வயதான காலத்துக்கென சிறிது பணத்தைச் சேமிக்க ஆரம்பிக்க வேண்டும். பணம் கையிலே இருந்தால் பாசம் தேடி வரும்.


மூப்பியல் மருத்துவம் (GERIATRICS) என்பது இப்பொழுது மிகவும் முக்கியமான ஒரு மருத்துவ பிரிவு. அதனால் வயது வரவர அதிகமாகிக் கொண்டு வருவதை நினைத்து வருத்தப்படக் கூடாது. வயதான காலத்திலும் உற்சாகமாக இருக்கிற பலரைப் பாருங்கள். அவர்களைப் பார்த்துக் கற்றுக் கொள்ளுங்கள்.

ஒரு தாத்தாவுக்கு 100 ஆவது பிறந்த நாள். அவருடைய பேரப்பிள்ளைகள் எல்லாம் வந்து அவருடைய காலிலே விழுந்து ஆசீர்வாதம் வாங்கினார்கள். காலிலே விழுந்து எழுந்ததும் 'தாத்தா! ஆண்டவன் புண்ணியத்தாலே அடுத்த வருடம் உங்கள் பிறந்த நாளன்று உங்கள் ஆசீர்வாதத்தை பெறக் கூடிய பாக்கியம் எங்களுக்குக் கிடைக்க வேண்டும்" என்று பணிவாகக் கேட்டுக் கொண்டார்கள்.

அதற்கு அந்தத் தாத்தா 'நீங்கள் கவலைப்படாதீர்கள்! நிச்சயமாக அது நடக்கும். ஏனென்றால் நீங்கள் எல்லாம் சின்னப்பிள்ளைகள் தானே... அதற்குள் உங்களுக்கு ஒன்றும் ஆகிவிடாது" என்றார்!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# குருப் பெயர்ச்சி பலன்கள்



### ஆனி 20 முதல் தேனான வாழ்க்கை அமையும் எவரிடமும் எளிதாக பழகும் இனிய சுபாவத்தைப் பெற்ற மேட இராசி நேயர்களே!

மனதில் பட்டதை மறைக்காமல் சொல்லிவிடும் உங்களுக்கு வாசல் தேடி வந்துவிட்டது குருப்பெயர்ச்சி. இதுவரை அர்த்தாஷ்டம குருவாக 4 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபவான், இப்பொழுது 5 ஆம் இடத்தில் சஞ்சரித்து அற்புத பலன்களை வழங்கப் போகிறார். ஆனி 20ஆம் திகதி முதல் தேனான வாழ்க்கை அமையும். செல்வ வளம் பெருகும். வாழ்நாளில் மறக்க முடியாத சம்பவங்கள் ஏராளமாக நடைபெறப் போகின்றது.

**மதியூகத்தால் மகிழ்ச்சியை வரவழைத்துக் கொள்பவர்கள்!**

மதியூகம் மிக்கவர்கள் நீங்கள். அதிவேகமாகச் செயற்படுவீர்கள். யாரைப் பார்த்தால் உடனடியாகக் காரியம் முடியும் என்பதை அறிந்து வைத்திருப்பீர்கள். கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டிப்பீர்கள். கனிவாகப் பேச வேண்டிய நேரத்தில் கனிவாகப் பேசுவீர்கள். இப்படிப்பட்ட குணங்களைப் பெற்ற உங்களுக்குப் பெயர்ச்சியாகி சிம்மத்திற்கு வந்த குரு, தனது பார்வையை உங்கள் ராசியில் பதிக்கப் போகின்றார்.

ஐந்திலே குருதான் வந்தால்
அனைத்திலும் வெற்றி கிட்டும்!
பைதனில் பணமும் சேரும்!
பாராளும் யோகம் வாய்க்கும்!
வையகம் போற்றும் வண்ணம்
வரன்களும் வந்து சேரும்!
செய்தொழிலில் வளர்ச்சி யாகும்!
செல்வாக்கும் அதிகரிக்கும்!

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

# ஆனி 20 முதல் தேனான வாழ்க்கை அமையும்

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது 5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு அற்புதப் பலன்களை அள்ளி வழங்கப் போகின்றது. தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். ஆதாயம் தரும் தகவல்கள் ஒவ்வொரு நாளும் வந்து கொண்டேயிருக்கும். வங்கிச் சேமிப்பு உயரும்.

வளர்ச்சியில் இருந்த தளர்ச்சி மாறும். தாராளமாகச் செலவிட்டு மகிழப் போகிறீர்கள். பாராளும் யோகம் ஒரு சிலருக்கு வந்து சேரும். ஆரோக்கியத் தொல்லை அகலும்.

ஜென்மம், உடல், செயற்பாடு, வாழ்க்கைத் தரம், தந்தையின் நிலை, உறவினர் பாசம், பயணங்கள், எதிர்பாராத தனலாபம் மூத்த சகோதரம் போன்றவற்றை விளக்கும் இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. எனவே அந்த ஸ்தானங்களுக்குரிய ஆதிபத்யங்களிலிருந்த தடைகள் அகலும்.

**ராசியை குருதான் பார்த்தால்
இனியதோர் வாழ்க்கை சேரும்!
ஒன்பதை குருதான் பார்த்தால்
உன்னத நிலையும் வாய்க்கும்!**




உங்கள் ராசிக்கு 9, 12 இற்கு அதிபதியானவர் குருபகவான் ஆவார். ஐந்தும், ஒன்பதும் மிஞ்சும் பலன் தரும் என்பார்கள். எனவே, ஒன்பதுக்கு அதிபதியான குரு பகவான், 5 ஆம் இடத்திலிருந்து கொண்டு 9 ஆம் இடத்தை பார்ப்பதால் ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்கு அமையப் போகின்றது.

'மகம்' நட்சத்திரத்தில் குரு சஞ்சரிக்கப் போவதால் அதற்கு இணையான அசுவதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களும், கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் 'தாராபலம்' பெற்ற நாளில் சிறப்புப் பரிகாரங்களை தேர்ந்தெடுத்து செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

2016 ஜனவரி 8 ஆம் திகதி ராகு-கேது பெயர்ச்சி நடைபெறவிருக்கிறது. அப்பொழுது ராகு, குருவோடு கூடி சஞ்சரிக்கப் போகிறார். ராகு சஞ்சரிக்கும் வீடு சூரியனின் வீடாகும். எனவே திடீர் திருப்பங்களைச் சந்திக்க நேரிடும். அந்த நேரத்தில் குல தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வதோடு திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளையும் மேற்கொள்வது நல்லது.

**குரு பார்வை கொடுக்கும் யோகங்கள்!**

நவக்கிரகங்களில் சுபகிரகமாக விளங்குபவர் குருபகவான். அந்த குருபகவான் சிம்மத்தில் சஞ்சரிக்கும் பொழுது எண்ணற்ற நற்பலன்கள் இல்லம் தேடி வரும். இருப்பினும் 2016 ஜனவரி மாதத்தில் ராகு குருவோடு சேரப்போகின்றார். மேலும் விருச்சிகத்தில் சஞ்சரிக்கும் சனிபகவான் 10 ஆம் பார்வையாக அந்த குருவைப் பார்க்கப் போகின்றார்.

எனவே, சனி பார்வை பெற்ற குரு பகவானின் பார்வையால் இனிவரும் காலங்கள் இனிய காலமாக அமைய வேண்டுமானால் சனி வழிபாடு, குரு வழிபாடு, பாம்பு கிரகங்கள் என்று வர்ணிக்கப்படும் ராகு-கேதுக்களின் வழிபாடு ஆகியவற்றை நீங்கள் முறையாக மேற்கொள்ள வேண்டும்.

குருவின் பரிபூரண பார்வை 1, 9, 11 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. எனவே

**பதினொன்றை குருதான் பார்த்தால்
பணத்தேவை பூர்த்தியாகும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

குருபகவான் ஐந்தாமிடத்திலிருந்து கொணடு ஜென்ம ராசியைப் பார்ப்பது யோகம்தான். பஞ்சம ஸ்தானமும் பலம் பெறுகின்றது. பார்க்கும் இடமும் பலம்பெறுகின்றது. எனவே கடந்த காலத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. வெற்றி வாகை சூடும் வகையில் அனைத்துத் துறைகளிலும் ஆதரவு கிடைக்கும். நோய் நொடிகளிலிருந்து விடுபடுவீர்கள். மணவாழ்க்கையும் அமையும். மழலைப் பேறும் கிட்டும். பண மழையிலும், பாச மழையிலும் நனையப் போகிறீர்கள். கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

'குரு பார்க்கக் கோடிநன்மை' என்பதற்கேற்ப குருபார்வை 1, 9, 11 ஆகிய இடங்களில் பதிவதால் மண்ணைத் தொட்டாலும் பொன்னாகும். என்ன நினைத்தாலும் அதை உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். புதிய வீடு கட்டிக் குடியேறும் யோகமும் வந்துசேரும். தந்தை வழி ஆதரவோடு சிந்தை மகிழும் வாய்ப்பு கைகூடும்.

லாப ஸ்தானத்தை குரு பார்ப்பதால் தேவையான அளவிற்குப் பொருளாதார நிலை உயரும். செய்யும் தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிட்டும். அந்நிய தேசத்தில் அடியெடுத்து வைக்கும் வாய்ப்பு கிட்டும்.

**கேது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது!**

விரயங்கள் மேலோங்கி இருக்கும். வீடு மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும், ஒரு சிலருக்கு நாடு மாற்றங்கள் நல்ல மாற்றங்களாக வந்து சேரும். கூட்டு முயற்சிகளில் மாற்றங்கள் செய்வீர்கள். கொடுக்கல் வாங்கல்களில் விழிப்புணர்ச்சி தேவை. அலைச்சல் அதிகரிக்கும். விரயத்தை சுபவிரயமாக மாற்ற வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழலாம். மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும்.


**சுக்ர சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது!**

தன வரவு தாராளமாக வந்து சேரும். இனத்தார் பகை மாறும். அரசுவழிச் சலுகைகள் எதிர்பார்த்தபடி கிடைக்கும். அரசியல் வாதிகளுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்துசேரும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். உத்தியோக ஸ்தர்களுக்கு பதவி உயர்வு வரும்.

**சூரிய சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது!**

இக்காலத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சி யில் வெற்றி கிடைக்கும். பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்படும் மங்கல நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். சேமிப்பு அதிகரிக்கும். உதிரி வருமானங்கள் வந்து சேரும். குடும் பத்தில் மகிழ்ச்சி கூடுதலாக இருக்கும் நேர மிது. நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**



குருவின் வக்ர காலத்தில் கூடுதல் விழிப்புணர்ச்சி உங்களுக்குத் தேவை. 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக விளங்குவதால் தந்தை வழி உறவில் பிரச்சினைகள் ஏற்படலாம். ஆடம்பரச் செலவுகளால் கடன் வாங்கும் நிலை வரும். எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதில் தாமதம் ஏற்படலாம்.

குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் தத்தளிக்கும் சூழ்நிலை ஏற்படலாம். தொழிலுக்கு மூலதனம் கிடைத்தாலும் நம்பிக்கையான ஆட்கள் கிடைக்கவில்லையே என்று கவலைப்படுவீர்கள். பிள்ளைகளை அதன் போக்கில் விடாமல் கண்காணித்துக் கொள்வதன் மூலம் பிரச்சினைகளிலிருந்து விடுபட இயலும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

செவ்வாய் தோறும் முருகப்பெருமான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். அனுகூல நாளில் கற்பக விநாயகர் வழிபாட்டை மேற்கொண்டு எல்லையில்லாத நற்பலன்களை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

**ஜோதிடக் கலைமணி
சிவல்புரி சிங்காரம்**

**மேஷ ராசியில் பிறந்த பெண்களுக்கு!**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுதலும், அடுத்தடுத்து சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

'பொன்னவன்' என்று வர்ணிக்கப்படும் குரு உங்கள் ராசியைப் பார்ப்பதால் பொன்நகை அதிகம் வாங்கி புன்னகைக்கும் வாய்ப்பு கிட்டும். கணவன், மனைவிக்குள் இருந்த கருத்து வேறு பாடு அகலும். உங்கள் சொல்லுக்கு குடும்பத்தினர் முக்கியத்துவம் கொடுப்பர்.

கல்யாணம் ஆகாதவர்களுக்கு வரன் கள் திருப்திகரமாக வந்து சேரும். மழலைப்பேறுக்காக காத்திருப்பவர்களுக்கு மக்கள் செல்வங்கள் வாய்ப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். தாய்வழி ஆதரவு உண்டு.

சனி பார்க்கும் குருவால் சஞ்சலம் ஏற்படாமல் இருக்கவும், ராகுவோடு இணைந்த குருவால் நன்மைகள் ஏற்படவும், காலசர்ப்ப தோஷ நிவர்த்திக் குரிய சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில் அனுகூல ஸ்தலங்களில் செய்வதோடு, சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

(நாளை இடபம்)

# கொபானி நகரைவிட்டு ஐ.எஸ். விரட்டியடிப்பு

## 200 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை

**துருக்கி எல்லையையொட்டி சிரியாவில் அமைந்துள்ள கொபானி நகருக்குள் புகுந்து இரு நாட்களாகத் தாக்குதல் நிகழ்த்தி வந்த இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.ஐ.எஸ்.) பயங்கரவாதிகளை குர்துப் படையினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை விரட்டியடித்ததாக சிரியா மனித உரிமைக் கண்காணிப்பு அமைப்பு (எஸ்.ஓ.எச்.ஆர்.) தெரிவித்துள்ளது**

பயங்கரவாதிகள் நிகழ்த்திய தாக்குதலில் 200-க்கும் மேற்பட்ட பொதுமக்களும், சண்டையில் 70 பேரும் உயிரிழந்ததாக அந்த அமைப்பு கூறியது.

இதுகுறித்து எஸ்ஓ.எச். ஆர். கூறியதாவது:

கொபானி நகரில் ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாதிகள் கைப்பற்றிய கட்டடங்களை, குர்துப் படையினர் மீட்டுள்ளனர்.

பயங்கரவாதிகள் கடைசியாகப் பதுங்கியிருந்த ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக் கட்டடத்தில் வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்து குர்துப் படையினர் மீட்டனர் என்று அந்த அமைப்பு கூறியது.



குர்துப் படையினரைப் போல்வேடமணிந்து கொபானி நகருக்குள் கடந்த வியாழக்கிழமை நுழைந்த ஐ.எஸ். ஐ.எஸ்.பயங்கரவாதிகள், நகரின் தெற்குப் பகுதியிலும்தென மேற்குப் பகுதியிலும் பல கட்டடங்களைக் கைப்பற்றினர்.

உடனடியாக அந்தக் கட்டடங்களை குர்துப் படையினர் சுற்றி வளைத்தனர்.

எனினும், ஏராளமான பொதுமக்களை ஐ.எஸ். ஐ.எஸ். பய ங்கரவாதிகள் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியதால் உடனடியாக அந்தக் கட்டடங்களை மீட்க முடியவில்லை.

இந்நிலையில் மெதுவாகத தாக்குதல் நிகழ்த்தி ஒவ்வொரு கட்டமாக மீட்டு வந்த குர்துப் படையினர், பயங்கரவாதிகள் கடைசியாகப் பதுங்கிய பாடசாலை கட்டடத்தில் பொதுமக்கள் யாருமில்லை என்பதை உறுதி செய்த பின்னர் தாக்குதல் நிகழ்த்தி அதனை மீட்டதாக ஒருவர் தெரிவித்தார். அந்தக் கட்டடத்திலிருந்த பயங்கரவாதிகள் அனைவரும் உயிரிழந்ததாகவும அவர் தெரிவித்தார்.

சண்டை நிகழ்ந்த இரு நாட்களில் கொபானியிலும், சுற்றியுள்ள கிராமங்களிலும் 200-க்கும் மேற்பட்ட பொதுமக்களை ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் படுகொலை செய்ததாகக் கூறப்படுகிறது. மேலும், சண்டையில் 16 குரதுப் படையினரும், 54 பயங்கரவாதிகளும் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-5)

# இதற்கும் போட்டி

உடற்குறைபாடுகள்கொண்ட நாய்களை தத்தெடுத்து வளர்ப்பதை ஊக்குவிக்கும் வகையில், உலகின் அவலட்சணமான நாயைத் தேர்ந்தெடுக்கும் போட்டி அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் நடைபெற்றது. இதில் உலகம் முழுவதிலும் இருந்து இறுதிச்சுற்றுக்கு முன்னேறிய 27 நாய்கள் தங்கள் உரிமையாளருடன் கலந்து கொண்டன.

இதில் நீதிபதியாக உள்ளவர்கள் நாய்களை முதலில் பார்க்கும் போது ஏற்படும் உணர்வு, அதன் வழக்கத்திற்கு மாறான நடவடிக்கைகள், இயற்கையான அழகற்ற தன்மை, ரசிகர்களின் உணர்வு ஆகியவற்றை கருத்தில் கொண்டு உலகின் அவலட்சணமான நாயை தேர்ந்தெடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், இந்த வருடத்திற்கான உலகின் அவலட்சணமான நாயாக அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தைச் சேர்ந்த 10 வயதான 'க்வாசி மோடோ' என்ற பிட்புல் மற்றும் டச்சு இனக்கலப்பு நாய் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது வருடமாக நடத்தப்படும் இந்த விழாவிற்கு சமூக ஆர்வலர்கள் மற்றும் நாய்களை வளர்க்கும் பொதுமக்களிடையே கடும் எதிர்ப்பு நிலவி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-5)




## பாலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிக்கும் வத்திக்கான் ஒப்பந்தம் கையெழுத்தானது

பாலஸ்தீனத்தை தனி நாடாக அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கும் தனது நடவடிக்கையை உறுதி செய்யும் நடவடிக்கையாக பாலஸ்தீன அரசுடன் முறையான ஒப்பந்தம் ஒன்றில் வத்திக்கான் கையொப்பமிட்டுள்ளது.

தனது இந்த நடவடிக்கை இஸ்ரேலியர்களுக்கும்பாலஸ்தீனர்களுக்கும் இடையிலான சமாதானத்தை ஊக்குவிக்கும் என்று வத்திக்கான் தெரிவித்துள்ளது.பாலஸ்தீன அரசின் கட்டுப்பாட்டில்இருக்கும்பிரதேசங்களில் கத்தோலிக்க தேவாலய செயற்பாடுகளை இந்த ஒப்பந்தம் மேம்படுத்தும்.இந்த நடவடிக்கை அவசரமான ஒன்று என்று வர்ணித்திருக்கும் இஸ்ரேலிய அரசு, வத்திக்கானுடனான தனது உறவை இது பாதிக்கும் என்றும் எச்சரித்துள்ளது. ஆனால இந்த ஒப்பந்தத்தை வரவேற்பதாக பாலஸ்தீன அதிகாரிகள் தெரிவிதது்ள்ளனர்.

பாலஸ்தீனஅரசை2013ஆம் ஆண்டு வத்திக்கான் முதன் முதலாக அங்கீகரிப்பதாக அறிவித்தது. அந்த அங்கீகாரத்தை கடந்தமாதம் முறையான ஒப்பந்தத்தின் மூலம் உறுதி செய்துள்ளது. (இ-5)

# அல்ஷபாப் தாக்குதல் 50 பேர் படுகொலை

### ஐ.நா. கண்டனம்



(மொகாடிஷு)

சோமாலியாவில் உள்ள ஆபிரிக்க ஒன்றியத்தின் இராணுவ முகாம் மீது கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை ஐநா சபையின் செயலாளர் நாயகம் பான் கீன் மூன் கண்டித்துள்ளார்.

இந்த தாக்குதலில் உயிரிழந்த புருண்டி நாட்டின் அமைதப்படையினருக்கு அறிகை ஒன்றில் அவர் அஞ்சலி தெரிவித்திருக்கிறார்.

இதில் உயிரிழந்தவர்களுக்கு ஐரோப்பிய ஒன்றியமும் தமது அனுதாபங்களை தெரிவித்துள்ளது.

சோமாலியத் தலைநகர் மொகாடிஷுவுடன் பாய்டோ நகரை இணைக்கும் வீதி ஒன்றில் அமைந்துள்ள இநத இராணுவ தளத்தின் மீது இஸ்லாமியக் குழுவான அல் ஷபாப் மேற்கொண்ட தாக்குதலில் 50 படையினர் பலியாகியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

முஹமது நபியின் கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படுத்தியமை என்று அல்ஷபாப் குழு கணித்த ஒன்றுக்காக பழிவாங்கும் நோக்கிலேயே இந்த தாக்குதலை தாம் மேற்கொண்டதாக அந்த குழு தெரிவித்திருக்கிறது. (இ-5)

# உக்கிர வெயிலால் உயிரிழப்பு அதிகரிப்பு

## இதுவரை 1242 பேர் பலி

பாகிஸ்தானின் சிந்து மாகாண தலைநகர் கராச்சியில் உள்ள பல்வேறு அரசு வைத்தியசாலைகளில் நேற்று முன்தினம் 'ஹீட் ஸ்ட்ரோக்' எனப்படும் வெயிலினால் ஏற்படும் வாதத்தால் 32 பேர் பலியானதை யடுத்து, பாகிஸ்தானில் வெயிலின் கோரத் தாண்டவத்திற்கு பலியானவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 242 ஆக அதிகரித்துள்ளது.

பாகிஸ்தானின் தெற்கு பகுதியில் 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடுமையான வெப்பநிலை நிலவி வருகிறது.

இதனால், மாகாண தலைநகர் கராச்சியில்பெரும்பாலான உயிரிழப்பு ஏற்பட்டு ள்ளது. மேலும் பலர் வெயில் தொடர்பாக ஏற்படும் காய்ச்சல், உடல் வறட்சி மற்றும் குறைந்த இரத்த அழுத்தம் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் தீவிர சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

அரசு மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் வெப்ப பக்கவாதம், உடல் சோர்வு மற்றும் குறைந்த அழுத்தம் காரணமாக மேலும் பலர் பலியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# துனீசியாவில் மேலும் தாக்குதல்

## பிரிட்டன் எச்சரிக்கை

(துனீசியா)

துனீசியாவில், சுற்றுலா மையங்கள் மீது இஸ்லாமியவாத தீவிரவாதிகள்மேலும் தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என பிரிட்டன் எச்சரித்துள்ளது.

சமூக வலைத்தளங்கள் மூலமாக தீவிரவாதக் குழுக்களால் ஈர்க்கப்பட்ட தனிநபர்கள் மூலம், தாக்குதல்கள் மேற்கொள்ளப்படக் கூடும் என பிரித்தானிய வெளிவிவகாரச் செயலகம் தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை, துனீசியாவின் சூஸில் உள்ள கடற்கரையில் தனியாக வந்த துப்பாக்கிதாரி ஒருவர், துப்பாக்கிச் சூடு நடத்தியதில் பலியான 38 பேரில், குறைந்தது 15 பேர் பிரித்தானியப் பிரஜைகளாவர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு, இந்தத் தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவித்து நூற்றுக்கணக்கானவர்கள் ஊர்வலம் சென்றுள்ளனர். (இ-5)

# தீ விபத்தினால் 500 பேர் பாதிப்பு



கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற இசைக் கச்சேரி ஒன்றில் திடீரென பரவிய தீ பார்வையாளர்கள் மத்தியில் பரவிய சம்பவம் தாய்வான் நாட்டில் இடம்பெற்றுள்ளது.

500 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 141 பேரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கள் கூறுகின்றன.

சுமார் ஆயிரம் பேர் கலந்து கொண்ட இசைக் கச்சேரி நடைபெற்றுக் கொண்டிருந்த போது திடீரென வெடித்த ஒருவித பவுடரினாலேயே மேற்படி தீ விபத்து ஏற்பட்டதாக முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (இ-5)



புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி சி.வித்தியாவின் 45 ஆவது நாள் நினைவு நிகழ்வுகள் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் தாயார் சுடர் ஏற்றுவதையும் சகோதரி உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையு-ம் படங்களில் காணலாம்.

# பெரும்பான்மை பலத்துடன் ஐ.தே.க. ஆட்சி அமைக்கும்

## மங்கள நம்பிக்கை

(கொழும்பு)

**மூன்றில் இரண்டு அதிகாரம் கொண்ட ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதி உருவாக்கப்படும் என முன்னாள் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

கும்புருபிட்டிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாங்கள் ஐக்கிய தேசிய கட்சி என்ற ரீதியில் தனியாக போட்டியிட்டு நாடாளுமன்றத்தினுள் அதிக ஆசனங்களை பெற்றுக் கொண்டு தனியாக ஆட்சி செய்ய முடியும்.

எனினும் இந்த நாட்டிற்கு ஒற்றுமையான அரசியல் அவசியம் என்பதனால் எங்கள் வெற்றிக்கு பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உட்பட அனைத்து குழுக்களையும் இணைத்துக்கொண்டு மூன்றில் இரண்டு அதிகாரம் கொண்ட ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தை அமைப்போம்.



அனைவரையும் இணைத்துக் கொள்ள ஆயத்தம் என்ற போதிலும், மோசடியில் ஈடுபட்ட அபய ராம தரப்பினரை ஒருபோதும் இணைத்துக்கொள்வதில்லை.

மகிந்த ராஜபக்ஷவை மக்கள் துரத்தியது பின் கதவின் ஊடாக மீண்டும் அரசாங்கத்திற்குள் நுழைவதற்கல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## பொதுத் தேர்தலில் தனித்துப்போட்டி முன்னிலை சோசலிச கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தனித்து போட்டியிட முன்னிலை சோசலிச கட்சி தயாராகியுள்ளது. அதன் பிரசார செயலாளர் புபுது ஜய கொட இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் பலர் தாங்கள் எந்த கட்சியில் போட்டியிடுவது என்று தீர்மானிக்க முடியாத நிலையில் இருப்பதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது என முன்னாள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்படும் போது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மகிந்தவுடன் போட்டியிடுவதா? அல்லது சிறிலங்கா சுதந்திர கட்சியில் போட்டியிடுவதா? என்று தீர்மானித்திருக்கவில்லை.

அவ்வாறான நிலைமையில் இருப்பவர்களால் நாட்டை ஆட்சி செய்ய முடியாது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## தமிழர் வரலாற்று முக்கியத்துவமிக்க கட்டடங்களைப் பாதுகாத்தல் வேண்டும்

### வடக்கு கல்வி அமைச்சர் தெரிவிப்பு

வரலாற்று முக்கியத்துவங்களை நாம் அறிந்து கொள்ள வேண்டும். தமிழர் வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடங்களையும் வரலாற்றுடன தொடர்புடைய கட்டடங்களையும் பாதுகாக்க வேண்டும் எனவும் ஆசிரியர்களை நம்பி பாடசாலைகளுக்கு வருகின்ற மாணவர்களுக்கு ஆசிரியர்களே பாதுகாப்பாக இருக்க வேண்டும் எனவும்வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டு. இளைஞர் விவகார அமைச்சா த.குருகுலராசா தெரிவித்துள்ளார.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்புவிழா நிகழ்வு அணமையில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் தி.மோனபாலன் தலைமையில் நடைபெற்றது. இங்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

எமது முன்னோர்கள் நீண்ட காலங்களுக்கு முன்னர் நிபுணத்துவ அறிவுடன் அமைத்த கட்டடங்களை இன்று அழித்துவிட்டு புதிய கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. இற்றைக்கு 75 ஆண்டுகளுக்கு முன்னர் காற்றோட்டம், சூரிய வெளிச்சம் என்பன இயல்பாகவே உள்ளே வரக்கூடிய வகையில் கட்டடங்கள் அமைக்கப்பட்டன. மின்சாரம் இல்லாதநிலையிலும் மிகுந்த திட்டமிடல்களுடன் முன்னோர்கள் கட்டடங்களை அமைத்தார்கள்.

ஆனால், இன்று அந்தக் கட்டடங்களை அழித்து விட்டு புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. எமது முதுசங்கள் பாதுகாக்கப்படுவதில்லை. இந்தநிலையில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை 75 ஆண்டுகளுக்கு முன்னர் அமைத்த கட்டடத்தை இன்றும் பாதுகாத்து அதில் விழாக்கள் நடத்திக்கொண்டிருப்பது பாராட்டப்பட வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பொன்னாலை என்ற பிரதேசம் வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடம். பனைவளம் உள்ள பிரதேசம். பொன்னாலை வீதியூடாக செல்லும்போது திருவடிநிலை, கீரிமலை உள்ளிட்ட பல வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடங்கள் இருக்கின்றன. இந்தவீதியால் விரைவாக கீரிமலைக்கு செல்லமுடியும் என்ற விடயம் குடாநாட்டிலுள்ள பலருக்கு தெரிவதில்லை.

ஈழத் தமிழர் வரலாற்றில் முக்கியமானவட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றிய இடம் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் என்பதும் இன்று பலருக்கு தெரியாது. ஆக.எமது இடங்களில் வரலாற்று முக்கியத்துவங்களை நாம் அறிந்துகொள்ளவேண்டும். வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடங்களையும் வரலாற்றுடன் தொடர்புடைய கட்டடங்களையும் பாதுகாக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், சங்கானைகோட்டக் கல்விப் பணிப்பாளர் அன்ரனி சாந்தாமரியாம் பிள்ளை, வித்தியாலய பழைய மாணவர்களான ஜேர்மனி வைத்தியர் வைத்திய கலாநிதி நா.பாலமுருகன் மற்றும் வைத்திய கலாநிதி தி.சுதர்மன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர். இங்கு மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## தப்பியோடியுள்ளவர்களுக்கான பொதுமன்னிப்பு காலம் அறிவிப்பு

**இலங்கை விமானப் படையில் இருந்து தப்பிச் சென்றவர்களுக்கான, பொதுமன்னிப்பு காலம் அறிவிக்கப்பட்டுள்ளது.**

**இதன்படி 2009 ஜூன் முதலாம் திகதி முதல் 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் முதலாம் திகதி வரையான காலப்பகுதியில் தப்பி ஓடியவர்கள் பொதுமன்னிப்பு காலத்தில் முறையாக விமானப் படையில் இருந்து விலகுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.**

குறித்த பொதுமன்னிப்பு காலம் ஜூலை முதலாம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது. பொதுமன்னிப்பை பெற விரும்புபவர்கள் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை கொழும்பிலுள்ள விமானப் படைத் தலைமையகத்திற்கு சென்று அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



### குலவீரசிங்கம் லக்சியா

கனடா Montreal ஐ பிறப்பிடமாகவும் Toronto ஐ வதிவிடமாகவும் கொண்ட குலவீரசிங்கம் லக்சியா கடந்த 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 30 ஆம் திகதி காலை 9 மணியளவில் Chapel Ridge Fune ral Home, 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனம் செய்யப்படும்.



### திருமதி இரகுநாதன் தங்கம்மா

கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் உடையார் வளவு புன்னாலைக் கட்டுவன் தெற்கு, டென்மார்க், தெஹிவளை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட இரகுநாதன் தங்கம்மா கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.10 மணியளவில் புன்னாலைக்கட்டுவன் உடையார் வளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் விலங்கன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### இளையதம்பி இராசையா

(இளைப்பாறிய இ.போ.ச.சாரதி

மந்துவிலைப் பிறப்பிடமாகவும் கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி இராசையா நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் ஊற்றல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.




### கார்த்திகேசு நடராசா

வவுனியா நெடுங்கேணி குளவி சுட்டானைப் பிறப்பிடமாகவும் வவுனியா பண்டாரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு நடராசா நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் புதன்கிழமை அன்று பண்டாரிக்குளத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல்தகனம்செய்யப்படும்.

# கோபா அமெரிக்க காற்பந்து தொடர்; ஆர்ஜென்டீனா அரை இறுதிக்கு தகுதி





கோபா அமெரிக்க காற்பந்து தொடரில், ஆர்ஜெனடீனா, கொலம்பியா இடையேயான காலிறுதி போட்டியில் உச்சக்கட்ட பரபரப்பு நிலவியது.

பெனால்டி ஷூட் அவுட்டில் டெவேசின் அபார கோலால் 5-4 என்ற கணக்கில் ஆர்ஜெனடீனா த்ரில் வெற்றி பெற்று அரை இறுதிக்கு முன்னேறியது.

சிலி நாட்டில் நடந்து வரும் கோபா அமெரிக்க காற்பந்து தொடரில், ஆர்ஜெனடீனா, கொலம் பியா அணிகளுக்கு இடையேயான காலிறுதிப் போட்டி வினா டெல்மர் நகரில் நேற்று முன்தினம் அதிகாலை நடந்தது.

லீக் சுற்றில் பிரேசிலை வென்றதில் அதிக நம்பிக்கையுடன் களமிறங்கிய கொலம்பியாவை ஆர்ஜெனடீனா ஆரம்பத்தில் இருந்தே கதி கலங்க வைத்தது.

கப்டன் மெஸ்ஸி, டி மரியா உள்ளிட்ட நட்சத்திர வீரர்களின் அசுர ஆட்டத்தால் போட்டியில் முழுக்க முழுக்க ஆர்ஜெனடீனாவின் ஆதிக்கமே ஓங்கியிருந்தது.

அந்த அணிக்கு கோல் அடிக்க பல வாய்ப்புகள் கிடைத்தன. இருந்த போதிலும், கொலம்பியாவின் கோல் கீப்பர் டேவிட் ஆஸ்பினா தனி ஆளாக போராடி அனைத்து வாய்ப்புகளையும் தடுத்தார்.

குறிப்பாக, 26-வது நிமிடத்தில் ஆர்ஜெனடீனாவின் அகுரோ, கோல போஸ்டின் நடுப்பகுதிக்கு நேராக மிக நெருக்கத்தில் இருந்தபடி அடித்த ஷாட்டை ஆஸ்பினா அபாரமாக தடுத்து களத்தில் தள்ளினார். அந்த பந்து மெஸ்ஸியிடம் சிக்கியது.

இந்த வாய்ப்பை எப்படியும் கோலாக்கியே தீர வேண்டுமென முயன்ற மெஸ்ஸி பந்தை தலையால் முட்டி கோலாக்க முயன்றார். இதையும், அபார டைவ் அடித்த ஆஸ்பினா தனது கையால் தடுத்து, பந்தை வெளியில் தள்ளினார். இந்த இரட்டை தடுப்பால் ஆர்ஜெனடீனா முதல் பாதியில் முன்னிலை பெறும் வாய்ப்பு பறிபோனது. இதே போல 2வது பாதியிலும் ஆஸ்பினா அமர்க்களப்படுத்தினார்.

80-வது நிமிடத்தில், கார்னர் வாய்ப்பில் டி மரியா அடித்த பந்தை, நிகோலஸ் ஒடாமெண்டி மின்னல் வேகத்தில் தள்ளி கோலாக்க முயன்றார். இதை ஆஸ்பினா தனது அபார டைவால் தடுத்தார்.

ஆஸ்பினாவின் விரலை உரசிய பந்து கோல் கம்பத்தில் பட்டு, நூலிலையில் வாய்ப்பு நழுவியது. இதனால் 90 நிமிட ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் கோல் ஏதுமின்றி ஆட்டம் சமநிலையில் இருந்தன.

தொடரின் விதிப்படி, கூடுதல் நேரம் இல்லாமல் பெனால்டி ஷூட்-அவுட் முறை வழங்கப்பட்டது.

விறுவிறுப்பாக நடந்த பெனால்டி ஷூட்-அவுட்டில் ஆர்ஜெனடீனா 5-4 என்ற கோல் கணக்கில் த்ரில் வெற்றிபெற்று அரை இறுதிக்கு முன்னேறியது. டெவேஸ் கடைசி கோல் அடித்து வெற்றி தேடித்தந்தார்.

### விறுவிறுப்பான அந்த நிமிடங்கள்

* பெனால்டி ஷூட்-அவுட்டை கொலம்பியா முதலில் தொடங்கியது. அந்த அணியின் ஜேம்ஸ் ரோட்ரிகஸ் முதல் வாய்ப்பை கோலாக்கினார். அர்ஜென்டினா தரப்பில் கேப்டன் மெஸ்ஸி முதல் வாய்ப்பை கோலாக்கினார்.

* 2வது, 3வது வாய்ப்பில் இரு அணிகளும் கோல் அடித்து சமனில் இருந்தன. 4-வது வாய்ப்பை கொலம்பியாவின் முரியல் வீணாக்கினார். லெவெஸ்ஸி கோல் அடிக்க ஆர்ஜெனடீனா 4-3 என முன்னிலை பெற்றது.

* 5வது வாய்ப்பில் கொலம்பியா கோல் அடிக்க, ஆர்ஜெனடீனாவின் பிக்லியா தவறவிட்டார். இதனால், 4-4 என்ற கணக்கில் சமநிலை ஏற்பட்டது.

*6வது வாய்ப்பில் கொலம்பியாவின் ஜூனிகா அடித்த பந்தை ஆர்ஜெனடீனா கோல் கீப்பர் ரோமிரோ அபாரமாக தடுத்து வெற்றிக்கு வழி வகுத்தார். ஆனால் ஆர்ஜெனடீனாவின் ரோஜோ கோல் அடிக்காமல் கோட்டை விட்டார்.

*7வது வாய்ப்பில் கொலம்பியாவுக்கு விதி விளையாடியது. இதில் முரில்லோ வாய்ப்பை நழுவவிட,ஆர்ஜெனடீனாவின் டெவேஸ அபார கோல்அடித்தார். ஆர்ஜெனடீனா 5-4 என்ற கோல் கணக்கில் வென்றது. (க)

## இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்



இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர், செயலாளர் உட்பட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டனர்.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் அனுர டி சில்வா தலைமையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள இந்தக் குழுவில் செயலாளர் பாலேநதிரா, உப தலைவர்களான பிரிகேடியர் ஹாரியவசம் நளின் றொபேட், பீரிஸ் மற்றும் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க இணைப்பாளர் யாப்பா மற்றும் ரமேஸ் முகமட் ஆகியோர் இடம்பெற்றுள்ளார்கள்.

யாழ்ப்பாணம், அரியாலையில் அமைந்துள்ள உதைபந்தாட்ட பயிற்சி நிலையத்தைப் பார்வையிட்டதுடன் அதன் அபிவிருத்தி பணிகள் சம்பந்தமாகவும் இவர்கள் கலந்துரையாடியுள்ளார்கள். இவர்களை இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவரும் யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்கின் தலைவருமான அன்ரனிப்பிள்ளை, வலிகாமம் உதைபந்தாட்ட லீக் தலைவர் நா.நவரத்தினராசா ஆகியோர் வரவேற்றார்கள்.

இந்தக் குழுவினர் பருத்தித்துறை மற்றும் வடமராட்சி உதைபந்தாட்ட லீக்குகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து அந்தப் பகுதிகளின் உதைபந்தாட்ட அபிவிருத்தி சம்பந்தமாக கலந்துரையாடியுள்ளார்கள். (க)

## மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுத் தொடர்



வடக்கு மலையக விளையாட்டு ஒன்றியம் இணைந்து யாழ். மாவட்ட அணிகளுக்கிடையில் கரப்பந்தாட்ட தொடர் ஒன்று நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு இருபாலாருக்குமிடையில் நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ள கரப்பந்தாட்ட தொடர் எதிர்வரும் 4-ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

எனவே மேற்படி தொடரில் பங்குபற்றவிரும்பும் பாடசாலைகள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் வடக்கு மலையக விளையாட்டு ஒன்றியத்தின் தலைவர் தயாளபாலனுடன் தொடர்புகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (க)

## அரியாலை சனசமூக நிலையத்தின் மேசைப்பந்தாட்ட சுற்றுத் தொடர்



அரியாலை சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குறித்த சனசமூக நிலையத்தினர் மேசைப்பந்தாட்டத் தொடரொன்றினை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

வடமாகாண ரீதியாக இருபாலாருக்குமிடையில் திறந்த தொடராக நடைபெற்ற குறித்த தொடர் எதிர்வரும் நான்காம், ஐந்தாம் திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி தொடரில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அரியாலை சனசமூக நிலையத்தின் தலைவர் செந்தில் குமரனுடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (க)

# ஆயிரமாயிரம் மாணவர்களுக்கு வழிகாட்டியாக விளங்கிய அன்னை சிவத்தமிழ்ச்செல்வி

பெண்களுக்கேயுரிய அற வாழ்க்கையில் மேம்பட்டவராக ஏனைய பெண்களுக்கு வழிகாட்டியாக விளங்கியவர் அம்மையார் அவர்கள். ஆசிரியராக தனது பணியை ஆரம்பித்த இவர் ஆயிரமாயிரம் மாணவர்களுக்கு வழிகாட்டியாக விளங்கினார். தனது ஆசிரியப் பணியின் அனுபவத்தோடு 1965 ஆம் ஆண்டு தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் தனாதிகாரியாகப் பணியைத் தொடர்ந்து 1977 ஆம் ஆண் ஜனவரி மாதம் 20ஆம் திகதி தலைமைப் பொறுப்பை ஏற்று இறைவனடி சேரும் வரையும் தனது வாழ்வை ஆலயப் பணிக்கே அர்ப்பணித்தார்.

1927ஆம் ஆண்டு மகாத்மா காந்தி யா/இராமநாதன் கல்லூரிக்கு வருகைதந்து பெண்களுக்கு ஓர் வேண்டுகோளை விடுத்தார்.

''பள்ளிப்பருவம்முழுந்ததும்பெரும்பாலான பெண்கள் பொதுநலத் தொண்டு வாழ்விலிருந்தும் மறைந்து விடுகின்றனர். 'சைவசமயிகள்' என்று கூறிக்கொள்ளும் இக்கல்லூரியில் பயிலும் மாணவிகளாகிய நீங்கள் அப்படியாக மறைந்து விடாது தொண்டு வாழ்வில் பெருமை பெற்றுயர்ந்த உங்கள் குலத்துதித்த உத்தமப் பெண்மணிகள்போல உலகூட்டும் நல்ல பொதுப்பணிகளாற்றி சமூகத்தில் மகளிர் திலகங்களாக ஒளிபரப்ப முன்வரவேண்டும்'' என்பதே அவ்வேண்டுகோள் ஆகும். அவரது இவ்வேண்டுகோள் வீண் போகாது வந்துதித்தவரே அம்மையார் எனலாம்.

சைவ ஆலயம் ஒன்றினை ஒரு சமூக நிலைக்களமாக- கலைக் கோயிலாக- ஆதுலர் சாலையாக- ஆதரவற்ற பெண்களின் இருப்பிடமாக மாற்றிய பெருமை அம்மையார் ஒருவருக்கே உண்டு என்றால் மிகையாகாது. அவர் தனது ஆலய வெள்ளிவிழா மலரில்,

''கோயிலை மையமாக வைத்து வாழ்பவர்களின் வாழ்வு புனிதமடைகிறது. அவர்கள்து செயல்கள் அனைத்தும் ஈஸ்வர அர்ப்பணமாகிப் பரந்து செறிந்து பயன் கொடுக்கிறது'' எனக்கூறியுள்ளமை இவ்விடத்தில் சிந்திக்கத்தக்கதாகும்.



இற்றைக்கு 45 வருடங்களுக்கு முன்பு சமூக மேம்பாட்டை நோக்கிய சிந்தனைக்கு வித்திட்டவர் அன்னை அவர்கள்.

ஆதரவற்ற பெண்பிள்ளைகளுக்காக 03.02.1982 ஆம் ஆண்டில் துர்க்காபுரம் மகளிர் இல்லம் என்ற இல்லத்தை ஒன்பது பெண் பிள்ளைகளுடன் ஆரம்பித்து சகல வசதிகளுடனும் கூடிய மாடிக் கட்டடம் ஒன்றையும் அமைத்து பிள்ளைகளுக்கு வேண்டிய கல்வி, கலை, கலாசாரம், பண்பாட்டு அம்சங்கள் அனைத்திலும் அறிவுத் திறன் உடையவர்களாக ஆக்கி சமூகத்தில் அவர்களும் தலைநிமிர்ந்து வாழக்கூடிய வகையில் வளர்த்த உத்தமி ஆவார்.

இவரது தன்னல மற்ற சேவையாலும் சமூக மேம்பாட்டு சிந்தனைத்திறத்தாலும் ஏழைகள் மீது காட்டிய பரிவினாலும் இன்று ஆயிரமாயிரம் பெண்பிள்ளைகள் தலை நிமிர்ந்து வாழக்கூடிய வழி வகைகளை ஏற்படுத்திக் கொடுத்தார். ஆலயத்திலேயே முழுநேரமும் தங்கியிருந்து ஆலயப் பணிகளுக்காகவும் துர்க்காபுரம் மகளிர் இல்லத்துக்காகவும் தன் வாழ் நாளை அர்ப்பணித்து இறைவனடி சேர்ந்தவர் இவர்.

புலம்பெயர் தமி ழர்கள், வசதி படைத்தோர்- சமூக நோக்குடையோர்- வள்ளல்கள் யாபேரையும் ஒன்றிணைத்து தமது செல்வத்தின் ஒரு பகுதியை தர்மகாரியங்களுக்குப் பயன்படுத்த வழிகாட்டிய பெருமை இவருக்கே உண்டு.

இவர்களும் தமது செல்வத்தை இவ்வாறான சமூக காரியங்க ளுக்குப் பயன்படுத்தி இறைவனின் அருளுக்குப் பாத்திரமானார்கள்.

தனது எந்தக் கடமைகளிலும் தவறாத- நேர்மையான வழியில் நிறைவேற்றக்கூடிய ஆளுமை மிக்க பெண்ணாக இவர் காட்சி தந்தார். ஒரு பெண்ணால் எதையும் சாதிக்கமுடியும் என்று வாழ்ந்து காட்டினார்.

''கட்டடங்களால் வளர்ச்சி பெற்றதிலும் பார்க்க அறக்கடமைகளினாலும் கண்ணீர் துடைக்கும் சமூகப் பணிகளினாலும் அன்னம் பாலிக்கும் சிறப்பினாலும் உதவி வேண்டி நிற்கும் சமூக நிறுவனங்களுக்குதவும் சிறப்பினாலும் பெருமை பெற்றது இவ்வாலயம்'' என இவர் கூறும் வாசகங்கள் ஆலயத்தின் பணிகளை விரித்துரைக்க வல்லன ஆகும்.


இன்று இப்பணிகளைத் தொடர்ந்தும் மிகவும் சிறப்பான முறையில் நிறைவேற்றும் செஞ் சொற் செல்வர் ஆறு.திருமுருகனும், ஆலய தர்மகர்த்தா சபையினரும் நிர்வாக சபையினரும் இணைந்து ஆற்றும் பணிகளை அமரருலகில் இருந்து ஆசீர்வதித்துக் கொண்டிருப்பார் அம்மையார் அவர்கள்.

திருமதி தவனேஸ்வரி சிவகுமார்
பழைய மாணவி,
துர்க்காபுரம் மகளிர் இல்லம்

## செல்ஃபி


ரவி சஞ்சு


வினோத்


ஆர்.சிறிதரன் - நல்லூர்


வாணி சனசமூக நிலையம் - மூளாய்


திஷாந்தன்


சுலக்ஸன் - வவுனியா

உங்கள் செல்பிக்கள் ஏதும் பொருள் கூறுவதாயோ அல்லது வித்தியாசமான பின்புலத்திலோ இருக்குமாறு அனுப்பி வையுங்கள்.

உங்கள் செல்ஃபிகளை
photosofvalampurii@gmail.com
என்னும் முகவரிக்கு உங்கள் பெயர், முகவரியுடன் அனுப்பிவையுங்கள்.
சிறந்த செல்ஃபிக்கு பரிசில்கள் உண்டு

அரிய குணங்களைக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்தவும் தெரியவேண்டும். –ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இலட்சுமணனின் சிரிப்பும் இராமனை வதைக்குமன்றோ!

திரைப்படங்கள் இன்றுவரை மக்கள் மனங்களில் நின்று நிலைப்பதற்குக் காரணம் திரைப்படத்தின் இறுதியில் வில்லன் தோற்பதாகக் கதை முடிவதாலாகும்.

அதாவது தர்மமும் அதர்மமும் போட்டியிட்டு தர்மம் வெல்வதாகக் கதையை முடிப்பதால், திரைப்படங்களின் ஆயுள் நிலைபெற்றிருக்கிறது.

தமிழ்த் திரைப்படத்தில் மோகன் என்றொரு நடிகர், விதி படத்தின் கதாநாயகனாக நடித்தார்.அந்தப் படம் ஓஹோ என்று பேசப்பட்டது.

இன்றுவரை விதி என்ற படத்தைப் பார்ப்பதற்குப் பலர் ஆர்வப்படுவதுண்டு.

எனினும் அந்தப் படத்தின் கதாநாயகனாக நடித்த மோகன் அதற்குப் பின்னர் திரையுலகில் எழவே முடியவில்லை.

ஒரு கதாநாயகன் வில்லனாக– நேர்மையற்றவனாக நடித்ததன் விளைவு அது.

ஆக,வில்லன் பாத்திரங்களுக்காக படம் பார்ப்பது கிடையாது. கதாநாயகன் என்ற பாத்திரம் தர்மத்தின் வழிநின்று அதனை வெல்ல வைப்பதாலேயே திரைப்படத்தின் மீதான ஆர்வம் மக்களிடம் ஏற்படுகிறது.

விதி படத்தில் கதாநாயகனாக நடித்து வெற்றிப் படத்தை தந்த மோகனின் விதி எப்படி ஆகியது என்று பார்த்தீர்களா?இதுபோலத்தான் அனைத்தும்.

இராமாயணம், பாரதம் என்ற இதிகாசங்களும் தர்மம் வெற்றி பெறுவதையே காட்டி நிற்கின்றன.

எனினும் ஒரு உண்மை உணரப்பட வேண்டும். அதாவது இதிகாசங்கள் சரி, திரைப்படங்கள் சரி இரண்டிலுமே அந்தக் கதையின் இறுதிப் பகுதியைத் தவிர மற்றைய முழுமையிலும் அதர்மத்தின் வழிநிற்கும் வில்லன் சுகபோக வாழ்க்கை வாழ்வதை, அவனுக்குப் பின்னால் பலர் இருப்பதை, அவனால் நல்லவர்கள் வதைபடுவதைக் காண முடியும்.அப்படியானால் வில்லன் தோற்கும் இடமே கதையின் முடிவாக இருக்கிறது.

வாழ்வின் முக்கியமான பகுதியை துன்பத்தில் தொலைத்துவிட்டு தர்மம் வென்றது எனக் கூறுவதில் என்ன பயன் என்று யாரேனும் கேட்பார்களாயின், அதிலும் நியாயம் இருக்கவே செய்கிறது.

14 ஆண்டுகள் வனவாசம்; அசோகவனத்தில் சீதை சிறைவைப்பு ; தந்தை தசரதரின் இறுதிக் கிரியையை செய்ய முடியாத சோகம்; நண்பர்கள் உறவுகளின் உயிரிழப்பு; இதன் பின்னரும் சீதையின் தீக்குளிப்பு ; இலட்சுமணனின் சிரிப்பு அட! இராமனின் பட்டாபிஷேகத்தில் என்ன சுகம்?

ஏதோ தர்மம் வென்றது என்ற முடிவைத் தவிர வேறு எதையும் இராமன் அனுபவித்ததாகத் தெரியவில்லை.இத்தகைய நிலைமையே நிஜ வாழ்விலும் நடக்கிறது.

ஆம்! எதிர்வரும் பொதுத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவும் போட்டியிடவுள்ளார்.

அவருக்கு என்று ஒரு தனியான கூட்டம் வல்லமையோடு இயங்குகிறது.

ஜனாதிபதி மைத்திரி திரைப்படத்தில் வரும் கதாநாயகனாக இருக்கிறார்.

பிரதமர் ரணில் கதாநாயகனுக்கும் இடைஞ்சல் செய்யும் இடைப்பாத்திரம். என்னசெய்வது! வில்லனின் தோல்வி நடக்கவேண்டுமாயின் காலம்தான் வழிவகுக்க வேண்டும்.

கதாநாயகனைவிட வில்லனுக்குப் பலரும் உதவுகின்றனர்.அதற்காகக் காத்திருக்கின்றனர்.

எதுவாயினும் நடைபெறப்போகும் பொதுத் தேர்தல் என்ற நாடகத்தில் கதாநாயகன் வென்று வில்லன் தோற்கும் வகையில் பார்வையாளர்களாகிய பொதுமக்கள் உதவவேண்டும்.

இல்லையேல் என்லாம் அம்போதான்.

# மோசடியாளர்கள் ஆட்சி செய்ய மக்கள் ஒருபோதும் அனுமதிக்கார்

## முன்னாள் பிரதியமைச்சர் தெரிவிப்பு



ஊழல் மோசடிகள் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்கள் வழங்கப்பட மாட்டாது என முன்னாள் வெளிவிவகார பிரதி அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஒகஸ்ட் 17ஆம் திகதி நாடாளுமன்ற தேர்தல் இடம்பெறவுள்ளது. இதற்கான வேட்பு மனுத்தாக்கல் யூலை 6 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி நண்பகல் வரை தாக்கல் செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் இந்தக் கருத்தினை முன்னாள் வெளிவிவகார பிரதி அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறைமையில் மாற்றம் அறிமுகம் செய்யப்படாத போதிலும் அரசாங்கம் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட அரசியல்வாதிகளுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு அளிக்காது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு அளிக்க மாட்டார்கள் எனினும் யார் யார் குற்றவாளிகள் என்பது கட்சிகளுக்கு தெரியும். எனவே நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் செயற்பட வேண்டிய அவசியம் கிடையாது.மேலும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் தம்மை ஆட்சி நடத்த மக்கள் விரும்பவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(எ-11)

## வாழ்வாதாரத் திட்டங்களை முன்னெடுக்க தயாராகவுள்ளோம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வறுமை காரணமாக சட்டவிரோத செயற்பாடுகளை மேற்கொள்ளும் நிலைமை காணப்படுகின்றது. ஆகவே மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் அதனைக் கட்டுப்படுத்த முடியும் என மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற போதைப் பொருள் ஒழிப்பு நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்.

சட்ட விரோத மதுபான உற்பத்தி மறறும் போதைப்பொருட்கள் விற்பனை என்பவற்றை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பது என்பதற்கு அப்பால் முதலில் அதனை உற்பத்தி மற்றும் விற்பனை செய்கின்றவர்கள் தாமாக அச் செயற்பாடுகளைக் கைவிட வேண்டும். அதன் மூலமே இந்தச் செயற்பாடுகளை பெருமளவில் கட்டுப்படுத்தமுடியும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் வறுமையும் இவ்வாறான சட்ட விரோத செயல்களுக்கு காரணமாக அமைகிறது. எனவே சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்களைக் கண்டறிந்து அவர்களின் குடும்பச் சூழல் மற்றும் அன்றாட வாழ்க்கை நிலைமைகள் போன்றவற்றை அறிந்து கொள்ள வேண்டும்.

குறிப்பாக வறுமை நிலையில். உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் சட்ட விரோதச் செயற்பாடுகள் அனைத்தையும் கட்டுப்படுத்தலாம். எனவே வாழ்வா தார திட்டங்களை முன்னெடுக்க நாம் தயாராக உள்ளோம் என்றார். (2)

## கைதி தப்பியோட்டம்

மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து கைதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளார். இந்த சம்பவம் நேற்று அதிகாலை 3.30 அளவில் இடம்பெற்றுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ரோஹன புஷ்பகுமார தெரிவித்தார்.

கைதி தப்பியோடியமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக கொழும்பிலிருந்து புலனாய்வு ஆணையாளர் ஒருவரும். உதவி அத்தியட்சகர் ஒருவரும் மட்டக்களப்பு நோக்கி சென்றுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

கைதி தப்பியோடியமையுடன் சிறைச்சாலை உத்தியோகத்தர் எவரேனும் தொடர்புபட்டுள்ளமை உறுதிசெய்யப்படும் பட்சத்தில். சம்பந்தப்பட்டவரை விசாரணைக்காக பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தப்பியோடிய கைதியை மீண்டும் கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ-5)

## தேர்தல் தொடர்பில் கட்சிகளுக்கு கடிதம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தல் தொடர் பில் பதிவு செய்யப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் தேர்தல்கள் ஆணையாளர் விளக்கக்கடிதங்களை அனுப்பவுள்ளார்.

இதன்போது கட்சிகளின் சார்பில் போட்டியிடவுள்ளவர்களின் பெயர்களை அவர் கோருவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் திணைக்களத்தை பொறுத்தவரையில் குறைந்தளவு காலமே ஆயத்தப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அனைத்து விடயங்களும் உரிய திகதிகளில் நடைபெறுவதை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது.

இதன் அடிப்படையிலேயே அரசியல் கட்சிகளுக்கு கடிதங்கள் அனுப்பப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் சின்னங்கள் தொடர்பில் அடுத்த வாரம் அளவில் இறுதிப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இலங்கையில் 64 கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தநிலையில் எதிர்வரும் ஓகஸ்டில் நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடாவிட்டால். நான்கு கட்சிகளின் நிலை குறித்து ஆராய வேண்டியேற்படும் என்று ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### தற்காலத்திற்கேற்ப உடற்பயிற்சி



நினைவுக்கு எட்டாத காலமுதற்கொண்டே பருவநிலை. வாழ்க்கை முறை. இன்னும்இதர பழக்க வழக்கம் ஆகியவற்றைக் கொண்டு பல் வேறு நாடுகளில் பலவகையானஉடற்பயிற்சிகள் உருவாகியுள்ளன. முன்பு வாழ்க்கை முறை மெதுவாக ஊரும்(நகரும்) நிலையில் இருந்த தால் அதற்குத் தக்கவாறு உடற்பயிற்சிகள் உருவாக்கப்பட்டன. அந்தக் காலம் இப்போது மாறிவிட்டது. விரைவு. அழுத்தம்.பரபரப்பு உள்ள சூழ் நிலையில் நாம் வாழ்கிறோம். நமது தேவைகளும் வேறு விதமாகிவிட்டன. ஆகவே. முந்தைய உடற்பயிற்சிகள் இந்தக்கால சூழ்நிலை களுக்கு ஏற்றவையாகா.

இது சம்பந்தமாகப் பல ஆண்டுகள் நான் சிந்தித்து வந்தேன். பல விதமானஆசனங்களையும், உடற்பயிற்சிகளையும் ஆராய்ந்து பார்த் தேன். இப்பயிற்சிகளைநானே செய்து பார்த்து அதன் விளைவுகளை எனது உடல் மூலம் தெரிந்துகொண்டேன். இந்திய மருத்துவத் துறையில் எனக்கு இருந்த அறிவு இந்த ஆய்வுக்குஉதவியது. இறுதியாக ஆடவ ருக்கும். பெண்டிருக்கும். குழந்தைகளுக்கும். பல்வேறுவாழ்க்கை நிலையில் இருப்பவர்களுக்கும். பல்வேறு கால நிலைக்கும் ஏற்றவாறு சிலபயிற்சிகளை ஒழுங்குபடுத்தியுள்ளேன். இந்தப் பயிற்சிகளை ஒழுங்காகச் செய்வதால் உடலுக்குள் பிராணவாயு பரவி என்டோக்கிரின் சுரப்பி கள் இயக்கத்தைஒழுங்குபடுத்தி. இரத்தத்தைச் சுத்தப்படுத்தி அதன் ஓட்டத்தை ஒழுங்குபடுத்துகிறது.

நோய் வராதபடி தடுப்பு நிலையை அதிகப்படுத்துகிறது. ஆரோக்கிய மான உடம்பும்.நீடித்த ஆயுளும் உண்டாகின்றன. அதன் மூலம் ஆன்மீகத் தேட்டத்தில் வெற்றி பெற்றுநாம் இந்த மண்ணுலகுக்கு எதன் பொருட்டு வந்தோமோ அதைத் தெளிவாகத் தெரிந்துகொள்கிறோம். இந்தப் பயிற்சி களை ஒழுங்காகச் செய்பவர்கள் நிச்சயம் நன்மைஅடைவார்கள். எளிய முறைக் குண்டலினி யோகப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள்இந்தப் பயிற்சிகள் செய்து பழகுவதன் மூலம் பெரும் அளவில் நன்மை அடைய லாம்.இந்தப் பயிற்சிகள் அதற்கு அதிக அளவு உதவியாய் இருக்கும்.

# அசாமில் நிலநடுக்கத்தால் மக்கள் பீதி
## நேபாளம், வங்கதேசம், பூட்டானில் அதிர்வு

அசாமில் நேற்று காலை ஏற்பட்ட நிலநடுக்கத்தால் வடகிழக்கு மாநிலங்களில் பீதியும் பதற்றமும் நிலவுகிறது.


அசாமில் நேற்று காலை 6.30 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க நிலவியல் ஆய்வுத்துறை தெரிவித்துள்ளது.

ரிக்டர் அளவையில் 5.6 பதிவான நிலநடுக்கத்தின் மையம் கோக்ரஜார் அருகே 10 கிலோ மீற்றர் ஆழத்தில் இருந்ததாக அது தெரிவித்துள்ளது.

வடகிழக்கு மாநிலங்கள் நேபாளம், வங்கதேசம் மற்றும் பூட்டானில் நிலநடுக்கத்தின் அதிர்வுகளை மக்கள் உணர்ந்தனர்.

நிலநடுக்கத்தின் காரணமாக கட்டடங்களில் விரிசல் ஏற்பட்டதை தவிர்த்து பெரிய அளவிலான பாதிப்புகளோ உயிரிழப்போ இல்லை என தகவல் தெரிவிக்கின்றது.

எனினும் கடந்த ஏப்ரல் மாதம் மற்றும் மே மாதங்களில் நேபாளத்தில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தின் தொடர்ச்சியாக இது இருக்கலாம் என நினைத்து வடகிழக்கு மாநில மக்கள் பீதி அடைந்துள்ளனர். (இ-5)




# திரும்ப அழைக்கப்பட்டார் நியூசிலாந்துக்கான தூதர்



நியூசிலாந்துக்கான இந்தியத் தூதர் ரவி தாப்பர், அப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு டில்லிக்கு திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்.

அந்நாட்டில் தனது வீட்டுப் பணியாளரான இந்தியரை ரவியின் மனைவி அடித்து துன்புறுததியதாக எழுந்த புகாரையடுத்து இந்த நடவடிக்கையை வெளியுறவுத் துறை அமைச்சகம் மேற்கொண்டுள்ளது.

நியூசிலாந்தில் உள்ள இந்தியத் தூதரின் இல்லத்தில் இருந்து 20 கி.மீ. தொலைவில் இந்தியர் ஒருவர் அண்மையில் மயங்கிய நிலையில் கிடந்துள்ளார்.

அவரிடம் அந்நாட்டுப் பொலிஸார் விசாரணை நடத்தினர். அப்போது, ரவி தாப்பரின் வீட்டில், தான் சமையல்காரராகப் பணியாற்றுவதாகவும், அவரது மனைவி ஷர்மிளா தாப்பர் தன்னை அடித்து துன்புறுத்தி அடிமை போல நடத்துவதாகவும் அந்தப் பணியாளர் கூறியதாகத் தெரிகிறது.

இதுபற்றிய தகவலின் அடிப்படையில், விசாரணைக் குழு ஒன்றை இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம், நியூசிலாந்துக்கு அனுப்பி வைத்தது.

அந்தக் குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில், இந்தியத் தூதர் ரவி தாப்பர், டில்லிக்கு திரும்ப அழைக்கப்பட்டுள்ளார் என்று வெளியுறவுத் துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் விகாஸ் ஸ்வரூப் தெரிவித்தார். இந்த விவகாரத்தில் தீவிர விசாரணை நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

### தூதர் மறுப்பு

பணியாளரை தனது மனைவி துன்புறுத்தியதாக எழுந்துள்ள புகாரை, இந்தியத் தூதர் ரவி தாப்பர் திட்டவட்டமாக மறுத்துள்ளார். இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்,

கடந்த ஆண்டில் எனது தந்தை இறந்துவிட்டார். இந்நிலையில், எனது தாயாரை கவனித்துக் கொள்வதற்காகத்தான் நான் இந்தியா திரும்புகிறேன்.

கார் விபத்து ஒன்றில் சிக்கிய எனது மனைவி, அந்தப் பாதிப்புகளில் இருந்து இன்னும் மீளவில்லை. இப்படிப்பட்ட சூழலில், திடகாத்திரமான ஆண் ஒருவரை எனது மனைவி அடித்து துன்புறுத்துவார் என்று கற்பனைகூட செய்ய முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# குஜராத்தில் கன மழை

## ஆசிய சிங்கங்களின் பலி எண்ணிக்கை 9 ஆக அதிகரிப்பு

குஜராத் மாநிலத்தின் அம்ரேலி மாவட்டத்தில் 4 ஆசிய இன சிங்கங்களின் உடல்கள் கிடைத்துள்ளதை அடுத்து பலத்த மழை காரணத்தினால் பலியான சிங்கங்களின எண்ணிக்கை 9 ஆக உயர்ந்துளளது என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இது குறித்து அம்ரேலி மாவட்ட வனத்துறை துணை பாதுகாவலர் எம்.ஆர். குஜ்ஜார் கூறும்போது, மாவட்டத்தின் லிலியா பகுதிக்கு உட்பட்ட இங்கோராலா கிராமத்தில் 4 வயது நிறைந்த பெண் சிங்கம் மற்றும் ஆண் சிங்கம் ஆகியவற்றின் இறந்த உடல்களை வனத் துறை குழு நேற்று கணடெடுத்துள்ளது என கூறியுள்ளார்.

அதனுடன், லிலியா பகுதிக்கு உட்பட்ட கங்கச் கிராமத்திற்கு அருகே உள்ள பிப்பர்டி கிராமத்தில் 5 வயது சிங்கம் ஒன்றின் இறந்த உடல் ஒன்றையும் நாங்கள் கண்டெடுத்துள்ளோம் என அவர் கூறியுள்ளார்.

கிர் வன உயிரின சரணாலயத்தில் பாய்ந்து வரும் சேத்ருஞ்சி ஆற்றின் நீரோட்டத்தில் மூழ்கி இவை பலியாகி உள்ளன என அதிகாரி கூறியுள்ளார்.

இதுபோன்று பவ்நகர் வனத்துறை துணை பாதுகாவலர் ஜி.எஸ். சிங் கூறும்போது, பவ்நகர் மாவட்டத்தில் பலிடானா பகுதியில் உள்ள பிங்லி கிராமத்தில் மற்றொரு சிங்கத்தின் உடல் கண்டெடுக்கப்பட்டு உள்ளது என்று கூறியுள்ளார்.

குஜ்ஜார் கூறும்போது, அழிந்து வரும் நிலையில் உள்ள பிளாக்பக் வகை மான், 2 புள்ளி மான்கள் மற்றும் 70 நீலநிற எருதுகள் ஆகியவற்றின் உடல்களை வனத்துறையினர் கண்டெடுத்துள்ளனர் என்று கூறியுள்ளார்.

இதற்கு முன்பு அம்ரேலி மாவட்டத்தில் 3 மற்றும் பவ்நகர் மாவட்டத்தில் 2 என 5 ஆசிய இன சிங்கங்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டு உள்ளன.

குஜராத்தில் கனமழை பெய்து குறிப்பிட்ட பகுதிகளில் வெள்ள சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ள நிலையில், அம்ரேலியின் வனப் பகுதிகளும் பாதிக்கப்பட்டதை அடுத்து வன விலங்குகள் பலியாகியுள்ளன. (இ-5)

# மகிந்த ராஜபக்ஷ விரும்பினால் சாதாரண வேட்பாளராகப் போட்டியிடலாம்

**விமல் வீரவன்ச, உதயகம்மன்பில போன்றோரே ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தி தமது அரசியல் சுயலாபங்களை நிறைவேற்றிக்கொள்ள முயற்சிக்கின்றனர்.**

மாறாக, சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எவரும் கட்சியைப் பிளவுபடுத்த விரும்பவில்லை.

எனவே, எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் இணைத்துக்கொண்டு ஓரணியில் செயற்பட்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை உருவாக்குவோமென முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிரதம வேட்பாளராக களமிறக்கும் எண்ணமோ, தீர்மானமோ கிடையாது. விரும்பினால் மகிந்த ராஜபக்ஷ சாதாரண வேட்பாளராகப் போட்டியிடலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார.

எதிர்வரும் பொதுத் தேர்தல் குறித்து கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் மைத்திரி அணி - மகிந்த அணி என பரவலாகப் பேசப்பட்டது. ஆனால், அவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு ஓரணியில் செயற்படுவதற்கான வேலைத்திட்டங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்டு வருகின்றார்.

சிறுபான்மைக் கட்சிகள், சிறு கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புக்கள் ஒன்றிணைந்தே மைத்திரிபால சிறிசேனவை வெற்றிபெறச் செய்தார்கள்.

இவர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதம வேட்பாளராகக் களமிறக்க விரும்பவில்லை.

அதேபோன்று நாமும் அதற்கு விரும்பவில்லை. ஆகையினாலேயே அவருக்குப் பிரதமர் வேட்பாளராக போட்டியிடக் கட்சி வாய்ப்பளிக்க மறுத்துள்ளது.

இருந்த போதிலும் கட்சியை பிளவுபடுத்தாமல் தேர்தலை எதிர்கொள்ளவே சுதந்திரக்கட்சி விரும்புகின்றது.

அதேபோன்று நாம் எமது பங்காளி கட்சிகளை ஒன்றிணைத்துக் கொண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாகப் போட்டியிடவுள்ளோம். அதேவேளை, இம்முறை எமது முன்னணியில் மேலும் சில புதிய கட்சிகளும் ஒன்றிணையவுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எதிர்வரும் தேர்தலில் அமோக வெற்றி பெற்று ஆட்சியமைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

அதேவேளை மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் தேர்தலில் தனித்துப் போட்டியிடமாட்டார் என்றே நாம் எதிர்பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# சுதந்திரக் கட்சியுடன் இணைந்து போட்டியிட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானம்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஶ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஆறுமுகம் தொண்டமான் மற்றும் கட்சி தலைவர் முத்து சிவலிங்கம் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் இத் தர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொட்டகலை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலுக்கு கட்சியின் சிரேஷ்ட உறுபபினர்களும் கலந்து கொண்டுள்ளனர்.


அதற்கமைய 05 மாவட்டங்களுக்கு வேட்பாளர்களை நியமிப்பதற்கு இதன் போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

நுவரெலியா, பதுளை, கண்டி, இரத்தினபுரி மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களிலே வேட்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்திற்கு மாத்திரம் 05 வேட்பாளர்களை நியமிப்பதற்கு கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

## அசார் அலி சதம்

# வருண பகவான் தலையிட்டும் இலங்கை அணி ஆதிக்கம்



இலங்கை- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 2-வது டெஸ்ட் கொழும்பில் நடை பெற்று வருகிறது. நாணயச்சுழற்சியில் வென்று முதலில் பேட்டிங் செய்த பாகிஸ்தான் அணி முதல் இன னிங்சில் 138 ஓட்டங்களில் சுருண்டது.

பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய இலங்கை 315 ஓட்டங்கள் சேர்த்தது. 177-வது ஓட் டங்கள் பின்தங்கிய நிலையில் 2-வது இன்னிங்சை தொடங்கிய பாகிஸ்தான் அணி 3-வது நாள் ஆட்ட முடிவில் 2 விக்கெட் இழப் பிற்கு 171 ரன்கள எடுத்திருந்தது. அசார் அலி 64 ரன்களுடனும், யூனிஸ்கான் 23 ரன்களுடன் களத்தில் இருந்தனர்.

நேற்று 4-வது நாள் ஆட்டம் தொடங்கியது. தொடர்ந்து விளை யாடிய யூனிஸ்கான் மேலும் 17 ரன்கள் எடுத்து 40 ரன்களில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த கப்டன் மிஸ்பா உல் ஹக் 22 ரன்னில் அவுட்டாகி ஏமாற்றம் அளித்தார். முக்கிய இரண்டு விக் கெட்டுகள் அடுத்தடுத்து இழந்ததால் பாகிஸ்தான் அதிக ரன்கள் குவிக்கும் வாய்ப்பை இழந்தது.

ஒருபுறம் விக்கெட் வீழ்ந்தாலும் மறுமுனையில் அசார் அலி சிறப் பாக விளையாடி சதம் அடித் தார். சதம் அடித்த அவர் 117 ரன்களில் ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி 2-வது இன்னிங்சில் 329 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் பிரசாத் நான்கு விக்கெட்டுகளும், சமீரா மூன்று விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

பாகிஸ்தான் 152 ரன்கள் அதிகம் பெற்றுள்ளதால் இலங்கை அணிக்கு 153 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப் பட்டுள் ளது. இலங்கை அணி 2-வது இன்னிங்சை தொடங்கும் முன் மழை குறுக்கீட்டது. அத்துடன் 4-வது நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

இன்னும் ஒருநாள் மீதமிருக் கையில் 153 ரன்கள்தான் வெற்றி க்கு தேவை என்பதால் இலங்கை அணி வெற்றி பெற்று டெஸ்ட் தொடரை 1-1 என சமநிலைப்படுத்த வாய ப்பு உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான 3-வது மற்றும் கடைசி டெஸ்ட் 3ந்தேதி தொடங்குகிறது.





## ஜெனிவா அறி...

அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்டவர்களுக்கு எதி ராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டுள்ளன.

போர்க்குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகவே குற்றம் சுமத்தப் பட்டுள்ளது. திட்டமிடல் கட்ட ளையிடல் உள்ளிட்ட பல்வேறு அடிப்படையில் குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு ஒப்படைக்கப் படும் ஆவணம் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் வெளிப் படுத்தப் படவுள்ளது. (எ-11)

## நான்கு மணி...

பொருள் பாவனை பரப்பப்படு கின்றது. ஒரு சமூகத்தின் பொரு ளாதாரம், சுகாதாரம், ஆளுமை, கலாசாரம், கல்வி நிலை போன்ற வற்றை அழிப்பதற்கு இந்த ஆயுதம் பயன்படுத்தப்படுகிறது. இத் தாக்கத்தில் இருந்து எமது சமூ கத்தை காப்பாற்றுவதற்கு பல ருடைய கூட்டு முயற்சிதான் மிக முக்கியம்.

ஏனைய மாவட்டங்களை விட யாழ் மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனை கூடுதலாக அதிகரித்து காணப்படுகிறது. இதை தடுப்பதற்கு பாடசாலை மட்டம் சமூக மட்டத்தில் பல்வேறு முயற்சிகள் தற்போது எடுத்துக் கொள்ளப்பட்டு வருவது வரவேற் கத்தக்கது.

இந்த போதைப்பொருள் தாக்கத் தின் ஒரு பகுதியைதான் நாம் தற்போது பார்த்துக்கொண்டு இருக் கிறோம்.மறைமுகமா இது பல் வேறு வடிவங்களில் பாரிய தாக் கத்தை எம் மத்தியில் ஏற்படுத்திக் கொண்டு இருக்கின்றது.

போதைப்பொருள் பாவனை யின் மறைமுகமான விளைவு தான் தற்கொலை முயற்சி. இது பாரிய அளவில் அதிகரித்து செல் கின்றது. தற்கொலைக்கு முயற்சிப் பவர்கள் நேரடியாக பாதிக் கப்பட்டு இருக்கலாம் அல்லது குடும்பததில் உள்ளவர்கள போதை பொருள் பாவனைக்கு அடிமையாகி இருந்தால் அதன் காரணமாக கலாசாரத்தில் குழப்ப நிலை மற்றும் கல்வி நிலை பாதிப்பால் உளரீதியாக பாதிக்கப்பட்டு இந்த தற்கொலை முயற்சி நடைபெறு கின்றது.

யாழ் போதனா வைத்தியசாலை யின் அவசர சிகிச்சை பிரிவில் தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட வர்கள்தான் அதிகமாக அனு மதிக்கப்படுகிறார்கள். இதனால் இயற்கையாக நோய்வாய்ப்பட்ட வர்களை உரிய சிகிச்சைக்கு உட் படுத்துவது கடினமாக உள்ளது. அவர்களுக்குரிய போதுமான வசதிகள் செய்து கொடுக்க முடிய வில்லை.

அதேபோல் வைத்தியசாலை விடுதிகளிலும் போதைப்பொரு ளால் மறைமுகமாக பல்வேறு விதத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தான் அதிகளவில் அனுமதிக்கப் பட்டுள்ளார்கள். இதனால் பெரும் தொகையான சக்தி வளம் விரய மாவதோடு பெரும் சிரமத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த போதைப்பொருள் பாவ னையால் சமுதாய அளவில் கல்வி நிலை பாதிக்கப்பட்டு பொருளா தாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற் படுத்தியுள்ளது.

எனவே எமது சமுதாயத்தை மீட்டெடுக்க அனைத்து துறை யினரும் ஒன்றாக இணைந்து இந்த போதைப் பொருள் பாவ னையை தடுக்க முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-9)

## ஆசன...

இதுதொடர்பில் அவர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில், திரு கோணமலை, யாழ்ப்பாணம் மற்றும் அம்பாறை ஆகிய மாவட்ட ங்களில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு இடை யிலான ஆசன ஒதுக்கீடு தொடர் பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கெனவே முடிவெடுத்துவிட்டது.

அதேவேளை, மட்டக்களப்பு மற்றும் வன்னி தேர்தல் மாவட் டங்களுக்கான ஆசனப் பகிர்வு தொடர்பில் முடிவு எடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இந்த இரண்டு மாவட்டங் களுக்குமான ஆசன ஒதுக்கீடு தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்பட்ட பின்னர், எந்த மாவட் டத்தில் எந்தக் கட்சிக்கு எத்தனை இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்ற விபரம் வெளியிடப்படும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனியான கூட்டணியாகவே போட் டியிடும். ஐக்கிய தேசியக் கட்சி யுடனோ அல்லது வேறு எந்தக் கட்சியுடனோ கூட்டுச் சேராது.

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பில் உள்ள கட்சிகளுக்கு இடையில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக இன்னமும் கருத்து வேறுபாடுகள் இருக்கின்ற போதி லும், தேர்தலில் எல்லாக் கட்சி களும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு என்ற குடையின் கீழேயே போட்டியிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## மகிந்தவின்...

ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணியளவில் மெதமுலானவில வைத்து அறிவிப்பார் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக வெளி டப்பட்டு வரும் கருத்துகளுக்கு ஜூலை மாதம் 1ஆம் திகதி அவரின் பதில் வெளிவரும் என ரொகான் வெலிவிட்ட கூறியுள் ளார்.

எனினும், இது தொடர்பிலான தனது நிலைப்பாட்டை மகிந்த ராஜபக்ஷ மெதமுலானவில் செய்தி யாளர் சந்திப்பிலா அல்லது பொதுக்கூட்டத்திலா அறிவிப்பார் என்பதை ரொகான் வெலிவிட்ட தெரிவிக்கவில்லை.

அதேவேளை, மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணியின் பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடுவதில் எவ்வித சந்தேக மும் இல்லை என்று முன்னாள் அமைச்சர் குமார வெல்கம தெரி வித்துள்ளார். (எ-11)

## மைத்திரி...

1ஆம் திகதி இறுதி முடிவுக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது.

அதேவேளை, மகிந்த ராஜ பக்ஷவை பிரதமர் வேட்பாளராக அறிவிக்க மைத்திரிபால சிறிசேன தரப்பு மறுத்தால், தனித் துப் போட்டியிடும் முடிவை மகிந்த ராஜபக்ஷ அன் றைய தினம் அறிவிப்பார் எனக கூறப்படுகிறது. (எ-11)

## தேர்தலை...

பதற்கு ஐரோப்பிய ஒன் றியம் பொதுநலவாயம் இந்தியாவிலிருந்து கண் காணிப்பாளர்களை அழை ப்பதற்கு திட்டமிட்டு ள்ளதாக சுதந்திரமான, நியா யமான தேர்த லுக் கான மக்கள் அமைப்பு (பவ்ரல்) தெரிவித் துள் ளது. (எ-11)


**கண்ணகியே குளிர்ந்தருள்வாய்**

மாத மும்மாரி பொழிந்திங்கே
மருதமும் நெய்தலும் செழித்திடவும்,
பூவனமாயெம் புகலிடம் மாறிடவும்
பூம்புகார் உறைந்திடும் கண்ணகியே
தேவரும் முனிவரும் போற்றி செய்யும்
தேவியாம் உமையவள் மறுவடிவே,
ஊர்கூடி ஆண்டொரு பொங்கல் வைப்போம்
யாபேரும் மகிழ்ந்திடவே குளிர்ந்தருள்வாயே!

சிறுபுலத்தான்,
மண்டைதீவு

மண்டைதீவு கண்ணகை அம்மனுக்கு இன்று பொங்கல் அதையொட்டி இக் கவிதை பிரசுரமாகிறது.

## மகிந்தவை வெற்றி...

அதிகாரத் திற்கு பழைய முறை
கொண்டு வந்து யிலேயே ஊழல்

மோசடிகளை மேற் கொண்டு வெள்ளை வான் கலாச்சாரத்தை ஆரம்பித்து இந்த நாட்டில் ஆட்சி செய்வதே சிலருக்கு அவசியமாக இருக்கின்றது.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியை மீண்டும் அதிகாரத்திற்கு கொண்டு வந்து மீண்டும் இந்நாட்டில் குடும்ப ஆட்சியை ஆரம்பிக்க வேண்டுமா? அப்படி இல்லை என்றால் இந்நாட்டில் நல்லாட்சி உருவாக்கி நாட்டின் எதிர்காலத்தை மேம்படுத்த வேண்டுமா என தேர்தலின்போது மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமர் வேட்பாளராக வேண்டும் என்றால் தேர்தலில் களமிறங்க வேண்டும்.

எனினும் அவரை இம்முறை வெற்றி பெற செய்வதற்கு நாட்டில் பிரபாகரன் இல்லை.

எனவேஇம்முறை மகிந்த தோற்பது உறுதி. நான் பிரதமராவதற்கு நினைப்பது சுகபோகம் அனுபவிப்பதற்கல்ல.

நாட்டை வளர்ச்சியான பாதைக்கு கொண்டு சென்று இளைஞர்களுக்கு சிறப்பானதொரு எதிர்காலத்தை பெற்றுக் கொடுப்பதே எனது அவசிய மாகும் என பிரதமர் ரணில் விக்ரமசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் பொது தேர்தலில் பிரதமர் வேட்பாளராக போட்டியடுவதற்கு களமிறங்குமாறு தான் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷவுக்கு அழைப்பு விடுப்பதாக ரணில் விக்ரசிங்க தெரிவித்துள்ளார்.

தம்புள்ளை ஐக்கிய தேசிய கட்சி அமைப்பாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு ரணில் விக்ரமசிங்க இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

தேர்தலுக்கு அஞ்சுவதென்றால் வீட்டோடு இருக்குமாறு பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ராஜபக்ஷ ஆட்சியை தேர்தலின் மூலம் தோல்வியடைய செய்ததாகவும், இம்முறை பொது தேர்தலில் மகிந்த ராஜபகஷ ஆட்சியை குழிதோண்டி புதைக்கவுள்ளதாகவும் ரணில் விக்ரமசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-11)


பண்டிதர் செ.திருநாவுக்கரசு அவர்களின் வெளியீடுகள் விற்பனையாகிக் கொண்டு இருக்கின்றன

வரலாறு வினாவிடை தரம் - 10
சைவநெறி துணை நூல் தரம் - 10
தமிழ் இலக்கியத் தொகுப்பு துணைநூல் தரம் - 10, 11

சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்
சீரடி விநியோகஸ்தர்கள் : 0773901877
(957)

# பதவி வெற்றிடங்கள்

உங்களுக்கு வெளிநாட்டில் பணிபுரிய விருப்பமா? கைநிறைய உழைப்பதற்கு ஆசையா? இன்றே எம்முடன் இணைந்து நீங்களும் உங்கள் தரத்தை சர்வதேச ரீதியில் உயர்த்துங்கள்.

- யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய பிரதேசத்தினருக்கு முன்னுரிமை.
- அனுபவம் அவசியமற்றது
- தகைமை O/L படித்தவர்கள், படிக்கத்தவறியவர்கள்
- வயதெல்லை 18 - 32
- பயிற்சி அளிக்கப்படும், தொழில் நிரந்தரம்
- சம்பளம் 15, 000 /= - 60, 000 /=

தொடர்புகளுக்கு ;
0773366453
0777981471
(C-1432)

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



அழையுங்கள் - 077 29 31 062
CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna,
(பெருமாள் கோவில் அருகாமை)
(C-1397)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

ஃபிரெஞ்சு மொழி



கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் நம்பகரமான சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). இலங்கையில் நாம் மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTER NATIONAL DIPLOMAS ஐ வழங்குகிறோம். மொழிபெயர்ப்புகள். ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் ஆசிரியர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்). யாழ், வன்னி, மன்னார், தீவகத்தைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA, SWITZERLAND, BELGIUM... செல்கிறார்கள்.

வகுப்பு ஆரம்பம் விரைவில். முற்கூட்டியே பதிவுசெய்யுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி → புகையிரதக்கடவை → AF or ஆரியகுளம், ஸ்ரான்லி றோட் → நக்கா றோட் → AF
(957)



மீண்டும் O/L உடன்
சுவிஸ், நியூசிலாந்து, சிங்கப்பூர், மலேசியாவில் மாதம் 3 இலட்சத்துக்கு மேல் உழைக்கக்கூடிய
Business & Hotel Management
யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பித்து 6 மாதங்களில் விரும்பிய நாடு செல்லும் விசா உத்தரவாதம்!
கற்கைநெறி ஆரம்பம் ஜுலை 1 புதன்கிழமை காலை 10 மணி
இதுவரை பதிவுசெய்யாதவர்கள் ஜுன் 30க்கு முன்னர் நேரில்வந்து பதிவினை மேற்கொள்ளவும்
வெளிநாடு செல்ல விரும்பாதோருக்கு யாழ், கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்து தருகிறோம்.
15 வருடங்களுக்கு மேற்பட்ட விசா சேவை நிபுணத்துவ அனுபவம் கொண்ட கொழும்பு சட்ட வல்லுநர்கள் ஊடாக...
SIKARAM Get Set for Careers & Take off Your Dreams
எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்...
STUDENT VISA - SPOUSE VISA - DEPENDANT VISA
WORK VISA - SKILLED MIGRATION - VISIT VISA
Sikaram (Pvt) Ltd.
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.(வைத்தியசாலை பின்புறம்)
Call: 077 36 16 798
021 222 00 11


# மரண அறிவித்தல்



## ஆறுமுகம் வல்லிபுரம்

செங்குந்தர் வீதி, கரவெட்டி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் வல்லிபுரம் 26.06.2015 அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சின்னம்மா தம்பதிகளின் அருமைமகனும், காலஞ்சென்றவர்களான சூரியர் சிதம்பரப்பிள்ளை - அன்னபூரணம் தம்பதிகளின் மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், சிவகிருஷ்ணகுமார் (நோர்வே), சிவறஞ்சினி, சிவனேசன், சிவநாதன் (நோர்வே), சிவகரன், சிவறஞ்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தி (நோர்வே), வேலும்மயிலும், தயாளினி, ஜான்சிகா (நோர்வே), தர்மிளா (வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர், நல்லூர்), பிரவீணா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், வினோத், மதிவேணி, வைஷ்ணவன், விதுரன், பிறிசில்லா, பிகலியா, யோசுவா, கிரிஷன், சரணிகா, சந்தோஷ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.06.2015) காலை 11.00 மணியளவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

செங்குந்தர் வீதி,
கரவெட்டி கிழக்கு. (C-1429) குடும்பத்தினர்



# நன்றி, நன்றி, நன்றி

தோற்றம்:- 20.02.1942 மறைவு:- 22.06.2015

## திருமதி சுப்பையா பார்வதி

யாழ்.நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், செட்டிக்குளம் முதலாம் பண்ணை இல. 66 ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி பார்வதி சுப்பையா கடந்த 22.06.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் 25.06.2015 வியாழக்கிழமை செட்டிகுளம் கங்கன்குளம் இந்து மயானத்தில் நடைபெற்றது.

இதன்போது எம்முடன் கூடஇருந்து துக்கத்தை பகிர்ந்து கொண்டவர்களையும், வெளியூர் மற்றும் வெளிநாடுகளிலிருந்து தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்தவர்களையும். இச்சோக நிகழ்வை நடத்தி முடிப்பதற்கு சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

அத்துடன் மிகமுக்கியமாக 25.06.2015 பத்திரிகையில் வெளியான அன்னாரது மரண அறிவித்தல் விளம்பரத்தில் மறைந்த திருமதி பார்வதி சுப்பையா அவர்களின் அன்புச் சகோதர சகோதரிகளான காலஞ்சென்றவர்களான வேலாயுதம் (நெடுந்தீவு), தங்கம்மா (செட்டிக்குளம் மற்றும் கனகர் (கணேசபுரம்-கிளிநொச்சி), நாகேந்திரம் (கல்மடுநகர்-கிளிநொச்சி), சுந்தரம்மா (செட்டிகுளம்) ஆகியவர்களின் பெயர் விபரங்கள் எமது தவறுதல் காரணமாக பிரசுரமாகவில்லை.

இத்தவறையும் சம்பந்தப்பட்டவர்கள் பொறுத்தருளியமைக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

66, முதலாம்பண்ணை, முகத்தான்குளம், செட்டிகுளம். (C-1430)
தகவல்:- குடும்பத்தினர்


BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் கற்கை நெறிகள்

Spoken English with Grammar - Quick Learning Course 1½ Months
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்களின் நலன் கருதி Dictionary, CD/DVD, Tutes போன்றவை இலவசமாக வழங்கப்படும்.
இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.

Diploma In English 2 Months
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
★ எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
★ Excellent Teacher's Panel & Individual Attention
★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.
(C-1426)

உத்தியோகத்தர்கட்கு, மாணவர்கட்கு சனி, ஞாயிறு வகுப்புகள் 20.06.2015 காலை 10.00, மாலை 2.30 ஆரம்பமாகின்றது

Batches Starts On
20.06.2015@10.00am | 29.06.2015@ 9.00am
22.06.2015@ 9.00am | 27.06.2015@ 9.00am | 01.07.2015@ 9.00am

British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road), Above Sathosa SM, Jaffna. Tel :021-2224550
HotLine(S) 0777585913, 0777222422, 0776555677


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.